ओं.

THE

Upanishad Artha Deepika

OR

THE PRINCIPAL UPANISHADS

WITH

Advaita, Visishtadvaita and Dwaita Bhashyas

IN TAMIL.

III.-KATHOPANISHAD.

PUBLISHED BY

A. SIVA ROW,

Of the Registration Department and Translator of Vicharsagar and Isa & Kena Upanishads in Tamil.

உபநிஷதர்த்த தீபிகை

என்னும்

மூன்றுமத பாஷ்யங்களுடன் உபநிஷத்துக்களின்
தமிழ் மொழிபெயர்ப்பு.

III—கடோபநிஷத்து.

குத்தாலம் சப் ரிஜிஸ்தரார் ஏ. சிவராயரால்
பிரசித்தப்படுத்தப்பட்டது.

Madras :
PRINTED BY MESSRS. THOMPSON AND CO., AT THE "MINERVA" PRESS.

1901

[*Copyright and right of translation reserved.*

Price-Rs. 4.

பதிப்புரை.

முதல் சஞ்சிகையில் பதிப்புரையிற் சொல்லிய விவரங்களுடன் ஈசாவாஸ்யம், கேனம் இவ்விரண்டு உபநிஷத்துக்களும் முடிந்தமையால் கடோபநிஷத்தை ஆரம்பித்திருக்கிறேன். இதுவரையிலும் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு பாஷ்யகாரருடைய பாஷ்யாம்சம் அச்சிடப்பட்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு மந்திரத்திற்கும் கீழ் ஒரு பாஷ்யத்தை முற்றிலும் அச்சடித்து பிறகு வேறு பாஷ்யத்தை அச்சடிக்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஒரே மூலத்திற்கு மூன்று மதஸ்தர்கள் மூன்று விதமாய் அர்த்தஞ் செய்வதை ஒரே இடத்தில் பார்க்கும்படி அச்சிட வேண்டியதென்னும் ஆதி உத்தேசம் நிறைவேறாமற் போகுமானதாலும், வெவ்வேறு பக்கங்களில் பாஷ்யங்களை அச்சிடுவதினால் மூன்று அபிப்பிராயங்களை சுலபமாய் பார்க்க சௌகரியப்படாததினாலும், வாசிப்பதிலுண்டாகும் ஸ்வல்ப சிரமத்தைப்பார்க்கிலும் உத்தேசித்தபலன் விசேஷமாயிருப்பதாலும், இனியும் முன்போலவே பாஷ்யங்கள் அச்சிட்டு வரப்படும். ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு பாஷ்ய ஆரம்பத்திலும் மூலபதங்களை அச்சிட்டிருப்பதைக் கொண்டு உத்தேசம் வெளியாகலாம்.

முகவுரை.

கடோபநிஷத்து கட என்னும் முனிசுவரரால் ருஷிகளுக்குச் சொல்லப்பட்டு பிரவிர்த்தித்திருப்பதால் இப்பெயரை அடைந்ததென்று பிரம்மஸ்ரீ பீதாம்பரஜீ என்பவர் தன்னுடைய ஹிந்தி உபநிஷத் மொழிபெயர்ப்பிற் சொல்லியிருக்கிறார். இவ்வுபநிஷத்திற்கு இப்பெயர் வரவேண்டிய வேறு காரணம் யாதொன்றும் தெரியவில்லை.

அதர்வ உபநிஷத்துக்களில் இவ்வுபநிஷத்து ஒன்றென அநேகர் பாவித்தாலும் இது கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சேர்ந்ததே. தைத்தரீய யஜுர்வேதத்தின் ஒரு பிராமணத்தில் நசிகேதஸுடைய கதைசொல்லப் பட்டிருக்கின்றது. இக்கதையில் நாசிகேதாக்கினி சயனத்தின் (யாகத்தின்) ஆதி விவரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த கடோபநிஷத்தில் இக்கதையை வியாஜமாய் வைத்துக்கொண்டு யமன் பரம இரகசியங்களை உபதேசிக்கிறான்.

இந்த உபநிஷத்தில் இரண்டு அத்தியாயங்கள் அடங்கிய இரண்டு பாகங்களுண்டு. ஆதியில் முதலாவது பாகம்தா னிருந்திருக்கலாமென்றும் பிறகு இரண்டாவது பாகம் சேர்க்கப்பட்டிருக்கலாமென்றும் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். எக்காலத்தில் இரண்டு பாகங்களும் ஒன்றாய் சேர்ந்திருக்கலாமென்பது தெரியவில்லை. ஸ்ரீசங்கராசாரியார் பாஷ்யம் எழுதுவதற்கு முன்னமே அவைகள் சேர்ந்திருக்க வேண்டு மென்பது நிச்சயம்.

இரண்டு பாகங்கள் வெவ்வேறு என்பதற்கு பலகாரணங்கள் காணப்படுகின்றன. (1) முதல் பாகமே பூர்ணமா யிருக்கிறது. இந்த பாகத்தின் கடைசியில் பலத்தைக் கூறி உபநிஷத்து முடிவு பெறுகிறது. (2) இரண்டாவது பாகத்தில் விசேஷமான நூதன உபதேசம் யாதொன்று மில்லை. முதல் பாகத்திற் பிரஸ்தாபிக்கப்பட்ட விஷயங்களே இரண்டாவதில் விவரிக்கப்பட் டிருக்கின்றன. (3) இரண்டாவது பாகத்தில் விசேஷமாய் வேத வாக்கியங்களே ஆதாரங்களாய் கூறப்பட்டிருக்கின்றன. பிராமண பாகங்களில் तदपि एषश्लोको भवति ததபி ஏஷஶ்லோகோ பவதீ முதலிய வசனங்களால் ஆதாரங்கள் கூறப்படுவதுபோல் இவ்விடத்திலும் एतद्वै तत् ஏதத்வைதத் என்கிற பதங்களால் ஆதாரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. (4) இரண்டு அத்தியாயங்களிலும் வாசகதோரணையில் பேதங்காணப்படுகின்றது. முதலாவது அத்தியாயத்தில்

சிஷ்யனை நசிகேதஸ் என்கிறபெயராலும், இரண்டாவது அத்தியாயத்தில் விசேஷமாய் கௌதம என்கிற பெயராலும் ஒரே ஒருதடவை கடைசியில் நாசிகேத என்கிற பெயராலும் குறிப்பிட்டிருக்கிறது. முதலாவது பாகத்தில் கௌதம என்கிற பெயரால் சிஷ்யன் குறிப்பிடப்பட்டதாக தெரியவில்லை. (5) அதர்வ ஜாப்தாவில் இவ்விரண்டு பாகங்களும் வெவ்வேறு உபநிஷத்துக்களாக கூறப்பட்டிருக்கின்றன. இக்காரணங்களால் இந்த இரண்டு பாகங்களும் காலாந்தரத்திற் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

இவ்வுபநிஷத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் மூன்று பாகங்களிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் வல்லி (கொடி) என்று பெயர். ஆகவே இதில் ஆறுவல்லிகள் அடங்கியிருக்கின்றன. இந்த வல்லி என்னும் பெயரை தைத்திரீய உபநிஷத்திலும் காணலாம். ஒரு மரத்தின் கிளைகளை கொடிகள் ஆசிரயித்திருப்பதுபோல், இவைகள் வேதசாகை (பிரிவு)களை அடுத்திருப்பதால் இவைகளை வல்லிகள் என்று கூறலாம். அல்லது பிரிவு என்னும் அர்த்தத்திலேயே வல்லி என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கலாம்.

இந்த உபநிஷத்து வெகு பிரசித்தமானது. இதிற்காணப்படும் மேன்மையான மனோபாவங்கள், அவைகளின் வாசகபதங்கள், உபமானங்கள், மனிதன் கேட்கக்கூடிய உத்க்ருஷ்ட கேள்விகளுக்கு உத்தரம், சிஷ்யனுடைய தீவரமான வைராக்கியம், நசுவரமான இஹபரபோக யோகங்களில் வெறுப்பு, முதலியவைகளை உத்தேசித்துப்பார்க்கையில் ஜீவப்பிரம்ம ஐக்கியத்தைப் பிரதிபாதிக்கும் சிறந்த உபநிஷத்துக்களில் இந்த கடம் ஒன்றென்பது நிச்சயமே.

உபநிஷத்தின் விஷயங்களின் விபாகவிவரம் முதல் பார்வையில் ஸ்பஷ்டமாய் தெரியவில்லை. ஆயினும் கவனித்துப் பார்க்குமளவில், ஒவ்வொரு வேதாந்த சாஸ்திரத்திலும் முக்கியமாய் விசாரிக்கவேண்டிய அடியிற்கண்ட நான்கு பிரச்னங்களுக்கும் உத்தரம் இவ்வுபநிஷத்திலும் பார்க்கலாம்.

(1) மனிதன் அடையவேண்டிய முக்கியமான பிரயோஜனமென்ன?

(2) பிரபஞ்சத்துக்கு மூலகாரணமென்ன?

(3) இந்த காரணம் பிரபஞ்சத்துடன் எவ்விதமாய் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

(4) இந்த மூலகாரணத்தை நாம் எப்படி அறியலாம்?

இந்த உபநிஷத்தின் சாந்திமந்திரம் குருவுக்கும் சிஷ்யனுக்கும் சாந்தியைக் கூறுகிறது.

இவ்வுபநிஷத்தில் நசிகேதஸ்ஸுடைய கதையும், அவனுக்கு யமனால் (அதாவது இரண்டு ஜன்மங்களுக்கு மத்தியிலிருக்கும் ஸ்திதிகளை செவ்வையாய் அறிந்திருக்கிறவனால்) செய்யப்பட்ட ஞானோபதேசமும் காணப்படுகின்றன. ஸ்வர்க்கலோகத்தை இச்சித்த வாஜஸிரவஸ் என்பவன் ஒரு யாகத்தைச்செய்து, அதில் உபயோகமற்றதாயும் சுவர்க்கசாதகமாகாமலு மிருக்கும் பசுக்களை தக்ஷிணையாகக்கொடுத்தான். இவனுடைய பிள்ளையாகிய நசிகேதஸ் இதைக்கண்டு துக்கமடைந்து, பிதாவின் இச்சைநிறைவேறும் பொருட்டு தன்னைக் கொடுத்தாவது பிதா ஸ்வர்க்கத்தை அடையட்டும் என்னும் புத்தியுடன் "என்னை எந்த பிராமணனுக்கு தக்ஷிணையாகக் கொடுக்கிறீர்" என்று பிதாவைகேட்க, அவர் கோபத்துடன் யமனுக்குக் கொடுப்பதாய்ச் சொன்னார். நசிகேதஸ் துக்கமடையாமல் யமன் வீட்டுக்குப்போய் யமனுடைய சந்தோஷத்தை சம்பாதித்து அவனுடைய அனுக்கிரகப்படி மூன்று கேள்விகளைக் கேட்கிறான்.

I. முதலில் பிதாவின் கோபம் சாந்தமாகவேண்டும் என்று நசிகேதஸ் கேட்டுக்கொண்டு அந்த அபீஷ்டத்தை அடைந்தான். இந்த கேள்வி விஷயமாய் மூன்று மதஸ்தர்களும் ஒரே அபிப்பிராயத்தைக் கொள்ளுகிறார்கள்.

II. இரண்டாவது கேள்வியை மூன்று மதஸ்தர்களும் மூன்றுவிதமாய் அறிகிறார்கள்.

(1) அத்துவைத மதப்படி, நசிகேதஸ் பிரசித்தமான சுவர்க்கலோகத்தை அடைய சாதகமாகும் அக்கினி வித்தையை கேட்கிறான்.

(2) விசிஷ்டாத்துவைத மதப்படி, அவன் விஷ்ணுலோகப்பிராப்திக்குச் சாதகமான அக்கினி உபாசனையை கேட்கிறான்.

(3) துவைத மதப்படி, அவன் பகவானுடைய சாதாரண ஸ்வரூபஞானத்தை அபேக்ஷிக்கிறான்.

III. மூன்றாவது கேள்வியை மூவரும் மூன்று விதமாய் அறிகிறார்கள்.

(1) அத்துவைத மதப்படி, நசிகேதஸ் ஆத்ம ஞானத்தை அபேக்ஷிக்கிறான்.

(2) விசிஷ்டாத் துவைத மதப்படி, அவன் மோக்ஷஸ்வரூபத்தை அபேக்ஷிக்கிறான்.

(3) துவைதமதப்படி அவன் முக்தநியாமகனான பகவானுடைய ஸ்வரூபத்தின் விசேஷ ஞானத்தை அபேக்ஷிக்கிறான்.

இவ்விதமாக மூன்று மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மதத்தை அனுசரித்து இந்த உபநிஷத்துக்கு மூன்று விதமாய் அர்த்தம் செய்கிறார்கள். இந்த வித்தியாசங்களையும் ஜீவப்பிரம்ம ஐக்கிய விஷயமாய் அத்துவைதிகளின் காரணங்களையும், பேதபரமாய் துவைதிகளின் காரணங்களையும் ஆங்காங்கு கண்டு கொள்ளலாம்.

அத்துவைதம்

இந்த உபநிஷத்துக்கு ஸ்ரீ சங்கராசாரியார் பாஷ்யம் எழுதியிருக்கிறார். ஆநந்தகிரி சுவாமியும், கோபாலயதீந்திரரும் டீகை எழுதியிருக்கிறார்கள்.

முதலாவது வல்லியில், மனிதன் அடைய வேண்டிய முக்கியமான பிரயோஜனமென்ன வென்னும் முதல் கேள்விக்கு உத்தரம் கூறப்படுகின்றது. வேதத்திற் சொல்லிய கர்மானுஷ்டானத்தாலும் வேத ஞானத்தாலும் சுகம் கிடைக்குமென்று ஜனங்கள் சாதாரணமாய் நினைக்கிறார்கள். ஆனால் இந்த சுகம் சாஸ்வதமல்ல. நாசமற்ற சுகத்தை இச்சிக்கும் புருஷனுக்கு சுவர்க்க சுகமிஷ்டமன்று. ஜீவன் ஒரே நிலைமையிலிருந்தால்தான் இப்படிப்பட்ட நாசமற்ற சுகம் சாத்தியமாகும். ஆகவே அற்பசுகத்துக்குச் சாதகமான மனது, இந்திரியங்கள், முதலியவைகளுக்கு வேறான ஜீவன் மரணத்திற்குப்பிறகு இருக்கிறானா இல்லையா என்னும் கேள்வி ஜனிக்கிறது. இவ்விஷயம் கடினமாயிருந்தாலும் பரம சுகத்துக்குக் காரணமாயிருப்பதால் அவசியம் விசாரிக்கத்தக்கதே.

இந்த வல்லியின் முக்கியமான விஷயங்களாவன :—

1-4 :—பிதா செய்த தானத்தால் திருப்தி அடையாத நசிகேதஸ், சிலாக்கியமானதை கொடுக்கும்படி சாஸ்திரத்தில் விதித்திருக்கிறபடி, தன்னையே யமனுக்குக் கொடுக்கும்படி செய்து கொண்டான்.

5-6 :—தன் ஸ்திதியைப்பற்றி நசிகேதஸ் யோசனை செய்கிறான்.

7-9 :—பிறகு யமனுடைய வீட்டுக்குப் போகிறான். அதிதி பூஜை வெகு முக்கியமான தர்மம். நசிகேதஸ் வந்தவுடன் அதிதி பூஜை செய்யாத தோஷத்திற்காக யமன் மூன்று வரன்களைக் கொடுக்கிறான்.

10-11 :—பிதாவின் கோபம் சாந்தமாக வேண்டியதாய் நசிகேதஸ் முதலில் கேட்டுக்கொண்டபடி யமன் அனுக்கிரகம் செய்கிறான்.

12-19 :—புனர் ஜனனமற்ற ஸ்திதியை அடைய சாதகமான அக்கினி வித்தையை இரண்டாவது வரமால் நசிகேதஸ் கேட்கிறான்.

12-13 :—ஸ்வர்க்கஸ்வரூப வர்ணனை.

14-15 :—யமனுடைய உத்தரம். ஸ்தூல சூட்சும பிரத்தியக்ஷப் பிரம்மாண்டத்திற்கு அக்கினியே ஆதி. இந்த விவரத்தை இதர உபநிஷத்துக்களிலும் பார்க்கலாம்.

16. யமன் நசிகேதசுக்கு ஒரு விசித்திர மாலையைக் கொடுக்கிறான். II-3ல் கூறியபடி இந்த மாலையானது பிரத்தியக்ஷ பிரம்மாண்டத்தின் நசுவர சுபாவத்தைக் குறிப்பிடுகிறது.

17-19 :—அக்கினி சயனத்தால் உண்டாகும் பலன்.

20. ஆத்மாவின் ஞானம் அதை அடையும் உபாயம் இவைகளை மூன்றாவது கேள்வியில் நசிகேதஸ் கேட்கிறான்.

21-29 :—யமன் பரம இரகஸியத்தை உபதேசிப்பதற்கு முன் மனிதன் ஆசைப்படும்படியான வெகு பதார்த்தங்களைக் கொடுப்பதாய் சொல்லியும் நசிகேதஸ் அவைகளை வெறுத்து விட்டான்.

2-வது வல்லி.

இதில் ஜகத்காரணமென்ன, இதை நாம் எப்படி அறியலாம் என்னும் கேள்விகளுக்கு சாதாரண உத்தரம் கொடுக்கப்படுகின்றது. மோக்ஷ சாதகமான வித்தையும் பிராபஞ்சிக சுகசாதகமான ஞானமும் வெவ்வேறு. விசாரித்துப்பார்க்குமளவில் பிராபஞ்சிக ஞானத்தைவிட மோக்ஷ வித்தையே சிரேஷ்டமெனத் தெளிவாகும். ஏனெனின், இந்த பிரபஞ்ச ஞானமே அஞ்ஞானம்; இந்த பிரபஞ்சம், அதின் சுகம், இவைகளைத்தவிர வேறு ஒன்று மில்லை என்னும் பிராந்திக்குக் காரணம். இந்த அஞ்ஞானத்தால் ஜீவன் அடிக்கடி ஜனன மரணங்களை அடைகிறான். சுத்த ஞானமோ மோக்ஷத்தைப் பொறுத்திருக்கிறது; ஜீவனுடைய யதார்த்தஸ்வரூபத்தை விஷயமாக்குகின்றது. இது தர்மாதர்மங்கள், காரிய காரணங்கள், மூன்று காலங்கள், இவைகளைவிட வேறு, ஜீவன் ஜனிக்கிற தில்லை, மரிக்கிற தில்லை, காரியமன்று, காரணமுமன்று, யாதொரு விகாரங்களையும் அடைகிறதில்லை. விகாரங்களெல்லாம் சரீரத்துக்குரியன. சரீரமற்ற, சர்வவியாபக பிரம்மமே ஜீவன். இந்தபிரம்ம ஞானம் தர்க்கத்தாலாவது வேதங்களையும் சாஸ்திரங்களையும் படிப்பதாலாவது உண்டாகமாட்டாது. குரு உபதேசத்தால் ஜனிக்கும் ஆத்ம ஞானத்தால் மாத்திரம் இதை அடையலாம், பிரணவத்தியானம் இதற்குச்சாதகம், இந்திரிய நிக்கிரகம்,

மனோநிக்கிரம், இவைகளில்லாதவன் பிரம்மத்தை அறியமாட்டான். இந்த வல்லியின் முக்கிய விஷயங்களாவன :—

1-4 :—மோக்ஷ சாதகம் ; பிரிய விஷயசாதகம்.

5-6 :—பிரிய மார்க்கத்தை அனுசரிக்கிறவர்களின் ஸ்திதி.

7 :—ஆத்மாவை அறிவது கஷ்டம். ஆத்ம ஞானத்தை உபதேசிக்கும் குருவைக்காண்பதுமரிது.

8-9 :—ஆயினும் குரு அவசியம் வேண்டியது.

10-12 :—தான் கூட ஆபேக்ஷிக நித்திய பதவியை அடைந்திருக்க, நசிகேதஸ் கேவல நித்தியமான ஆத்ம ஞானத்தையே அபேக்ஷிக்கிறதைப் பார்த்து யமன் நசிகேதஸுடைய மனோதைரியத்தை ஸ்துதிக்கிறன்.

13-22 :—ஆத்மா, ஆத்மஞான பலன் விவரிக்கப்படுகின்றன.

23-24 :—ஆத்மாவை அடையும் உபாயம் கூறப்படுகின்றது.

3-வது வல்லி.

இதில் பிரம்மத்துக்கும் ஜகத்துக்கும் உள்ள சாமான்னிய சம்பந்தமும் பிரம்மத்துக்கும் ஜீவனுக்குமுள்ள விசேஷ சம்மந்தமும் கூறப்படுகின்றன. ஜகத்தில் ஜீவாத்மா பரமாத்மாவென இரண்டு ஆத்மாக்கள் விளங்குகின்றன. இந்திரியங்கள், அவைகளின் விஷயங்கள், மனது, புத்தி, இவைகளுடன் கூடினவனும், இவைகளை நியமனஞ் செய்து கொண்டும், போக்தாவாயுமிருக்கிறவன் ஜீவாத்மா. இந்திரியம் முதல், பிரம்மம் வரையில் ஒன்றைவிட ஒன்று சிரேஷ்டமென்று அறிவதே பரமசிரேஷ்டமான பிரம்மத்தை அறிவதற்கு உபாயம். பரமாத்மா சகலத்துக்குள்ளு மிருப்பதால் வியக்தமாய் காணப்படுகிறதில்லை. சூட்சும புத்தியுள்ளவர்கள் ஆத்மாவை அறிந்து மோக்ஷத்தை அடைவார்கள்.

இதில் முக்கிய விஷயங்களாவன :—

1. ஜீவாத்ம பரமாத்மாக்களின் பிரஸ்தாபம். ஜீவாத்மாவின் சம்பந்தத்தால் பரமாத்மாவும் கர்ம பலத்தை அனுபவிப்பதாக ஔபசாரிகமாக சொல்லப்படுகின்றது. மூன்றுவித உபாசகர்கள்:— (1) ஐந்து அக்கினிகளை உபாசிக்கும் சாதாரண கிரஹஸ்தர்கள். (2) மூன்று அக்கினிகளை உபாசிக்கும் முதல் வல்லியில் கூறப்பட்ட கிரஹஸ்தர்கள். (3) பிரம்ம ஞானிகள்.

2. பரம இரகசியத்தை உபதேசிப்பதில் நாசிகேதாக்கினி சாதகத்தை யமன் யாசிக்கிறன்.

3-9. இந்திரியங்கள், மனது, அவைகளின் நிக்கிரகம்,

10-11. மனிதனுடைய தத்துவாம்சங்கள் :—இந்திரியங்கள்; தன் மாத்திரைகள்; மனது; புத்தி; மஹத்து; அவ்வியக்தம்; புருஷன்.

12. சூட்சும திருஷ்டியுள்ளவர்கள்தான் ஆத்மாவை அடைய முடியும்.

13. ஆத்மாவை அடையும் யோகமார்க்க விவரம்.

14. எல்லாரும் சாக்கிரதையா யிருக்கும்படி குரு சொல்லி

15. மரணத்தை அதிக்கிரமிக்கும் மார்க்கத்தை உபதேசிக்கிறார்.

16. உபதேசத்தை அனுஷ்டிக்கும் பலன்.

17. உபதேசத்துக்கு யோக்கியமான தேசகால நிர்ணயம்.

4-வது வல்லி.

பிரம்ம ஞானத்திற்குப் பிரதி பந்தகமான அஞ்ஞானத்தை இந்த வல்லி பிரதிபாதிக்கிறதாக ஸ்ரீ சங்கராசாரியார் சொல்லுகிறார். ஆயினும் முன் வல்லியில் ஆத்மா சகலத்திலும் மறைந்திருப்பதாக சொல்லியிருப்பதால், அப்படிப்பட்ட ஆத்மாவை எப்படி அறியலா மென்னும் கேள்விக்கு இந்த வல்லி உத்தரம் கொடுப்பதாயும் வைத்துக்கொள்ளலாம். ஜாக்கிர ஸ்வப்நாவஸ்தைகளில் சகலத்தையும் அறிவது ஆத்மாவே. இது அறியாதது யாதொன்று மில்லை. இதுவே ஞானஸ்வரூபம். எப்போது விஷயங்களினின்றும் இந்திரிய முதலியவைகள் நிக்கரிக்கப் படுகின்றனவோ அப்போது ஆத்மா தன்னாலேயே தெரியவருகின்றது. ஞானஸ்வரூபமான ஜீவாத்மாவே பரமாத்மா. இதுவே ஹிரணியகர்ப்பன். சகல பூதங்களிலுமிருக்கிற ஆத்மா இதுவே. ஜீவப்பிரம்ம அபேத ஞானமே மோக்ஷ சாதனம்.

இதில் முக்கியமான விஷயங்களாவன :—

1-2 :—ஞானி அஞ்ஞானிகளின் பேதம்.

3-5 :—ஜீவாத்ம ஸ்வரூபம்; பரமாத்மாவைவிட இது வேறல்ல.

6-7:—ஹிரணியகர்ப்பனுடைய விஞ்ஞானகிரியாசக்திகள்.

8. யஞ்ஞாக்கினியே தேஜோமய பிரம்மஸ்வரூபத்தின் பிரதீகம்.

9-15 :—பிரபஞ்சத்தில் பிரம்மம் ஒன்றே சத்தியம். ஆகையால் எல்லாம் ஒன்றே. இதற்கு விபரீதமாய் அறிகிறவன் ஜனன மரணமாகிய சம்சாரத்தை அடைகிறான்.

5-வது வல்லி.

சரீரத்துக்கு வேறாய் ஆத்மா இருக்கிற தென்பதும் ஒரே ஆத்மா பலவிதமாய் எப்படி காணப்படு மென்பதும் இந்த வல்லி யில் சொல்லப் பட்டிருக்கின்றன. சகல இந்திரியங்களுக்கும் எச மானனாயிருக்கிறவன் ஆத்மா. சகலஜீவ வியவஹாரங்களும் ஆத் மாவையே ஆசிரயித்திருக்கின்றன. ஆத்மாவை விட்டு சரீரம் விலகினால் சகல வியவஹாரங்களும் ஒழிவடைகின்றன. பிராணு பானுதிகளின் வியாபாரங்களால் மனிதன் ஜீவிக்கிறதில்லை. இவை களுக்கு ஆதாரமான வேறொன்றால் மனிதன் ஜீவிக்கிறான். ஒரே ஆத்மா பலவிதமாய் காணப்படலா மென்பதை அநேக திருஷ் டாந்தங்களால் காட்டுகிறார். ஒரே அக்கினியும் ஒரே ஜலமும் பல உபாதிகளின் சம்பந்தத்தால் பல பெயர்களை அடைவது போல் ஆத்மாவும் பல உபாதிபேதத்தால் பலவிதமாய் தோன்று கின்றது. நேத்திரங்களுடன் சம்பந்தப்படும் சூரியன் நேத்திர தோஷங்களால் பாதிக்கப்படாததுபோல், ஆத்மாவும் உபாதிதோ ஷங்களால் பாதிக்கப்படுகிறதில்லை.

இதின் முக்கிய விஷயங்களாவன :—

1 ஆத்மாவுக்கு ஆலயமாயிருக்கும் சரீரத்தை புருஷன் ஸ்வா தீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது.

2 ஆத்மாவின் சர்வ வியாபகத்தன்மையை காட்டும் ஒரு இரு க்கு வேதமந்திரம்.

3-5 யோக இரகசியம்; சகல பிராணிகளிடத்திலுமிருக்கும் பரமாத்மாம்சம்.

6-7 கர்மம்; புனர் ஜன்மம். ஸ்தாணு யென்பதினால் கந்தமூல பாஷாணலோகங்களை அறியவேண்டுவது.

8-15 ஆத்மஸ்வரூபம். இது சகலத்திலும் வியாபித்தும் சுத் தமாயிருக்கிறது

6-வது வல்லி.

5-வது வல்லியின் முடிவில் பிரம்மத்தை எப்படி அறியலாம்; அது வியக்தமாய் விளங்குகிறதா இல்லையா என்று கேள்வி ஏற் பட்டு, அதற்கு உத்தரம், பிரம்மத்தை யாதொன்றும் விளக்கி வைக்கமாட்டாதென்றும், அதினால்தான் சகலமும் விளங்குகிற தென்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆறாவது வல்லியும் இவ்விஷயத்தையே தொடர்ச்சியாய் கூறுகின்றது, முதலில் ஒரு திருஷ்டாந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேரை மேல்பாகத் திலும் கிளைகளை கீழ்பாகத்திலு முடைய ஒரு அரசமரம் போலிருக் கிற இந்த ஜகத்து பிரம்மத்தையே ஆசிரயித்துக்கொண்டிருக்

கிறது. பிறகு மூன்றாவது வல்லியிற்போல் ஆத்மாவுக்கும் இந்திரியாதிகளுக்கு முள்ள சம்பந்தம் கூறப்பட்டிருக்கிறது. ஆத்மாவை இந்திரியங்களாலும் (பிராபஞ்சிக) மனதினாலும் அறிய முடியாது; ஹிருதய கமலத்திலிருக்கிற சங்கற்பாதிகளற்ற புத்தியால் விசாரிப்பதால் அதை அறியமுடியும். ஒரு விருக்ஷத்தைப் பார்த்து பூமிக்குள்ளிருக்கும் அதின் வேரை ஊஹிப்பது போல் ஆத்மாவின் காரியமான ஜகத்தினால், அதின் காரணமான ஆத்மாவை ஊஹிக்கலாம், இந்த காரணத்தை சகல காரியங்களினின்றும் வேறுபடுத்தி தனிமையாக விசாரிப்பதால் பிரம்மத்தின் யதார்த்த ஞானம் சித்திக்கிறது, இந்த ஞானத்தை அடைவதற்கு முக்கியமான சாதகம் யோகம், இது ஒரு ஸ்திதிவிசேஷம், இதில் இந்திரியங்களும் மனதும் அவைகளின் விஷயங்களினின்றும் திருப்பப்பட்டு புத்தியின் விசாரம் பிரம்ம விஷயமாகவே பிரவிர்த்திக்கிறது. இப்படிப்பட்ட யோகத்தால் பிரம்மத்தை அறிய முடியும்.

இந்த வல்லியின் முக்கிய விஷயங்களாவன :—

1. ஜகத்தாகிற விருக்ஷத்தின் நிரூபணம்.

2-3 சகலமும் ஆத்மாவினிடமிருந்து உண்டாகி ஆத்மாவையே ஆசிரயித்துக்கொண்டிருக்கிறது. ஆத்மாவை ஒன்றும் அதிக்கிரமிக்கிறதில்லை.

4-5 ஆத்மாவை இந்த ஜகத்திலேயே அறிய வேண்டியது. மரணத்திற்குப் பிறகு ஆத்மாவை அறியலாமென்பது வீணாசை. ஆத்மாவின் சுத்ததேஜோமயஸ்வரூபத்தை உத்தேசித்து பிரம்மலோகத்திற்கூட வெய்யிலும் நிழலும் கலந்ததுபோற்றான் ஆத்மதத்துவம் பிரகாசிக்கிறது.

6-8:—3வது வல்லி 10-11-13ற் சொல்லியதுபோல் இவ்விடத்திலும் மனிதனுடைய தத்துவாம்சங்கள் கூறப்படுகின்றன.

9-15 :—யோக விவரம்.

16 :—சரீர சாஸ்திரம். சரீரத்தை ஆத்மாவிடும் விதங்கள்.

17 :—யோகாப்பியாசத்தில் சரீரத்தை விடவேண்டியகிரமம்.

19 :—உபநிஷத்தின் முடிவு.

அகண்டப் பிரம்மத்தை நாம் எப்படி அறியலாம் என்னும் விஷயம் அநேக உபநிஷத்துக்களைவிட இந்த கடவல்லியில் வெகு விரிவாய் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. பிரம்ம ஞானம் குரு உபதேசத்தால் சாத்தியமா? அல்லது, புத்தி விசாரத்தாலா? "இது சுலபமாய் அறியத்தக்க தல்ல, இது வெகு சூட்சுமமானது" (I-21.) "சகலமுமறிந்த குரு வேண்டியது" (II-7.) சூட்சுமத்தைவிட சூட்சுமமாயிருக்கும் ஆத்மாவை தர்க்கத்தால் அறிய

முடியாது." இப்படிப்பட்ட வாக்கியங்களால் உபதேசமே பிரம்ம ஞானத்திற்குச் சாதகமென்று தெரிய வருகின்றது. ஏனெனின், தர்க்கத்தாலும் பிரத்தியக்ஷாதி பிரமாணங்களாலும் பிரம்மத்தை அறிய முடியா விட்டால், குரு உபதேசம் தவிர வேறு உபாயம் காணப்படவில்லை. குருவும் அவசியம் வேண்டியது என்றும் சொல்லப்பட் டிருக்கிறது. அவர் அவருடைய குருவினிடம் ஞானத்தை சம்பாதித்திருக்க வேண்டும். இவர் இவருடைய குருவினிடம் சம்பாதித்திருக்க வேண்டும். இப்படியே உபதேசம் பரம்பரையாக மூல குருவினிடமிருந்து வந்திருக்க வேண்டும். இவர் சாக்ஷாத் பிரம்மத்தினிடம் உபதேசம் பெற்றிருக்க வேண்டும். இவ்விதமாக பிரம்ம ஞானம் பரம் பரோப தேசத்தால் ஜகத்தில் பிரவிர்திக்க வேண்டும்.

இப்படி சிலவாக்கியங்களால் காணப்பட்டாலும், புத்திவிசாரணையே பிரம்ம ஞானத்துக்குச் சாதகம் என்பது உபநிஷத்தின் அபிப்பிராயம் என்று அநேக வாக்கியங்களால் தெரிய வருகிறது. எப்படி எனின்.

I "வேதாத்தியயனத்தாலும், வேதார்த்த ஞானத்தாலும், வெகுசாஸ்திரங்களின் ஞானத்தாலும் ஆத்மாவை அடைய முடியாது" என்னும் (II-23.) சுருதியால் பிரம்ம ஞானத்திற்கு வேதம் சாதகமல்லவென்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது.

II - (1) "பார்க்கக்கூடிய விஷயங்களில் ஆத்மா ஒன்றல்ல; ஆத்மாவை ஒருவனும் கண்ணால் பார்த்ததில்லை." VI. 9.

(2) "வாக்கினாலும், கண்ணாலும், மனதினாலும் அதை அடையமுடியாது." VI. 12.

(3) "சூரியாதிகள் ஒன்றும் பிரம்மத்தை விளக்கிவைக்கிறதில்லை. அவருடைய தேஜஸால்தான் சூரியாதிகள் பிரகாசிக்கின்றன" V. 15.

இந்த வசனங்களால், பிரகிருதி சம்பந்தமற்ற ஆத்மா இந்திரியங்களால் அறியத்தக்கதல்ல; ஆகையால் பரம்பரையான உபதேசம் சாதகமன்று என்று சித்திக்கிறது.

III. ஆத்மஞானம் ஒன்றுடனும் சம்பந்தப்படவில்லை. ஆத்மாவால் ஆத்மாவை அறியவேண்டியது. இது அடியிற் கண்ட சுருதிகளால் வியக்தமாகிறது.

(1) "இந்த ஆத்மா எந்த ஆத்மாவைப் பிரார்த்திக்கிறானோ அந்த ஆத்மாவாலேயே அடையத்தக்கது. அவனுக்கு தன்னுடைய பரமார்த்த தத்துவத்தை பிரகாசம் செய்கிறது." V. 23.

(2) இவன் "சகல பூதங்களுக்கும் அந்தராத்மா" V. 12.

IV. ஆத்மஞானம் புத்தி விசாரத்தால் அடையத்தக்கது என்பது அடியிற் கண்ட சுருதிகளால் வியக்தமாய் தெரியவருகிறது :—

(1) "அநேகவிதமாய் சிந்திக்கத்தக்கவன்" II-8.

(2) "ஞானிகள் அத்தியாத்ம யோகத்தால் சுகதுக்கத்தை விடுகிறார்கள்." II-12.

(3) "சூட்சுமபுத்தி யுள்ளவர்களுடைய ஏகாக்கிரமான சூட்சும புத்தியால் ஆத்மா பார்க்கப்படுகிறான்." III-12.

(4) "கண்ணால் ஒருவனும் ஆத்மாவைபார்க்கிறதில்லை. புத்தி விசாரத்தால் ஆத்மா வியக்தமாகிறான்." VI-9.

இந்த வாக்கியங்களால் ஆத்ம ஞானத்திற்கு புத்தி விசாரமென்றே ஏற்படுகிறது. இந்த விசாரமும் இன்னவிதமாய் செய்யத்தக்கதென்பதும் அடியில் கூறப்பட்டிருக்கிறது.

(1) "வாக்கினாலும், மனதினாலும், கண்ணாலும் ஆத்மாவை அடையமுடியாது. ஆத்மா இருக்கிறான் என்று சொல்லுகிறவனைவிட வேறான நாஸ்திகனால் ஆத்மா எப்படி அறியப்படும்" VI-12.

(2) "ஆத்மா இருக்கிறான் என்கிறபாவத்தாலும், ஆத்மாவின் யதார்த்த ஞானத்தாலும் இவ்விரண்டாலும் ஆத்மாவை அறியவேண்டியது. அதாவது ஆத்மாஇருக்கிறான் என்று அறிந்தவனுக்கு ஆத்மாவின் யதார்த்த ஸ்வரூபம் வியக்தமாய் விளங்குகிறது. VI-13.

அதாவது, ஜகத்துகாரணப்படுவதால் அதற்கு ஒருகாரணமிருக்கவேண்டும். இந்தகாரணம் பிரம்மம். இவ்வித யுக்தியால் ஆத்மாவின் ஸ்திதி நிச்சயப்படுகின்றது,

V. (1) "ஆத்மா தன் ஸ்வரூபத்தை பிரகாசிப்பிக்கிறான்" II-23.

(2) "ரூபாதிகளை அறியும் ஆத்மாவுக்குத்தெரியாதது எது" IV-3 பிரபஞ்சத்தை பிரம்மதிஷ்டியால் பார்ப்பதே ஞானம். இதரதிருஷ்டியால் பார்ப்பது அஞ்ஞானம். மேற்கண்ட வாக்கியங்களால் ஞானஸ்வபாவமா யிருப்பதால் ஆத்மாவும் பிரம்மமும் ஒன்று என்பதும், ஆனதால் ஆத்மா தன் ஸ்வபாவத்தாலேயே பிரம்மஞானத்தை அடையும் என்பதும் சித்திக்கிறது.

மேற்கண்ட விசாரத்தால் கடோபநிஷத்தின் கருத்து விசேஷமாய் புத்திவிசாரபரமாயிருக்கலா மென்றும், உபதேசபரமல்லவென்றும் தோன்றும். பிரம்ம ஞானத்திற்கு இரண்டு உபாயங்களும் அவசியம் வேண்டிய தென்பதே வெகு பேர்களின் சம்மதம்,

வேதாந்தத்தின் முக்கிய கருத்தாகிய ஜீவப்பிரம்ம ஐக்கியமே இந்த கடோபநிஷத்தின் முக்கியமான அபிப்பிராயம். அவ்வியக்தம், மஹத்தத்துவம், புத்தி, மனது, விஷயங்கள், இந்திரியங்கள் இவ்விதமாக இந்த உபநிஷத்தில் சொல்லிய சிருஷ்டி கிரமம் இதர உபநிஷத்துக்களிற் சொல்லிய கிரமத்துக்கு வெறாயிருந்தாலும், சாங்கியக் கிரமத்தை அநுசரித்திருக்கிறது. மஹத்தும் புத்தியும் ஒன்றென சாங்கியர்கள் சொல்லுவதே வித்தியாசம். இதனாலும் யோகத்தின் பிரஸ்தாபத்தாலும் இவ்வுபநிஷத்து பிரவிர்த்தித்த காலத்திலேயே சாங்கியமதமும் பிரவித்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. I - 20 - ல் ஆத்மா இருக்கிறானா இல்லையா என்னும் சந்தேகக் கேள்வியால் சார்வாக மதமும் முனீசுவரருடைய மனதிலிருந்திருக்கலாம்.

ஸ்ரீசங்கராசாரியார் அடியிற்கண்டகடோபநிஷத்தின் மந்திரங்களுக்கு அடியிற்கண்ட பிரம்ம சூத்திரபாஷ்யத்தில் அர்த்தத்தை விசாரித்திருக்கிறார்.

உபநிஷத்து மந்திரம்.	பிரம்ம சூத்திரம்.
(1) I-2-20. यस्यब्रह्मच யஸ்ய ப்ரஹ்ம ச	I-2- 4. अत्ताचराचरग्रहणात् அத்தா சராசர க்ரஹணாத்
(2) I 3- 1. ऋतं पिबन्तौ ருதம் பிபந்தௌ	I-2-11. गुहां प्रविष्टौ குஹாம் ப்ரவிஷ்டௌ
(3) I-3-10. इन्द्रियेभ्यः पराः இந்த்ரியேப்ய: பரா:	III-3- 7. आध्यानाय प्रयोजनात् ஆத்யாநாய ப்ரயோஜநாத்
(4) I-3-11. महतःपरं மஹத:பரம்	I-4- 1. आनुमानिकं ஆநுமாநிகம்
(5) II-2-15. नतत्रसूर्यः நதத்ர ஸூர்ய:	I-3-22. अनुकृतेस्तस्यच அநுக்ருதேஸ்தஸ்ய ச
(6) II-4-12. अंगुष्ठमात्रः அங்குஷ்ட மாத்ர:	I-3-24. शब्दादेव प्रमितः ஶப்தாதேவ ப்ரமித:
(7) II-6- 2. यदिदं किञ्च யதிதம் கிஞ்ச	I-3-39. कंपनात् கம்பநாத்

விசிஷ்டாத்வைதம்.

இந்த உபநிஷத்துக்கு ஸ்ரீரெங்க ராமானுஜாசாரியார் பாஷ்யம் எழுதியிருக்கிறார், பாஷ்யகாரரான இராமனுஜா சாரியார் பாஷ்

யம் எழுதவில்லை. ஆயினும் அவர் தன்னுடைய சூத்திரபாஷ்ய த்தில் அடியிற் காட்டிய மந்திரங்களுக்கு அர்த்தம் எழுதியிருக்கிறார்.

கட I-17 க்கு அர்த்தம்,	பிரம்மசூத்திரபாஷ்யம்,	विशेषणाच्च விஶேஷணாச்ச (I-2-12) என்னும் அதிகரணத்திலும்,
,, I-20	,,	,, अत्ताचराचरग्रहणात् அத்தாசராசர க்ரஹணாத் (I-2-9) என்னும் மந்திரத்திலும்,
,, II-18 & 19 ,,		,, नियमाच्च & उत्पत्ति असंभवात् நியமாச்ச & உத்பத்தி அஸம்பவாத் (III-4-7 & II-2-42) என்பதிலும்,
,, II-20	,,	,, द्युभ्वादि த்யுப்வாதி (I-3-1) அதிகரணத்திலும்,
,, II-25	,,	,, अत्ताचराचरग्रहणात् அத்தாசராசர க்ரஹணாத் (I-2-9) என்பதிலும்
,, III-10 & 11 ,,		,, आनुमानिकाधिकरण ஆநுமாநிகாதிகரணத்திலும், (I-4-1)
,, IV-7	,,	,, गुहां प्रविष्टौ குஹாம் ப்ரவிஷ்டௌ (I-2-11) என்பதிலும்,
,, V-15	,,	,, ज्योतिर्दर्शनात् ஜ்யோதிர்தர்ஶநாத் (I-3-40) என்பதிலும்,
,, VI-1	,,	,, கீதையின் (XV-1) சுலோக வியாக்கியானத்திலும்,
,, VI-2	,,	,, कंपनात् கம்பநாத் (I-3-39) சூத்திர பாஷ்யத்திலும்,

கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குச்சம்பந்தப்பட்ட வேறு விஷயங்களை ஆங்காங்கு பார்த்துக்கொள்ளலாம்.

1-11. நசிகேதஸுடைய கதையையும் அவனுக்கு யமன்முதல் வரன்கொடுத்ததையும் அத்வைதத்திற்போலவே அறியவேண்டியது.

12-19. கர்மத்தால் மோக்ஷம் சித்திக்கும் என்னும் விசிஷ்டாத்வைத மதத்தை அநுசரித்து இரண்டாவது வரத்தால் நசிகேதஸ் மோக்ஷசாதனமான அக்கினி உபாசனையை அபேக்ஷிக்கி

றுன். அதற்கு யமன் விஷ்ணுலோக பிராப்திக்குச் சாதனமான உபாசனையை உபதேசிக்கிறுன். விஷ்ணுலோகத்தை அடைந்தவன் திரும்பிவருகிறதில்லை. பரமாத்மாவை ஜீவாத்மாவின் அந்தர்யாமியாக அறிந்து, நாசிகேதாக்கினி சயனத்தைச் செய்கிறவன் மோக்ஷத்தை அடைகிறுன்.

20-21. மோக்ஷஸ்வரூப விஷயத்தில் வெகுபெயர்கள் வெகுவித அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறுர்கள். சிலர் ஆத்மாவின் ஸ்வரூபநாசமே மோக்ஷமென்கிறுர்கள். சிலர் அவித்தியநாசமே மோக்ஷமென்றும், சிலர் சகலகுணநாசமே மோக்ஷமென்றும், சிலர் உபாதிநாசமே மோக்ஷமென்றும், சிலர் கர்மநாசமே மோக்ஷமென்றும், இப்படிப்பலவிதமாய்ச் சொல்லுகிறுர்கள். இதின் உண்மையைத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்னு மிச்சையுடன் நசிகேதஸ் யமனை மூன்றுவது கேள்வியாற்கேட்கிறுன். இந்தகேள்வியிலேயே பிரம்மஸ்வரூபம், ஜீவஸ்வரூபம், பிரம்மத்தை அடையும் உபாயம் இவைகள் அடங்கியிருக்கின்றன.

22-25. இந்தகேள்விக்கு உத்தரம் கொடுப்பதற்குமுன் சிஷ்யனுடைய தீவ்ரவைராக்கியத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பொருட்டு, ஆசைப்படும்படியான அநேக பதார்த்தங்களை கொடுக்கிறதாக யமன் சொல்லுகிறுன்.

26-29. நசிகேதஸ் இவைகளை திரஸ்காரஞ்செய்துவிட்டு தான் கேட்ட உபதேசத்தையே அபேக்ஷிக்கிறுன்.

2-வது வல்லி.

1-19. யமன் சொல்லுகிறுன் :—மோக்ஷமார்க்கம் வேறு. போகமார்க்கம் வேறு. புத்திமான் மோக்ஷமார்க்கத்தையே தேடுகிறுன். நீ இதையே தேடுவதால் சிறந்தவனுயிருக்கிறுய். பரலோகத்தை ஒப்புக்கொள்ளாதவன் யமபாதையை அடைகிறுன். ஆத்மாவை அறிந்து உபதேசிக்கிறவன் அறிது. ஏகாந்தபக்தியுடன் பிரம்மசாக்ஷாத்காரமடைந்தவன்தான் உபதேசிக்க முடியும். கேவலதர்க்கத்தால் பகவானை அறியமுடியாது. மோக்ஷமென்பது நாசம்பயம் இவைகளற்றது; சத்திய சங்கற்பாதி தன்மையை உடையது. சகலத்துக்கும் அந்தர்யாமியாயிருக்கிறவன் பரமாத்மா. இந்த ஆத்மாவை அத்தியாத்மயோகத்தால்தான் அறியலாம்.

18-19. ஜீவஸ்வரூபம் :—ஜனனமரணங்களற்றது; அதிசூட்சுமம்.

20. அந்தர்யாமிஸ்வரூபம் :—ஜீவனுக்குள் பிரவேசிக்கத்தக்கவன்; சர்வவியாபகன் பகவதனுக்கிரகமன்றியில் அறியமுடியாதவன்.

21-24. ஆத்மாவை அடையும் உபாயம் :—மனனம், பகவானிடத்தில் பிரீதி, சத்விருத்தி, இந்திரிய நிக்கிரகம் முதலியவை.

3-வது வல்லி.

1-2. முந்தினவல்லியிற் கடைசியில் சகலஸ்தாவர ஜங்கமங்களையும் சம்காரஞ்செய்யும்பரமாத்மாவைஇப்படிப்பட்டதென்று எவன் அறிவான் என்று சொன்னதைக்கேட்டுபரமாத்மாவை அறியமுடியாதோ என்று சந்தேகம் ஜனிக்கலாம். அதைநிவர்த்திக்கும்பொருட்டு பரமாத்மாவும் ஜீவனும் ஒரே குஹையிலிருப்பதால் பரமாத்மாவை உபாசிக்கமுடியும். அப்படிப்பட்ட

3-13. வைஷ்ணவபதத்தை அடையும் ஜீவஸ்வரூபத்தையும், அடையும்பொருட்டு இந்திரியாதிகளை ஸ்வாதீனப்படுத்தல் முதலிய உபாயங்களையும், இவைகளுக்குள்ளிருக்கும் தாரதம்மியத்தையும், யமன் சொல்லுகிறான்.

14-17. குருவை அடைந்து ஞானத்தை சம்பாதித்து முக்தர்களாகவேண்டுமென்று குரு ஜனங்களை உற்சாகப்படுத்துகிறார்.

4-வது வல்லி.

அப்படி உற்சாகப்படுத்தியும் ஆத்மஸ்வரூபத்தை அறியாதவர்களைப்பார்த்து குரு துக்கப்படுகிறார். இந்திரியங்கள் ஆத்மாவை அறியமாட்டா. இந்தவல்லியிலும் பரமாத்மாவே சகலத்திற்கும் அந்தர்யாமி என்னும் உபதேசமே கூறப்படுகின்றது.

5-வது வல்லி.

முக்த ஸ்வரூபம் விவகரிக்கப்படுகின்றது. ஆத்மாவை சரீரத்துக்கு வேறாகப்பார்க்கிறவன் சரீரசம்பந்தமான துக்கங்களினின்றும் விடுபட்டு பிராரப்தம் முடிந்தபின் பிரகிருதி சம்பந்தத்தையும் விட்டுவிடுகிறான்.

சகலமும் பிரம்மத்தையே அந்தர்யாமியாயுடையது. சகலத்தையும் பிரகாசிக்கும்படி செய்கிறது பரமாத்மாவே.

6 வது வல்லி.

இந்த சம்சாரவிருக்ஷத்துக்கு சதுர்முகபிரம்மாவே வேர். மனிதன், பசு, பக்ஷி, எல்லாம் கிளைகள். பரமாத்மாவினிட மிருந்தே சகலமும் உண்டாகி, பிரவிர்த்தித்து, அதற்கே பயந்திருக்கின்றன. சரீரம் நாசமாகு முன்னமேயே ஆத்மஞானத்தை சம்பாதிக்கவேண்டும். இந்தபரமாத்மா இந்திரிய கோசரமன்று. ஆயினும் பக்தியாலும், தைரியத்தாலும், இந்திரிய நிக்கிரமாகிய யோகத்தாலும் பரமாத்மாவை அடையலாம்,

துவைதம்.

ஈசகேனங்களுக்குப்போல் இந்த கடோபநிஷத்துக்கும் பாஷ்யம், டீகை, கண்டார்த்தம், ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ரீ ஆநந்த தீர்த்தாசாரியாரவர்கள் பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். இதில் தான் செய்யும் அர்த்தத்திற்கு ब्रह्मसार ப்ரஹ்மஸார गतिसार கதிஸார, तत्वसार தத்வஸார, पद्म பத்ம புராணம், कूर्म கூர்ம புராணம் वराह வராஹ புராணம் महावराह மஹாவராஹ, भविष्यत्पर्व பவிஷ்யத்பர்வ ब्रह्मांड ப்ரஹ்மாண்ட, ब्रह्मवैवर्त ப்ரஹ்மவைவர்த்த, என்னும் கிரந்தங்களிலிருந்து சுலோகங்களை ஆதாரமாக எடுத்து எழுதியிருக்கிறார். வியாசதீர்த்தர் சுருக்கமான டீகையையும், வேதேசபிக்ஷு விஸ்தாரமான டீகையையும் எழுதியிருக்கிறார்கள். இராகவேந்திர சுவாமிகள் கண்டார்த்தத்தை எழுதியிருக்கிறார்கள். இவர்கள் சொல்லும் விஷயங்களெல்லாம் கோர்வையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. டீகாகாரருடைய அர்த்தமும் கண்டார்த்தக் காரருடைய அர்த்தமும் பேதப்படும்போது வித்தியாசங்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. நூதனமாய் மத்வ பாஷ்யங்களைப் பார்க்கிறவர்களுக்கு இந்த கோர்வை வெகு உபயோகமுள்ளதாக இருப்பது மன்றியில் டீகை முதலியவைகளை தனித்தனியே பார்த்தவர்களுக்குக்கூட உபயோகமாயிருக்கலாம்.

இந்த உபநிஷத்து யமதர்ம ராஜாவுக்கும் நசிகேதஸுக்கும் நடந்த சம்வாத ரூபம். யமன் இதற்கு இருஷி. வாமன சப்தத்தால் கூறப்படும் ஹரியே தேவதை (தியானவிஷயம்)

1-11 :—நசிகேதஸுடைய விருத்தாந்தத்தையும் முதல் கேள்வியையும் அத்வைதத்திற்போல் அறிந்துகொள்க.

12-19 :—இரண்டாவது கேள்வியால் நசிகேதஸ் விஷ்ணு லோகத்துக்குச் சாதகமான அக்கினியிலிருக்கும் பகவத்ஸ்வரூப ஞானத்தை யாசிக்கிறான். இந்த பகவானுக்கே அக்கினி என்றும் பெயருண்டு. சகல லோகங்களுக்கும் காரணமாயும், சகலபிராணிகளின் புத்தி குஹையிலும், வேதத்தால் வியக்தமாய் அறியப்படுகிறவனையும், விஷ்ணு லோகப்பிராப்திக்குச் சாதகமாயுமிருக்கிற பகவத் ஸ்வரூபத்தை யமன் நசிகேதஸுக்குச் சொன்னான். இந்த ஸ்வரூபத்தை அறிவதினால் ஒருவன் கர்ம பந்தத்தினின்றும் விடுபடுகிறான். நாசிகேதாக்கினியை மூன்று தடவை அனுஷ்டிக்கிறவர்களும், வேதத்திற் சொல்லியபடி பகவானுடைய தத்துவம் முதலியவைகளை அறிகிறவர்களும், யஜ்ஞம் தானம் தபஸ் இவைகளை அனுஷ்டிக்கிறவர்களும் சம்சாரத்தைத் தாண்டி முக்தர்களாகிறார்கள்,

இறந்த புருஷனிடத்திலும், முக்தி அடைந்தவனிடத்திலும், பகவான் நியாமகனாக இருக்கிறார் என்று சிலரும் இல்லை என்று சிலரும் சொல்லுகிறார்கள். ஞானிகளின் மதமே நசிகேதஸுக்குச் சம்மதமானாலும் முக்தர்களிடத்திலிருக்கும் பகவத் ஸ்வரூபத்தை விசேஷமாய் தெரிந்து கொள்ளும்பொருட்டு நசிகேதஸ் மூன்றாவது வரத்தால் முக்தநியாமக பகவத் ஸ்வரூபத்தைக் கேட்டுக்கொண்டான். இரண்டாவது பிரச்னமே அக்கினிரூப பகவத் பரமாயினும், அந்த அக்கினிஞானம் சுகாதிக்கியத்தைக் கொடுக்குமே தவிர மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டாது. பகவானுடைய விசேஷஞானம் மோக்ஷத்துக்கு வேண்டியதாகையால் இந்த கேள்வியை நசிகேதஸ் கேட்டான்.

இந்த உபதேசத்தைச் செய்வதில் வெகு கஷ்டமிருப்பதாலும், அதிகாரிக்கே உபதேசம் செய்யவேண்டியதாகையாலும் நசிகேதஸுடைய மனதை பரிக்ஷிக்கும் பொருட்டு யமன் வெகு ஆசைகளைக்காட்டியும் நசிகேதஸ் இணங்கவில்லை.

2 - வது வல்லி.

நசிகேதஸுடைய திடமான வைராக்கியத்தைப்பார்த்து சந்தோஷமடைந்து யமன் முதலில் பந்தமோக்ஷ லக்ஷணங்களையும் வெகுபேர்கள் காம்மிய விஷயங்களையே இச்சிக்கிறார்கள் என்றும் சொல்லுகிறான்.

இதற்குக்காரணம் பகவதஞ்ஞானம். பகவானைப்பற்றிச் சொல்லுகிறவன் அரிது. ஜீவனும் பிரம்மமும் வெவ்வேறு என்னும் ஞானமே சரியானது. இந்த ஞானம் தர்க்கத்தால் கிடைக்கமாட்டாது.

பின்னும் பகவானுடைய விசேஷ ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. பகவான் சகலஜகத்தின் ஸ்திதிக்கும் காரணம். வேதங்களாற்கூட முற்றிலும் பிரதி பாதிக்கமுடியாதவர்; முக்தர்களின் ஆசிரயம்; சகலத்தையும் பிரேரணைசெய்கிறவர்; ஹிருதய குஹையிலிருக்கிறவர்; முக்த ஜீவனிடத்திலிருக்கிறவர்; நாசமற்றவர்; குணபரிபூரணம்; தியானயோகத்தால் அவரை அடைகிறவன் மேன்மையான ஆநந்தத்தை அடைகிறான். ஜீவப்பிரம்மபேத ஞானமே மோக்ஷ சாதனம். பகவானை மேற்சொல்லியபடி அறிகிறவன் சத்தியலோகத்தில் பூஜ்ஜியனாகிறான். பகவானுக்கு ஜனனமரணங்களில்லாமையால் பகவானை அறிந்தவனுக்கும் தேகசம்பந்த வியோகமாகிற ஜனனமரணங்களில்லை. பகவானுடைய பிரசாதமன்றியில் மோக்ஷம் கிடைக்கமாட்டாது. பக்தனுக்கு இந்தப் பிரசாதம் கிடைக்கும். சிரவணாதிகளும் சமதமாதிகளும் அவசியம் வேண்டியவை.

3 - வது வல்லி.

இரண்டாவது வல்லியிற் சொல்லிய பகவத்தியானம் எவ்விடத்திற் செய்யத்தக்கதென்பதை இதிற் சொல்லுகிறார். புண்ணிய சரீரத்தில் அதிலும் முக்கிய வாயுவினிடத்தில் விஷ்ணுவின் ஆத்மா அந்தராத்மாவாகிய இரண்டு ரூபங்கள் தியானிக்கத்தக்கவை. இதற்குச்சாதகம் இந்திரிய நிக்கிரகம். பகவத்தியானமும் தாரதம்மியமாகவே செய்யவேண்டியது. சிரவணாதிகள், பகவத் பிரசாதம், இவைகளுடன் கூடினவர்களால் பகவான் பார்க்கப்படுவார். வாக்காதிகளின் அபிமான தேவதைகளை நியமனம் செய்கிறவன் பகவான் என்றே தியானம் செய்யவேண்டியது. இந்த வல்லியின் முடிவில் வேதபுருஷனாற் செய்யப்பட்ட ஹிதோப தேசமும் பலனும் கூறப்பட்டிருக்கின்றன.

4 - வது வல்லி.

இதில் பிரம்ம வித்தைக்குச் சாதகமான வைராக்கியம், முக்த நியாமக பகவத் ஸ்வரூபத்தின் விஸ்தார நிரூபணம் கூறப்படுகின்றன. ஜாக்கிற ஸ்வப்நங்களை நியமனம் செய்கிறவர் பரமாத்மா. சதுர்முக பிரம்மாவை சிருஷ்டித்தவர் இவரே. மத்சியகூர்மாதி அவதாரங்கள் இவரே. சர்வஜ்ஞன் இவரே. சூரியன் உதிக்கிறதும் அஸ்தமிக்கிறதும் இவரிடத்திலேயே. பகவானுடைய மூலரூபத்திற்கும் அவதார ரூபங்களுக்கும் பேதமில்லை. பகவானுக்கும் பகவத்தர்மங்களுக்கும் பேதத்தைப் பார்க்கிறவன் அந்தந்தமஸை அடைகிறான். பகவானை அறிகிறவன் பகவானுக்குச் சமானமாகிறானே தவிர பகவானாகிறதில்லை.

5 - வது வல்லி.

இந்த வல்லியிலும் பகவத் ஸ்வரூபமே விஸ்தரிக்கப்படுகின்றது. சரீராதிகள் பகவதாதீனம் என்கிற ஞானத்தால் அவைகளில் அபிமானம் நீங்கி, பரோக்ஷஞானம் ஜனித்து பிராரப்தம் முடிந்தவுடன் அபரோக்ஷ ஞானத்தால் முக்கியமோக்ஷம் சித்திக்கிறது. இந்த வல்லியில் ஜீவேசுவரபேதம் விசேஷமாய் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. ஜீவன் கர்மபலத்தை அனுபவிக்கிறான், பரமாத்மா அனுபவிக்கிறதில்லை. ஜீவன் சோகமுள்ளவன்; பரமாத்மா சோகமற்றவன். ஜீவன் பரதந்திரன்; பகவான் ஸ்வதந்திரன். பகவான் பூர்ணன்; ஜீவன் அப்படிப்பட்டவனல்ல. பகவான் சகல லோகங்களுக்கும் ஆசிரயம்; ஜீவன் அப்படிப்பட்டவனல்ல. பகவானை ஒன்றும் அதிக்கிரமிக்கிறதில்லை; ஜீவனை பகவான் அதிக்கிரமிக்கிறான். இப்படிப்பட்ட ஜீவனை நியமனஞ்செய்கிறவன் பகவான் சகல ஜீவர்களுக்கும் அந்தராத்மா பகவான். ஆனால் பகவானுக்கு

துக்க சம்பந்தமில்லை. இப்படிப்பட்ட பகவத்ரூபத்தை அறிகிறவர்களுக்குத்தான் பரமமோக்ஷம் சித்திக்கும். அதற்கும் பகவானுடைய பிரசாதம் வேண்டியது.

6 - வது வல்லி.

இதிலும் பகவானுடைய மகிமையே பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஜகத்தாகிற விருக்ஷத்திற்கு பகவான் அடிபாகம்போலிருக்கிறார். இந்திராதிகள் இவருடைய பயத்தால் தங்கள் தங்கள் வியாபாரங்களை சரியாய் செய்து வருகிறார்கள். பகவத் ஞானமும் எல்லாருக்கும் ஓரேவிதமாய் உண்டாகமாட்டாது. கேவலம் பகவத் ஞானம்மட்டும் மோக்ஷசாதகமன்று. தேவதைகளின் தாரதம்மிய ஞானமும் வேண்டியது. பக்தி சிரவணம் முதலியவையும் வேண்டியவை. குருவின் உபதேசமும் அவசியமே. இவைகளில்லாதவர்களுக்கு ஞானமேயில்லை. கடைசியில் பகவத் பிரசாதத்தாலுண்டாகும் பலன் கூறப்பட்டு உபநிஷத்து முடிவு பெறுகிறது.

ஷட்விதலிங்கதாற்பரிய நிருபணம்.

ஈசாவாஸ்யத்தின் 15-வது பக்கத்தில் ஷட்விதலிங்கங்களின் விவரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் அவைகளை காட்டிய வசனங்கள்மட்டும் கூறப்படும்.

I **येयं प्रेते मनुष्ये** யேயம் ப்ரேதே மநுஷ்யே (இறந்தமனிதனிடத்தில்) முதலிய I-1-20-வது மந்திரத்தால் **உபக்கிரமலிங்கம்** சாதாரணமாயும், **अन्यत्र धर्मात्** அந்யத்ர தர்மாத் (தர்மத்துக்குவேறு) முதலிய I-2-14-வது மந்திரத்தால் விசேஷமாயும் விளங்குகின்றது. **अगुष्ठमात्र:पुरुषोन्तरात्मा** அங்குஷ்டமாத்ர: புருஷோந்தராத்மா (அங்குஷ்டபரிமாணமுள்ள புருஷன் அந்தராத்மா) என்னும் II-6-17-வது வாக்கியத்தில் **உபசம்ஹாரலிங்கம்** விளங்குகிறது.

II அப்பியாசலிங்கம் அடியிற்கூறப்பட்ட சுருதிகளில் காணப்படுகின்றது.

(1) **नजायतेम्रियतेवा** நஜாயதே ம்ரியதே வா (ஜனிக்கிறதில்லை, மரிக்கிறதில்லை) I-2-8.

(2) **अशरीरंशरीरेष्व नवस्थेष्ववास्थितम्** அசரீரம் சரீரேஷ்வ நவஸ்தேஷ்வவஸ்திதம் (அஸ்திரமான சரீரத்திலிருக்கிற சரீரமற்றவன்.) I-2-21.

(3) नित्योनित्यानां चेतनश्चेतनानां நித்யோநித்யாநாம் சேதநஃசேதநாநாம் (நித்தியமானவைகளுக்குள் நித்தியன், சேதனங்களுக்குள் சேதனன்) II-5-13.

(4) अस्तीत्येवोपलब्धव्यः அஸ்தீத்யேவோபலப்தவ்ய꞉ (இருக்கிறான் என்றே அறியத்தக்கது) II-6-13 முதலியவை.

III नैववाचा नमनसा प्राप्तुंशक्यो नचक्षुषा நைவ வாசா ந மநஸா ப்ராப்தும் ஶக்யோ ந சக்ஷுஷா (வாக்கினாலும் மனதினாலும் கண்ணாலும் அடையமுடியாதவன்) முதலிய II-6-12-வது மந்திரத்தால் அபூர்வலிங்கம் விளங்குகிறது.

IV मृत्युप्रोक्तां ம்ருத்யுப்ரோக்தாம் (மிருத்தியுவால் சொல்லப்பட்ட) முதலிய II-6-18-வது மந்திரத்தால் பல லிங்கம் காணப்படுகின்றது..

समोदते मोदनीयं हि लब्ध्वा ஸமோததே மோதநீயம் ஹி லப்த்வா (சந்தோஷரூபத்தை அடைந்து சந்தோஷப்படுகிறான்) என்கிற I-2-13-வது சுருதியும் பல லிங்கத்தை விளக்கிவைக்கிறது.

V यस्यब्रह्मचक्षत्रंच उभे भवत ओदनः யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந꞉ (எவனுக்கு பிராமணக்ஷத்திரியர்கள் சாப்பாடு ஆகிறார்களோ) என்னும் I-2-24-வது வாக்கியத்தால் அத்துவைத பிரம்மத்தின் ஸ்துதியாகிற அர்த்தவாதலிங்கம் கூறப்படுகின்றது. அப்படியே

मृत्योःसमृत्युमाप्नोति य इह नानेवपश्यति ம்ருத்யோ꞉ஸம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி (பேதத்தைப்பார்க்கிறவன் மரணத்திற்குப்பிறகு மரணத்தை அடைகிறான்) என்னும் I-4-10-வது மந்திரத்தால் பேதஞானத்தின் நிந்தாரூபமான அர்த்தவாதலிங்கம் கூறப்படுகின்றது.

VI अग्निर्यथैकोभुवनंप्रविष्टः அக்நிர்யதைகோ புவநம் ப்ரவிஷ்ட꞉ (ஜகத்தை பிரவேசித்திருக்கிற ஒரே அக்கினிபோல) முதலிய II-5-9 முதல் 11 - வரையிலுள்ள மந்திரங்களாலும், येनरूपं रसंगन्धं யேந ரூபம் ரஸம் கந்தம் (எவனால் ரூபாதிகள்) என்கிற II-4-3 முதலிய அநேகவாக்கியங்களாலும் யுக்தி என்னும் உபபத்திலிங்கம் காணப்படுகின்றது.

இந்த லிங்கங்களால் கடவல்லி உபநிஷத்தின் தாற்பரியம் அத்வைத பிரம்மவிஷயமாக இருக்கிறதென்பது நிச்சயமாகிறது.

ओं	ஓம்
तत्सद्ब्रह्मणेनमः	தத்ஸத் ப்ரஹ்மணே நம:
यजुर्वेदीय	யஜுர்வேதீய
कठोपनिषत्	கடோபநிஷத்.

சாந்தி மந்திரம்.

ओं सहनाववतु सहनौ भुनक्तु सहवीर्यं करवावहै ।
तेजस्वि नावधीतमस्तु माविद्विषावहै ॥
ओं शान्तिः । शान्तिः । शान्तिः ॥

ஓம் ஸஹநாவவது ஸஹநௌ புநக்து
ஸஹவீர்யம் கரவாவஹை ।
தேஜஸ்வி நாவதீதமஸ்து மாவித்விஷாவஹை ॥
ஓம் ஶாந்தி: । ஶாந்தி: । ஶாந்தி: ॥

(ब्रह्म ப்ரஹ்ம = பிர்ம்மம்)

नौ सह நௌ ஸஹ = (குரு, நான், ஆகிய) இருவரையும்சேர்த்து

अवतु அவது = இரக்ஷிக்கட்டும்.

नौ सह நௌ ஸஹ = எங்களிருவரையும் சேர்த்து

भुनक्तु புநக்து = பாலனம் செய்யட்டும்

(आवां) सह ஆவாம் ஸஹ = நாம் இருவரும்

वीर्यं வீர்யம் = வித்தியாநிமித்தமான சாமர்த்தியத்தை

करवावहै கரவாவஹை = உபயோகம் செய்யவேண்டும்

नौ अधीतं நௌ அதீதம் = நாம் அத்தியயனம் செய்த கிரந்தமெல்லாம்

तेजस्वि தேஜஸ்வி = அர்த்தத்தை பிரகாசம்செய்கிறதாக

अस्तु அஸ்து = இருக்கட்டும்

(आवां ஆவாம் = நாம்)

माविद्विषावहै மாவித்விஷாவஹை = பரஸ்பரம் துவேஷம் கொள்ளவேண்டாம்

ओं शान्तिः ३ ஓம் ஶாந்தி: 3 = சாந்தி இருக்கட்டும் (3 தடவை)

இந்தசாந்தியின் அர்த்தம் வித்தியாரண்ணிய சுவாமிகளின் பாஷ்யத்-

தை அனுசரித்து செய்யப்பட்டிருக்கிறது:—குருவானவர்கிருதார்த்தராயிருப்பதால் அவர் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளும்படியானதாக ஒன்றுமில்லை. ஆகையால் சிஷ்யன் இந்த மந்திரத்தால் தனக்கும் குருவுக்கும் கலியாணம் (க்ஷேமம்) ஆகவேண்டும் என்று பிரார்த்திக்கிறான்.

सहनाववतु सहनौ भुनक्तु ஸஹநாவவது ஸஹநௌ ஹுநக்து குருவின் அனுக்கிரஹத்தின்பேரில் எந்தப்பிர்ம்மம் எனக்குத்தெரியப்போகிறதோ, அந்தப்பிர்ம்மம் எங்களிருவரையும் இரக்ஷிக்கட்டும், பாலனம் செய்யட்டும். இரக்ஷித்தல், பாலனம்செய்தல் இவ்விரண்டு பதங்களும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பிடுவதானாலும், இரண்டு வெவ்வேறு காலங்களில் இரக்ஷித்தலை ஒரேகாலத்தில் பிரார்த்திப்பதைக் குறிப்பிடுகின்றன. எப்படியெனில்:—(1) குருவானவர் ஆலசியமன்றியில் உபதேசிக்கவேண்டும். அப்படி உபதேசித்த அர்த்தத்தை நான் செவ்வையாக சந்தேகமன்றியில் கிரகிக்கவேண்டும். இவ்விதமாக உபதேசகாலத்தில் பிர்ம்மம் எங்களை இரக்ஷிக்கவேண்டும். இது முதல்வாக்கியத்தின் அர்த்தம். (2) உபதேசித்த அர்த்தத்லைத நான் கிரகித்ததினால் என்னுடைய அஞ்ஞானம் நிவிர்த்தியாகவேண்டும். என்னுடைய அஞ்ஞானநிவர்த்தியைப் பார்த்து குருவுக்குச் சந்தோஷம் உண்டாகவேண்டும். இவ்விதமாக உபதேசத்திற்குப் பிற்பட்டகாலத்திலும் பிர்ம்மம் எங்களை பாலனம்செய்யட்டும். இது இரண்டாவது வாக்கியத்தின் அர்த்தம்.

सह वीर्यं करवावहै ஸஹவீர்யம் கரவாவஹை (நாமிருவரும் எங்களுடைய சாமர்த்தியத்தை வித்தைவிஷயத்தில் உபயோகம் செய்யவேண்டும். அதற்கு உபாயம் எப்படி யெனில்

तेजास्वि...अस्तु தேஜஸ்வி...ஸ்து நாம் அத்தியனம்செய்தகிரந்தங்களெல்லாம் அவைகளின் அர்த்தத்தைப் பிரகாசம்செய்வதாய் இருக்கட்டும்

मा...ரா...நாம் ஒருவரை ஒருவர் துவேஷிக்கக்கூடாது அதாவது குருவானவர் செவ்வையாய் சொல்லிக்கொடுக்கவில்லை என்று சிஷ்யன் குருவைத்துவேஷித்தல், சிஷ்யன் செவ்வையாய் சேவிக்கவில்லை அல்லது கேட்கவில்லை என்று குருவானவர் சந்தோஷமடையாமலிருத்தல் இவ்விரண்டும் சம்பவிக்கக்கூடாது.

ओं शान्तिः ஓம் ஶாந்திः (3 - தடவை) ஆத்தியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் ஆகிய மூன்றுவித் தாபங்களும் சாந்தியுடையட்டும்.

கடோபநிஷத்தின்

1 - வது அத்தியாயம் 1 - வது வல்லி 1 - மந்திரம்.

ओं उशन्हवैवाजश्रवसः सर्ववेदसंददौ ।

तस्य हनाचिकेता नामपुत्र आस ॥ १ ॥

𑌓𑌂 𑌉𑌶𑌨𑍍𑌹𑌵𑍈𑌵𑌾𑌜𑌶𑍍𑌰𑌵𑌸𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌸𑌂 𑌦𑌦𑍌 ।

𑌤𑌸𑍍𑌯𑌹 𑌨𑌚𑌿𑌕𑍇𑌤𑌾 𑌨𑌾𑌮 𑌪𑍁𑌤𑍍𑌰 𑌆𑌸 ॥ ௧ ॥

பத உரை :—

वाजश्रवसः 𑌵𑌾𑌜𑌶𑍍𑌰𑌵𑌸𑌃=வாஜ சிரவசன்

उशन्हवै 𑌉𑌶𑌨𑍍𑌹𑌵𑍈 = (யாக பலத்தை) இச்சித்தவனாய், (𑌹, 𑌵𑍈 இவ்விரண்டும் சென்றவிஷயத்தை ஞாபகத்திற்கு கொண்டுவரும்பொருட்டு உபயோகிக்கப் பட்டிருக்கின்றன.)

सर्ववेदसं 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌸𑌂 = தனக்குச் சாரமாயிருக்கும் சகமான தனத்தையும்

ददौ 𑌦𑌦𑍌 = கொடுத்தான்

तस्यह 𑌤𑌸𑍍𑌯𑌹 = அவனுக்கு

नचिकेतानाम 𑌨𑌚𑌿𑌕𑍇𑌤𑌾 𑌨𑌾𑌮 = நசிகேதன் என்று பெயருள்ள

पुत्रः 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 = புத்திரன்

आस 𑌆𑌸 = இருந்தான்

விசிஷ்டாத்துவைத பாஷ்யம்.

अतसीगुच्छसच्छाय मञ्चितोरस्थलंश्रिया ।

अञ्जनाचलशृङ्गार मञ्जलिर्ममगाहताम् ॥

व्यासंलक्ष्मणयोगीन्द्रं प्रणम्यान्यान्गुरूनपि ।

व्याख्यास्येविदुषांप्रीत्यै कठवल्लीं यथामति ॥

𑌅𑌤𑌸𑍀𑌗𑍁𑌚𑍍𑌛𑌸𑌚𑍍𑌛𑌾𑌯 𑌮𑌞𑍍𑌚𑌿𑌤𑍋𑌰𑌸𑍍𑌥𑌲𑌂𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 ।

𑌅𑌞𑍍𑌜𑌨𑌾𑌚𑌲𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰 𑌮𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑍍𑌮𑌮𑌗𑌾𑌹𑌤𑌾𑌮𑍍 ॥

𑌵𑍍𑌯𑌾𑌸𑌂𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌗𑍁𑌰𑍂𑌨𑌪𑌿 ॥

𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑍇𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑍈 𑌕𑌠𑌵𑌲𑍍𑌲𑍀𑌂𑌯𑌥𑌾𑌮𑌤𑌿 ॥

துவைதபாஷ்யம்.

ஸ்ரீ குருக்களுக்கு நமஸ்காரம். இஹலோக பரலோகங்களின் போகத்தில் விரக்தனையும் சமதமாதி சாதனங்களுடன்கூடியு மிருக்கிற முமுக்ஷுவுக்கு, அநிஷ்ட நிவர்த்தி சுகப்பிராப்தி இவைகளுக்குக் காரணமான பகவத் ஸ்வரூபத்தைத் தெரியப்படுத்த ஏற்பட்டிருந்த போதிலும், இந்த கடோபநிஷத்து சரியாய் வியாக்கியானம் செய்யப்படவில்லை என்றும் உள்ளபடி வியாக்கியானம் செய்யப்படாததினுல் அந்த பகவத்ஸ்வரூபம் தெரியமாட்டாது

ச-பா:—ஓம்-பகவானுயும் [1] சூரிய புத்திரனுயும் [2], பிரம்மவித்தியா ஆசாரியனுயும் இருக்கும் யமனுக்கும் நசிகேதசுக்கும் [3] நமஸ்கா

வி-பா:—காசாம்பூ கொத்துபோல் கருபபாயும் இலக்ஷ்மியால் அலங்கரிக்கப்பட்ட மார்பு உடையவராயும் மைமலைக்குச் சமானமாயுமிருக்கிற பகவானை என்னுடைய அஞ்சலிபந்தம் அடையட்டும்.

வியாசரையும், இலக்ஷ்மணயோகீந்திரரையும், இதர குருக்களையும் நமஸ்கரித்து, வித்துவான்களுடைய பிரீதியின்பொருட்டு கடவல்லியை புத்திக்குத் தக்கபடி வியாக்கியானஞ் செய்கிறேன்.

து-பா:—என்றும் நினைத்து, அதற்குச் சரியான வியாக்கியானம் செய்ய இச்சிக்கிறவராகிய பகவான் பாஷ்யகாரராகிய ஸ்ரீ ஆநந்த தீர்த்தமுனிவர், செய்யப்போகிறகிரந்தம் நிர்விக்கினமாய்முடியும் பொருட்டும், சிஷ்டாசாரப்படி சிஷ்யர்களுக்குத் தெரியும் பொருட்டும், உபநிஷத்திற் சொல்லிய பகவானையே, அதிற் சொல்லிய குணங்களாலேயே, அதாவது (1) **इन्द्रियेभ्यः परा: अर्था:** இந்த்ரியேப்ய: பரா: அர்தா: (கட-I-3-10)என்பதினுல் சகலத்திற்கும் சிரேஷ்டனு யிருத்தல், (2) **ईशानोभूतभव्यस्य** ஈசானோ பூதபவ்யஸ்ய (கட: II-1-12) முதலிய வசனத்தால் ஐசுவரியத்தை உடைத்தாயிருத்தல், (3) **ब्रह्मजज्ञं** ப்ரஹ்மஜஜ்ஞம் (கட I-1-17) என்பதில் **ब्रह्मज** ப்ரஹ்மஜ என்பதினுல் வேதாதிகளில் பிரசித்தமாயிருத்தல், (4) **निहितंगुहायां** நிஹிதம் குஹாயாம் (கட: I-2-20) என்பதினுலும் **अंगुष्ठमात्र: पुरुषो मध्य आत्मनितिष्ठति** அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி (கட: II-4-12) என்பதினுலும் சகலப்பிராணிகளி

1. லோகங்களின் உற்பத்திநாசங்களையும், பிராணிகளின் உற்பத்திநாசங்களையும், வித்தை அவித்தைகளையும் அறிகிறவன் பகவான் என்று ஸ்மிருதியிற் கூறப்பட்டிருக்கிறது. பரமாநந்தஸ்வரூபமான பரப்பிரம்மத்தின் சாக்ஷாத்காரத்தை அடைந்தவனுயும், பிராரப்தகர்மத்தால் ஏற்பட்ட யமபதவி என்னும் அதிகாரத்திலிருந்தபோதிலும், அகர்த்தாவான பிரம்மமேதான் என்னும் அனுபவத்தால் பிராணிகளை ஹிம்சித்தலாகிற தோஷமற்றவனுயும், நசிகேதசுக்கு பிரம்மாத்மைக்கிய வித்தையை உபதேசிக்கிறவனுயுமிருக்கும் யமனுக்கு ஆசாரியார் நமஸ்காரத்தைச் செய்கிறுர்.

2. சூரியபுத்திரன் என்னும் விசேஷணம் யமனுடைய பெருந்தன்மையைக்காட்டுகிறது.

3. யமன் வரதானத்தால் எவனுக்கு பிரம்மவித்தையை உபதேசித்தானே, எவனிடத்தினின்றும் பிரம்மவித்தை லோகத்தில் விர்த்தியை அடைந்ததோ, அவன் என்று அர்த்தம்.

ச-பா:—ரம் [4]. இப்போது [5] காடகோபநிஷத்தின் வல்லிகளுக்கு சுலபமாய் [6] அர்த்தம் தெரியும்பொருட்டு விஸ்தாரமாயிராத [7] வியாக்கியானம் ஆரம்பிக்கப்படுகிறது.

து-பா:-னுடையவும் ஹ்ருதயத்தி லிருத்தல், (5) मध्येवामनमासीनं மத்யே வாமநமாஸீநம் (கட: II-5-3) என்பதினால் வாமன என்கிற பெயரை உடைத்தாயிருத்தல், இவைகளால் ஸ்தோத்திரஞ்செய்து, அடியில் வரும் சுலோகத்தால் நமஸ்காரம் செய்கிறார்.

नमोभगवतेतस्मै सर्वतः परमायते ।

सर्वप्राणिहृदिस्थाय वामनाय नमोनमः ॥

நமோ பகவதே தஸ்மை ஸர்வத: பரமாயதே ।

ஸர்வப்ராணிஹ்ருதிஸ்தாய வாமநாய நமோ நம: ॥

இந்த உபநிஷத்து யமனுக்கும் நசிகேதசுக்கும் நடந்த சம்வாதரூபமாயிருப்பதால், யமதேவன் இதற்கு உருஷி. இந்த உபநிஷத்தின் தேவதை வாமன என்கிற பெயருள்ள ஹரி என்று அறியத்தக்கது. பிரத்தியகாத்மாவான பரப்பிரம்மம் இந்த உபநிஷத்துக்கு விஷயம் என்று சிலர் சொல்லுவது பொருந்தாது. எழுத்துக்களைக் கூட்டி அனுஷ்டுப் முதலிய சந்தஸ்களை அறியவேண்டியது.

ஸ்ரீ சங்கராசாரியார் கடோபநிஷத்தின் பாஷ்யாரம்பத்தில் ஸ்வர்க சப்தத்திற்கு பிரசித்த ஸ்வர்க்கலோகமென்று அர்த்தம் செய்கிறார். அந்த அர்த்தம் பொருந்தாது. ஏனெனின் இரண்டாவது வரத்தால் நசிகேதசுக்குக் கொடுக்கப்பட்ட வித்தை அக்கினியிலிரு

4. யமநசிகேதஸம்வாதமாய்ப் பிரவிர்த்தித்திருக்கிற கடவல்லிக்கு பாஷ்யம் செய்ய இச்சித்தவரான ஆசாரியர் விக்கினமின்றியில் வேலை நிறைவேறும்பொருட்டு இருவருக்கும் நமஸ்காரரூப மங்களாசரணத்தைச் சொல்லி, பக்தி பிரம்மவித்தியை அடையச் சாதகம் என்று காட்டுகிறார்.

5. இது மங்களத்தைக் கூறுகிறது.

6. अत्ता चराचरग्रहणात् அத்தா சராசரக்ரஹணாத் என்னும் (I-2-9) முதலிய பிரம்ம சூத்திரத்தின் அதிகரணங்களாலேயே அர்த்தமாகும்படியாக இருப்பதால் இந்த பாஷ்யம் அனாவசியம் எனின், சுலபமாய் அர்த்தமாகவேண்டியதற்காக இதைச்செய்கிறார்.

7. பர்த்திருப்பிரபஞ்ச முதலானவர்களால் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறபடியால் இப்போது பாஷ்யம் அனாவசியம் எனின், இதரர்களுடைய கிரந்தம் விஸ்தாரமாயும் அர்த்தம் உபாயமாயுமிருப்பதால் இந்த பாஷ்யம் எழுதப்பட்டதென்கிறார்.

ச-பா:-उप + नि + सद्+क्विप् (प्रत्ययं) உப+நி+ஸத் +க்விப் என்னும் விகுதி சேர்ந்து உபநிஷத்து [8] என்னும் பதத்தின் உருவம் ஏற்படுகின்றது. सद् ஸத் என்னும் பகுதிக்கு (1) பிளத்தல் (2) அடைதல் (3) நாசம்செய்தல் ஆகியமூன்று அர்த்தங்களுள. உபநிஷத்து [9] சப்தத்தாலும் வியாக்கியானம் செய்யப்படும் [10] கிரந்த

து-பா:-க்கிற விஷ்ணுவை விஷயமாக்குவதால், மோக்ஷஹேது வாயிருக்கிறதே தவிர கேவலம் ஸ்வர்க்கத்துக்குமட்டும் ஹேது வல்ல.

மேலும், உபநிஷத்து என்னும் பதம் கிரந்தத்தாற் கூறப்பட்டும் அறியப்பட்டுமிருக்கிற வஸ்துவை விஷயமாக்கும் வித்தை என்று அவர் சொல்லுவதும் பொருந்தாது. ஏனெனின், (1) வித்தை என்கிற அர்த்தத்தில் உபநிஷத்து சப்தத்தின் பிரயோகம் காணப்படவில்லை. (2) "உபநிஷத்தை அத்தியயனம் செய்

(8) உபநிஷத்தின் வியாக்யானத்தை ஆரம்பிக்கக்கூடாது. ஏனெனில் அதிகாரி, விஷயம், பிரயோஜனம், சம்பந்தம் இவைகள் இல்லை. (1) அதிகாரி எப்படி இல்லை எனில் :—இச்சைகளால் மலினமாயிருக்கிற சித்தத்தையுடையவர்கள் உபநிஷத்தை சிரவணம் செய்ய மாட்டார்கள். விவேகாதிகளுடன் கூடின அதிகாரிகளோ துர்லபம். ஆகையால் அதிகாரி இல்லை. (2) கர்த்திருத்வாதிகளுடன் ஜீவன் அசம்சாரியான பிர்ம்மம்தான் என்று நிரூபிக்க முடியாத படியால் விஷய மில்லை. (3) பந்தம் சத்தியம் கர்மத்தால் தான் நிவிர்த்தியாகக் கூடியதாகையால் பிரயோஜனமுமில்லை. (4) அதிகாரி விஷயம் பிரயோசனம் இவைகளில்லாத படியால் சம்பந்தமும் சித்திக்க வில்லை. ஆகையால் வியாக்கியானம் ஆரம்பிக்க வேண்டிய தில்லை.

இதற்குச்சமாதானம் :—உபநிஷத் என்னும் பதத்தை உச்சரிப்பதாலேயே பிர்ம்ம வித்தைக்கு அதிகாரி முதலியவை ஏற்படுகின்றன. ஆனதால் இந்த வித்தையைக் கற்பிக்கும் கிரந்தத்துக்கும் அதிகாரி முதலியவை ஏற்படுகின்றன. ஆகையால் வியாக்யானம் செய்யத்தகுந்தது என்று நினைத்து பாஷ்யக்காரர் முதலில் உபநிஷத்து என்னும் பதத்திற்கு அர்த்தம் எழுதுகிறார்.

9 இப்படி உபநிஷத்து என்னும் பதத்தின் ஸ்வரூபத்தைக் காட்டி, उपनिषदं भो ब्रूहि உபநிஷதம் போ ப்ரூஹி (केन கேந IV-7) முதலியவைகளில் உபநிஷத்து சப்தத்தைப் பிரம்மவித்தை என்கிற அர்த்தத்தில் பிரயோகம் செய்திருப்பதால், உபநிஷத்து சப்தத்தால் பிரம்ம வித்தை கூறப்படுகின்றது என்று சொல்லுகிறார்.

10 உம் என்பது மேற்சொல்லிய சுருதி பிரசித்தம் என்பதைக் காட்டுகிறது.

ச-பா:—த்தாலும் பிரதிபாதிக்கப்பட்டும்(அதிகாரியால்) அறியக் கூடியதாயுமிருக்கிற (பிரம்மாத்மைக்கிய மென்கிற) வஸ்துவை விஷயமாக்கும்வித்தை கூறப்படுகின்றது.

எந்த 11 அர்த்தசம் பந்தத்தைக்கொண்டு உபநிஷத்து சப் தத்தால் வித்தை கூறப்படுகிற தெனின் (இனி) சொல்லப்படு கிறது 12.

उप :— உப :—கேட்கப்பட்டும் 13 பார்க்கப்பட்டுமிருக்கிற 14 சகல பதார்த்தங்களிலும் ஆசையற்று 15 சமதமாதிகளுடன்கூடின முமுக்ஷுக்கள் உபநிஷத் சப்தத்தால் சொல்லப்படுவதும் இனி சொல்லப்போகிற லக்ஷணத்தோடு கூடியுமிருக்கிற வித்தையை उपसद्य உபஸத்ய அடைந்து.

து-பா:—கிறேன், செய்துவைக்கிறேன்", என்கிற வியவாஹார வாக்கியங்களிலும்,

"सर्वासुशाखासु आरणमावर्त्तयेत् आरणमावर्त्तयेत् ।
उपनिषदमावर्त्तयेत् उपनिषदंआवर्त्तयेत्" ॥

"ஸர்வாஸு ஶாகாஸு ஆரணமாவர்த்தயேத்
ஆரணமாவர்த்தயேத், உபநிஷதமாவர்த்தயேத்
உபநிஷதமாவர்த்தயேத்"

என்னும் வேதவாக்கியத்திலும், உபநிஷத்து சப்தத்தால் கிரந்தமே அர்த்தமாகின்றது. (3) விசரணமுதலிய பகுதி அர்த்தத்தைக் கொண்டு கேவலம் கிரந்தம் சம்சாரத்தை நாசம் செய்யாத

11 உபநிஷத்து சப்தத்துக்கு வித்தை என்னும் அர்த்தம் சமுதாய சக்தியால் (ரூடியால்) சித்திக்கிறதா ? அல்லது அவயவ சக்தியால் (யோகத்தால்) சித்திக்கிறதா ? முதலாவது பொருந்தாது. ஏனெனின் பிரபஞ்சத்தில் உபநிஷத்து சப்தம் வித்தை என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கப்படவில்லை. இரண்டாவதும் பொருந்தாது. ஏனெனின் யோகார்த்தம் சமம்முதலியவைகளுக்கும் பொருந்தலாம். ஆகவே யோகார்த்தம் ரூடி அர்த்தம் இவ்விரண்டும் பொருந்தாதபடியால் இந்த கேள்வி கேட்கப்பட்டது.

12. षद्लृविशरणगत्यवसादनेषु ஷத்லு விஶரண கத்யவஸாதநேஷு என்கிற ஸ்மிருதியால் அவயவார்த்தத்தைக்கொண்டு உபநிஷத் சப்தத்துக்கு வித்தைஎன்று அர்த்தம் என்பதை காட்டுவதாக பாஷ்யகாரர் சொல்லுகிறார்.

13. ஸ்வர்க்காதிகள்.

14. புஷ்பம், சந்தனம், ஸ்திரீ முதலானவை.

15. நாசமாகின்றன என்றும் காரணத்தால்.

ச-பா:—नि நி:—வேறு வியாபாரங்களைவிட்டு, அந்த பிர்ம்மவித்தையிலே இருந்துகொண்டு அப்படி யிருப்பதினுல் பலன் அவசியம் கிடைக்கும் என்கிற புத்தியுடன் வித்தையை எவர்கள் பரிசீலனம், செய்கிருர்களோ

सादयति ஸாதயதி:—அவர்களுடைய [16] சம்சார காரணமான அவித்தை முதலியவைகளை विशरणात् விஶரணாத் [17] சிதறும்படி செய்தல் என்னும் அர்த்தத்தினுலும் अवसादनात् அவஸாதநாத் [17] விநாசம்செய்தல் என்னும் அர்த்தத்தினுலும் பிரம்மவித்தை உபநிஷத்து என்று சொல்லப்படுகிறது. இந்த அர்த்தத்துக்குச் சுருதிப்பிரமாணம் என்னவெனின் निचाय्यतं मृत्युमुखात्प्रमुच्यते நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே (கட: 1-3-15) (பரமாத்மாவைப் பார்த்து மிருத்யு முகத்தினின்றும் விடுபடுகிருன்). முன் சொன்ன விசேஷணங்களுடன்கூடின [18] முமுக்ஷுக்களை பரப்பிர்ம்மத்தை அடையும்படி [19] செய்வதினுல் பிர்ம்மவித்தை உபநிஷத்து என்று சொல்லப்படுகிறது. இதற்குச் சுருதிப்பிரமாணம்:—

து-பா:—படியால் வித்தையே முக்கியார்த்தம் என்று பூர்வபக்ஷி சொல்வதும் பொருந்தாது. ஏனெனின் கிரந்தமும் ஞானபூர்வமாக அவித்தையின் நிவர்த்திக்குக் காரணமாகின்றது. (4) மேலும் எந்த அர்த்தத்தில் எந்த சப்தத்திற்குப் பிரயோகம் ஏற்பட்டிருக்கிறதோ அது முக்கியமல்லவென்றும், எதில் பிரயோகமில்லையோ அது முக்கியமென்றும் ஒரு இடத்திலும் காணப்படவில்லை.

இந்தப்படி சங்கரபாஷ்யத்தைக் கண்டிக்க வேண்டியதற்காக ஆதியில் स्वर्गलोका अमृतत्वं भजन्ते ஸ்வர்கலோகா அம்ருதத்வம் பஜந்தே (கட I-1-13) என்கிற வாக்கியத்திற்கு வியாக்கியானம் செய்யப்பட்டு பிறகு கிரமமாக அடிமுதல் வியாக்கியானம் செய்யப்படுகின்றது. सर्वलोका: ஸர்வலோகா: என்னும் மந்திரத்தின் வியாக்கியானத்தை அம்மந்திரத்திற்குக் கீழ் கொடுக்கப்படும்.

अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம் (கட: I-1-14) முதலிய வசனங்களால் பிரம்ம வித்தையை இனி சொல்லப்போகிருர்.

16. முதலிய என்பதால் காமம் கர்மம் முதலியவைகளையும் அறியவும்.

17. ஷத் பகுதியின் இரண்டு அர்த்தங்களை முதலில் விவரிக்கிருர்.

18. கர்த்தா என்னும் பாவம் முதலிய அநர்த்தங்களுக்குக் காரணமான அவித்தையை நாசம்செய்து சாதனசதுஷ்டய சம்பத்திகளுடன் கூடின.

19. சத் பகுதியின் கதி அர்த்தத்தை எடுத்துக்கொண்டு உபநிஷத் பதத்திற்கு அர்த்தம் சொல்லுகிருர்.

ச - பா:---ब्रह्मप्राप्तोविरजोऽभूद्विमृत्यु: (கட.வல்லி II - 3 - 18) ப்ரஹ்மப்ராப்தோவிரஜோऽபூத்விம்ருத்யு: (வித்தையால் பிர்ம்மத்தை அடைந்தவன் அஞ்ஞான மற்றவனாயும் மிருத்தியுவால் குறிப்பிடப்பட்ட சம்சார மற்றவனாயும் ஆகிறான்). லோகங்களுக்கு[20] ஆதியாயும் (I-1-15) பிரம்மத்தினின்றும் உண்டானவனாயும் (I-1-17) ஞாதாவாயுமிருக்கிற (I-1-17) யாதொரு அக்கினி உண்டோ அந்த அக்கினியை விஷயமாக்குகிறதாயும், நசிகேதசால் யமனிடத்தில் இரண்டாவது வரமாகக் கேட்கப்பட்டதாயுமிருக்கிற அக்கினிவித்தை ஸ்வர்க்கலோகத்தை அடைவிக்கிறதினால் இதரலோகத்தில் அடிக்கடி உண்டாகிற கர்பவாசம் ஜனனம் ஜரை மரணம் முதலிய உபத்திரவங்களை अवसादनेन அவஸாதநேந நாசம் செய்வதினால் षद् ஷத் என்னும் பகுதியின் நாசம்செய்தல் என்னும் அர்த்தம் கூடிவருவதால் அக்கினி வித்தையும் உபநிஷத்து என்று சொல்லப்படலாம். இதற்குச் சுருதிப்பிரமாணம் :—

स्वर्लोका अमृतत्वं भजन्ते ஸ்வர்லோகா அம்ருதத்வம் பஜந்தே (கட:-I-1-13) (ஸ்வர்க்கலோகத்தை அபேக்ஷித்து யாகம்செய்கிறவர்கள் மரணமில்லாத தன்மையை அடைகிறார்கள்)

ஆக்ஷேபம் :—அத்தியயனம் செய்கிறவனும் அத்தியயனம் செய்து வைக்கிறவனும் கிரந்தத்தை உபநிஷத்தாகச் சொல்லுகிறார்களே. உபநிஷத்தை அத்தியயனம் செய்கிறோம், உபநிஷத்தை அத்தியயனம் செய்து வைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனதால் பிர்ம்மவித்தை உபநிஷத்து என்கிற பதத்திற்கு எப்படி அர்த்தமாகும்.

சமாதானம் :—இதில் தோஷமில்லை. அவித்தை முதலிய சம்சார காரணத்தை நாசம்செய்தல் என்கிற षद्‌ ஷத் என்னும்

து-பா:-இதற்குக் கேவலம் மோக்ஷந்தான் பலனல்ல, ஸ்வர்க்கமும் பலன். இந்த வித்தையைச்சொல்லும்பொருட்டு சுரோதாவு(கேட்கிறவனு)க்கு சிரத்தை உண்டாவதற்காக வேதபுருஷன் ஒரு கதையை उशन् உசந் முதலிய வாக்கியங்களால் சொல்லுகிறார்.

20. வியாக்கியானம் செய்ய இச்சிக்கப்பட்ட கிரந்தத்தால் பிரதிபாதிக்கப்படும் வித்தை உபநிஷத்து என்று சொல்லுவது அயுக்தம். அப்படியானால் அக்கினி வித்தையும் உபநிஷத்து ஆகலாமே. இந்த சங்கைக்கு, அக்கினி வித்தை விஷயத்தில் षद्‌ ஷத் பகுதிக்கு, நாசம் செய்தல் என்கிற அர்த்தத்தை பொருந்துவதால், உபநிஷத்து என்னும் பதத்தை உபயோகிக்கலாம் என்று சமாதானம் சொல்லுகிறார்.

ச—பா:—பகுதியின் அர்த்தம் கேவலம் கிரந்தவிஷயத்திற் கிடைக்க மாட்டாது. அது வித்தை விஷயத்தில் தான் உபயோகப்படும். ஆயினும் கிரந்தமும் அந்தவித்தைக்கே சாதகமாயிருக்கிறபடியால் அதையும் உபநிஷத்து என்று சொல்லலாம். ஆயுசுக்குச் சாதகமான நெய்யையே ஆயுசு என்று சொல்லுவது போலும். ஆகையால் உபநிஷத்துபதம் பிர்ம்மவித்தையை முக்கியமாயும் கிரந்தத்தை உபசாரமாயும் குறிப்பிடுகிறது.

अग्निं அக்நிம் = இஷ்டாசிதியிலிருக்கிற அக்கினியிலிருக்கிறதாயும், அக்ரேபவ: முதலிலிருப்பதால் அக்கினி என்றுபெயருள்ள பரமாத்மாவை

अध्येषि அத்யேஷி = அதிகமாய், விசேஷமாய் அறிவீர்.

ச-பா:—हे मृत्यो ஹெ ம்ருத்யோ = ஓ யமனே

श्रद्धानाय ஶ்ரத்தாநாய = சிரத்தையுடன் கூடின

मह्यं மஹ்யம் = எனக்கு

त्वं த்வம் = நீர்

प्रब्रूहि ப்ரப்ரூஹி = சொல்லும்.

(येन चितेन யேந சிதேந = எந்த அக்கினிசயனத்தால்)

स्वर्गलोकाः ஸ்வர்கலோகா: = ஸ்வர்க்கலோகத்தை அடைந்த ஜனங்கள் (யாகம் செய்தவர்கள்)

अमृतत्वं அம்ருதத்வம் = மரணமற்ற தேவபாவத்தை

விபா:—श्रद्धानाय ஶ்ரத்தாநாய :—மோக்ஷத்தில் சிரத்தையுள்ள.

स्वर्गलोकाः ஸ்வர்கலோகா: :—ஸ்வர்க்கலோகத்தில் என்ன சித்திக்குமெனின் சொல்லுகிறார். स्वर्गः ஸ்வர்க: लोकः येषांते லோக: யேஷாம்தே = எவர்களுக்கு ஸ்வர்க்கலோகம் உண்டோ அவர்கள் பரமபதத்தை அடைந்தவர்கள் என்பதுகருத்து.

परंज्योतिरुपसंपद्य स्वेन रूपेण अभिनिष्पद्यते பரம்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே என்னும் வாக்கியத்தால் (வைகுண்ட) தேச விசேஷத்திலிருக்கும் பரப்பிர்ம்மத்தை அடைந்ததின்பேரில் தன்னுடைய ஸ்வரூபம் பிரகாசிக்கிறது. இதுவே மோக்ஷமென்னும் अमृतत्वं அம்ருதத்வம் என்பது கருத்து.

(மற்ற பதங்கள் ஸ்பஷ்டம் - பதஉரையைப்பார்க்க) ॥ 13 ॥

து-பா:—तं தம் = சிதியிலிருக்கிற அக்கினி என்று பெயருள்ள ஹரியை

श्रद्धानाय ஶ்ரத்தாநாய = சிரத்தையுடன் கூடின

मह्यं மஹ்யம் = எனக்கு

प्रब्रूहि ப்ரப்ரூஹி = செவ்வையாகச் சொல்லும். ஏனெனின் ஸ்வர்க்க சாதனத்தைச் சொல்லும் ஸ்வரூபமாய்மட்டும் உம்முடைய வசனம் அவசியமல்ல. ஜ்யோதிஷ்டோமாதி அக்கினியிலிருக்கிற விஷ்ணுவை அறிகிறவர்களுக்கு ஸ்வர்க்கம்மட்டும் பலனல்ல. ஆனால் ஸ்வர்க்கத்தை அடைந்தபிறகு மோக்ஷமும் கிரமமாக கிடைக்கிறதென்று சொல்லுகிறார்.

(येन अग्निना யேந அக்நிநா = எந்த அக்கினியால்)

स्वर्गलोकाः ஸ்வர்கலோகா: = ஸ்வர்க்கலோகம் எவர்களுக்கு உண்டோ அவர்கள் அல்லது ஸ்வர்க்கவாசிகள் மந்வந்திரம் வரையில் ஸ்வர்க்க லோகத்திலிருந்து பிறகு

अमृतत्वं அம்ருதத்வம் = முக்தியை

ச-பா:—भजन्ते ஹஜ்ஞெ = அடைகிறார்களோ,

एतत् வஎதக் = இந்த அக்கினி ஞானத்தை

द्वितीयेन விதீயெந = இரண்டாவதான

वरेण வரெண = வரத்தால்

वृणे வ்ருணெ = கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ:—स:...अध्येषि ஸ:...குயெஷி:—இவ்விதகுணத்துடன்[48] கூடின ஸ்வர்க்கலோகத்தை அடையச் சாதனமான அக்கினியை பிரசித்தனான யமனாகிய நீர் அறிந்திருக்கிறீர்.

मृत्यो मह्यम् ம்ருத்யோ...மஹ்யம்:—ஓ யமனே, இப்படியிருப்பதால்[49], ஸ்வர்க்கத்தை பிரார்த்திக்கும் சிரத்தாவானான[50] எனக்குச் சொல்லும்.

து-பா:—भजन्ते ஹஜ்ஞெ = அடைகிறார்கள்

एतत् வஎதக் = இந்த அக்கினிரூப பரமாத்ம ஞானத்தை

द्वितीयेन वरेण விதீயெந வரெண = இரண்டாவது வரத்தால்

वृणे வ்ருணெ = வரிக்கிறேன். இரண்டாம் வரனைக் கேட்கிறேன் என்று அர்த்தம்.

10 - வது மந்திரத்திற் கூறிய பிரமாண வாக்கியத்தில் नाचिकेताग्निं हरिं நாசிகெதாக்நிம் ஹரிம் = என்று சொல்லியிருப்பதால், இரண்டாவது கேள்விக்கும் உத்தரத்திற்கும் கேவலம் அக்கினிதான் விஷயம் என்று சொல்லுவது பொருந்தாது. ஹரி என்றால் ஹரியின் ஞானம்.

12 - வது மந்திரத்தில் ஸ்வர்க்க லோகத்தில் பயமில்லை என்றும் முதலிய விவரத்தால் ஸ்வர்க்கத்தின் ஸ்வரூபமும் 13 - வது மந்திரத்தில் அதை அடையும்படிசெய்யும் அக்கினியும் சொல்லியிருப்பதாக சிலர் சொல்லுகிறார்கள். அது பொருந்தாது. ஏனெனின் அக்கினி மாத்திரம் ஸ்வர்க்க சாதனமானால், அக்கினிசயனம் செய்யாதவனுக்கும் ஸ்வர்க்கம் கிடைக்கலாம். யஜுர்வேதத்தில் அக்கினிசயனம் செய்யாதவனுக்கு ஸ்வர்க்கப்பிராப்தி சொல்

48. பயம், மரணம், பசி, தாகம், சோகம், இவைகளற்ற

49. நீர் தேவதையானதால் உமக்கு ஞானமிருக்கிறது என்று பாவம் உமக்கு ஞானமிருப்பதால் சொல்லும். உம்முடைய ஞானத்துக்கு இதுவே பலம்.

50. அக்கினி ஞானத்தை சிரத்தை யில்லாதவனுக்கும், அதின் பலத்தில் இச்சையற்றவனுக்கும் சொல்லக்கூடாது. இந்தச் சிரத்தை ஸ்வர்க்க இச்சையைக் காண்பிக்கிறது.

ச-பா:—स्वर्गलोकाः...भजन्ते ஸ்வர்க்லோகா:...ஹஜந்தே:—எந்த அக்கினிசயனத்தால் உபாசனையால் ஸ்வர்க்கலோகத்தை யடைய யாகம் செய்கிறவர்கள் மரணதர்மமற்ற தேவபாவத்தை அடைகிறார்களோ

एतत्...वरेण ஏதத்...வரேண:—அந்த அக்கினிஞானத்தை இரண்டாவது வரத்தால் யாசிக்கிறேன்[51]. ॥ 13 ॥

து-பா:—லியிருப்பதால் இவ்விடத்திலும் அக்கினிசயனமே ஸ்வர்க்கசாதனம் என்று கூறியிருப்பதாகச் சொல்லக்கூடாது. ஏனெனின் அக்கினி சயனமும் ஸ்வர்க்கப்பிராப்திக்கு ஹேதுவானாலும், स्वर्गलोका अमृतत्वं भजन्ते ஸ்வர்க்லோகா அம்ருதத்வம் ஹஜந்தே என்று ஸ்வர்க்கம் அடையப்பட்டபிறகு மோக்ஷமும் அடையப்படுவதாகக் கூறியிருப்பதால் அந்த மோக்ஷப் பிராப்திக்கு அக்கினி சயனம் ஹேதுவாகமாட்டாது. மேலும் தமேவம் வித்வான் முதலிய சுருதி விரோதமும் சம்பவிக்கிறது. ஆகையால் அக்கினி பதத்திற்கு அக்கினி சயனம் என்று அர்த்தம் செய்யலாகாது.

अमृतत्वं அம்ருதத்வம் என்பதற்கு மரணமில்லாமைஎன்று அர்த்தம் செய்வதும் அயுக்தம். ஸ்வர்க்கலோகத்தை அடைந்தவர்களுக்கு மரணமில்லாமை எப்போதும் கிடையாது. மன்வந்திர காலம்வரையில் வசிக்கும் தன்மைஎன்றும் அர்த்தம் செய்யக்கூடாது. ஏனெனின் முந்தின மந்திரத்தில் நதத்ரத்வம் என்னும் வாக்கியத்தாலேயே இந்த அர்த்தம் கிடைத்துவிட்டது. தேவ பாவப்பிராப்தி அர்த்தமெனின், தேவ பாவத்தை யோக்கியன் மட்டும் அடையலாமேதவிர கர்மம்செய்யும் எல்லாரும்அடையமாட்டார். மோக்ஷத்தையும் யோக்கியன்மட்டும் அடையக்கூடியவனே எனின், மெய்யே, अग्नौ विष्णुं அக்னௌ விஷ்ணும் என்னும் பிரமாண வாக்கியத்தால் இந்த மந்திரம் மோக்ஷ யோக்கியனை உத்தேசித்தே ஏற்பட்டிருக்கின்றது. உன் பக்ஷத்தில் இப்படிப்பட்ட பிரமாண வாக்கியம் யாதொன்றுமில்லை.

பிரமாண வாக்கியம்:—

अग्नौ विष्णुं सदा ध्यायन् त्रिशोऽग्नि नाचिकेतसम् ।
उष्यमन्वन्तरं कालममृतत्वं भजेत् क्रमात् ॥ (इति ब्रह्मसारे)

அக்னௌவிஷ்ணும்ஸதாத்யாயந் த்ரிஶோऽக்னிம்நாசிகேதஸம் ।
உஷ்யமந்வந்தரம்காலம் அம்ருதத்வம்ஹஜேத்க்ரமாத் ॥
(இதி ப்ரஹ்மஸாரே)

51. அக்கினிவித்தை மரணமற்ற தன்மைக்குச் சாதனமாயிருப்பதால், அதை கேட்கிறேன்.

I - 1 - 14 - வது மந்திரம்.

प्र ते ब्रवीमि तदु मे निबोध स्वर्ग्यमग्निं नचिकेतः प्रजानन् ।
अनन्तलोकाप्तिमथो प्रतिष्ठां विद्धि त्वमेतं निहितं गुहायाम् ॥ १४ ॥

ப்ர தே ப்ரவீமி தது மே நிபோதய ஸ்வர்க்யமக்நிம் நசிகேதஃ ப்ரஜாநந் । அநந்தலோகாப்திமதோ ப்ரதிஷ்டாம் வித்தி த்வமேதம் நிஹிதம் குஹாயாம் ॥ ௧௪ ॥

हे नचिकेतः ஹே நசிகேதஃ = ஓ நசிகேதசே
स्वर्ग्यं ஸ்வர்க்யம் = ஸ்வர்க்க சாதனமான
अग्निं அக்நிம் = அக்கினிஞானத்தை
प्रजानन् ப்ரஜாநந் = நான் அறிந்தவனாய்
ते தே = உனக்கு
प्रब्रवीमि ப்ரப்ரவீமி = சொல்லுகிறேன்.
उ உ = எது (உன்னால் பிரார்த்திக்கப்பட்டதோ)
तत् தத் = அந்த அக்கினிஞானத்தை
मे மே = என்னுடைய வார்த்தையினின்றும்
निबोध நிபோதய = ஏகாக்கிர சித்தத்துடன் தெரிந்துகொள்.

I - 1 - 14 - வது மந்திரம்.

விபா:—அ-கை:—இப்படி சொல்லப்பட்ட யமன் சொல்லுகிறான்.

ते தே=பிரார்த்திக்கிற உனக்கு
प्रब्रवीमि ப்ரப்ரவீமி=நான் சொல்லுகிறேன்.
तदुमेनिबोध ததுமேநிபோதய :—என்னுடைய உபதேசத்தால் அதை நீ அறி என்பது கருத்து.

I - 1 - 14 - வது மந்திரம்.

து-பா:—அ-கை :—இப்படி யாசிக்கப்பட்ட யமன் இந்தமந்திரத்தினால் உத்தரம் சொல்லுகிறான்.

हे नचिकेतः ஹே நசிகேதஃ = ஓ நசிகேதா
स्वर्ग्यं ஸ்வர்க்யம் = ஸ்வர்க்க சாதனமான
अग्निं அக்நிம் = சித்தியிலிருக்கிற அக்கினி என்று பெயருள்ள ஹரியை
प्रजानन् ப்ரஜாநந் = விசேஷமாய் அறிந்த நான்
ते தே = உனக்கு
प्रब्रवीमि ப்ரப்ரவீமி = சொல்லுகிறேன்.
तत् उ தத் உ = அதையே, அதாவது நீ கேட்டதும் நான் சொல்லப் போகிறதுமான அக்கினி என்று பெயருள்ள ஹரியினுடைய ஸ்வரூபத்தையே
मे மே = என்னிடமிருந்து
निबोध நிபோதய = அறி

ச-பா:—अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம் = ஸ்வர்க்கலோக பலப்பிராப்திக்குச் சாதனமாயும்

अथो அதோ = இன்னமும்

प्रतिष्ठां ப்ரதிஷ்டாம் = விராட்டாகிய ஜகத்துக்கு ஆசிரயமாயும்

गुहायां குஹாயாம் = வித்துவான்களுடைய புத்தி ரூபகுஹையில்

வி-பா:—स्वर्ग्य ஸ்வர்க்யம் :—ஞானத்தின் பலத்தைக் காட்டுகிறார்.

अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம் :— விஷ்ணுலோக பிராப்தியை.

(तद्विष्णोः परमंपदं தத்விஷ்ணோ: பரமம்பதம் என்று மேல்சொல்லப்படுகிறது.)

अथो அதோ :—விஷ்ணுலோகத்தை அடைந்தபிறகு

प्रतिष्ठां ப்ரதிஷ்டாம் :—திரும்பி வராமையை

लभते லபதே = அடைகிறான்)

து-பா:—அ-கை:—உத்தரார்த்தத்தால்தான் பிரதிஞ்ஞை செய்த ஸ்வர்க்க சாதனமான அக்கினி ஸ்வரூபத்தை யமன் சொல்லுகிறான்.

अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம் = அநந்தஸ்ய + லோக: + ஆப்யதே + ஏனஸ: = அநந்த லோகாப்தி: அதாவது விஷ்ணு லோகம். இது ஒரு விக்கிரகம் மற்றொரு விக்கிரகம் :—அநந்தம் + லோக: + ஆப்யதே + ஏனஸ: = அநந்த லோகாப்தி; அதாவது நித்தியலோகம். ஆகவே அநந்த லோகாப்தி என்பதற்கு விஷ்ணு அல்லது நித்தியலோகத்தை அடைவதற்குச் சாதனம் என்று அர்த்தம்.

இதற்கு ஸ்வர்க்கலோக பலப்பிராப்திக்குச் சாதனம் என்று சிலர் அர்த்தம் செய்வது பொருந்தாது. ஏனெனின் ஸ்வர்க்கம் அநந்தமன்று. விஷ்ணு எங்கும் வியாபித்திருப்பதால் பிரசித்த ஸ்வர்க்கலோகமும் விஷ்ணுலோகமென்று ஏன் சொல்லக்கூடாதெனின், முக்கியமாய் விஷ்ணுலோகத்திற்கே அந்தப் பெயர் விளங்குவதாலும், பிரசித்த ஸ்வர்க்கலோகம் நாசமுடையதாக இருப்பதாலும் அநந்தலோகம் என்பது விஷ்ணு லோகத்தையே கூறும்.

अथो அதோ = மேலும்

प्रतिष्ठां ப்ரதிஷ்டாம் = ஸ்வர்க்க லோகத்தின் ஸ்திதிக்குக் காரணமாயும்

गुहायां குஹாயாம் = சகலப் பிராணிகளின் ஹிருதய குஹையில்

ச-பா:—निहितं நிஹிதம் = வைக்கப்பட்டதுமாக
एनं வனம் = இந்த அக்கினியை
त्वं த்வம் = நீ
विद्धि வித்தி = அறி

அ - கை:—இது யமனுடைய பிரதிஞ்ஞை:—

ப்ர...प्रजानन् ப்ர...ப்ரஜாநந் :—ஓ நசிகேதசா, ஸ்வர்க்கசாதனமான எந்த அக்கினிஞானத்தை நீ பிரார்த்தித்தாயோ அதை நான் அறிந்திருக்கிறேன். அதை உனக்குச் சொல்லுகிறேன். என் வார்த்தை கேள். நான் சொல்லுகிறேன் "நீகேள்" என்று சொன்னவார்த்தை சிஷ்யன் ஏகாக்கிரசித்தத்துடன் இருக்கவேண்டியதற்காகத்தான்

விபா:—विद्धि · गुहायां வித்தி...குஹாயாம் :—அந்த ஞானத்திற்கு இப்படிப்பட்ட சாமர்த்தியம் எப்படி உண்டாகுமென்று நினைக்கிறவனைக்குறித்துச் சொல்லுகிறார். மேற்சொன்ன ஞானம் பிரம்மோபாசனத்துக்கு அங்கமானதால், அந்த ஞானம் மோக்ஷத்துக்குக் காரணமாகும். இதின் ஸ்வரூபம் निहितं गुहायां நிஹிதம் குஹாயாம் அதாவது புத்திகுஹையில் அடங்கியிருக்கிறது. அதாவது அறியமுடியாததாயிருக்கிறது. நீ அறி என்பது கருத்து. (அல்லது) ஞானத்தைக் குறிப்பிடும் वित् வித் என்னும் பகுதிக்கு லாபம் என்று அர்த்தம் ஆகலாம். அப்போது மந்திரத்தின் இரண்டாவது பாகத்துக்கு அர்த்தமென்னவெனின் அக்கினியை அறிந்த நீ அநந்தலோகப் பிராப்தியையும், பிரதிஷ்டையையும் அடை. இந்தபக்ஷத்தில் மேற்சொன்ன லோகப்பிராப்தி காரியமாயும் அக்கினிஞானம் காரணமாயும் ஏற்படுகிறது. ॥ 14 ॥

துபா:—निहितं நிஹிதம் = அதிகமா யிருக்கிறதும்,

(1) கேவலம் வித்வான்களுடைய புத்தியில் இருப்பதாக சிலர் சொல்லுவது பொருந்தாது (2) மேலும் आत्मास्यजन्तोः निहितोगुहायां ஆத்மாஸ்யஜந்தோ: நிஹிதோகுஹாயாம் (I - 2 - 20) என்னும் முதலிய மேல்வாக்கியங்களில் ஆத்மா ஜீவனுடைய ஹிருதய குஹையில் இருப்பதாக சொல்லியிருக்கிறது. (3) நீரும் அப்படியே வியாக்கியானம் செய்திருப்பதால் இவ்விடத்திலும் ஏன் அப்படி செய்யக்கூடாது. (4) அக்கினி ஹிருதய குஹையிலிருப்பதாகச் சொல்லக் கூடாதபடியால், புத்தி என்றே அர்த்தம் செய்யவேண்டுமெனின், அக்கினி பதத்திற்கு விஷ்ணு என்று அர்த்தம் செய்யப்பட்டிருப்பதால் ஹிருதயகுஹை என்ற

ச-பா:-अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம்:—இப்போது[52] அக்கினி யை ஸ்துதிக்கிறார். இந்த அக்கினி ஸ்வர்க்கலோகமாகிய பலத்தை அடையச் சாதனமாயிருக்கிறது,

प्रतिष्ठां ப்ரதிஷ்டாம் விராட்டாய்[53] ஜகத்துக்கு ஆதாரமாயிருக் கிறது

विद्धि... வித்தி...:—வித்துவான்களுடைய புத்தி குஹையில் இருக்கிறது[54]. நான் சொல்லுகிற அக்கினியை நீ தெரிந்து கொள். ॥ 14 ॥

து-பா:—அர்த்தமே பொருந்தும்.

(மேல் மந்திரத்தின் முதல் ஐந்து பதங்கள் இவ்விடத்தில் சே ர்த்து அர்த்தம் செய்யப்படுகின்றன.)

लोकादिं லோகாதிம் = சகல லோகங்களுக்கும் ஆதிகாரணமான

तं एतं தம் ஏதம் = நீ கேட்ட இந்த

अग्निं அக்நிம் = அக்கினி என்று பெயருள்ள ஹரியை

विद्धि வித்தி = அறி (என்று)

तस्मै उवाच தஸ்மை உவாச = யமன் நசிகேதசுக்குச் சொன் னான். **லோகாதிம்** என்பதற்கு முதலாவது சரீரத்தை உடையவன் என்னும் வியாக்கியானம் பொருந்தாது. ஏனெனின் அக்கினிக் குத்தான் முதல் சரீரம் உண்டாயிற்று என்பதற்குப் பிரமாண மில்லை.

तत्तेजोऽसृजत தத்தேஜோऽஸ்ருஜத (சா-VI-2-3) என்பதினால் அக்கினியே முதலாவது என்று சொல்லக்கூடாது. ஏனெனின் **आकाशात् वायुः वायोःअग्निः** ஆகாசாத் வாயு: வாயோ: அக்நி: (தை- II-1) என்று சொல்லியிருக்கிறது. குஹையிலிருக்கிற தென்பதற் குப் பிரமாண வசனங்கள்:—

(1) गुहांप्रविष्टावात्मानौहितद्दर्शनात् ब्र-सू (I-2-11)

(2) योवेदनिहितं गुहायां (तै II-1)

(1) குஹாம்ப்ரவிஷ்டாவாத்மாநௌஹிதத்தர்சநாத் ।

(ப்ர-ஸூ. I-2-11)

(2) யோவேதநிஹிதம்குஹாயாம் । (தை II-1) இந்த மந் திரத்திற்கும் மேல் மந்திரத்திற்கும் பிரமாண வாக்கியம்:—

52. பிரவிர்த்தி உண்டாகும் பொருட்டுச் சொல்லுகிறார்.

53. **स त्रेधात्मानं व्याकुरुत** ஸ த்ரேதாத்மாநம் வ்யாகுருத

என்கிற சுருதிப்படி அக்கினி வாயு ஆதித்தியன் ஆகிய மூன்று ரூப மாக சமஷ்டி விராட் இருக்கிறான். அக்கினி இந்த விராட்ரூபமாய் ஜகத் துக்கு ஆதாரமாக இருக்கிறது.

54. இந்த உபநிஷத்தின் II - 1 - 7 & 8 பார்க்க

I - 1 - 15 - வது மந்திரம்.

लोकादिमग्निं तमुवाच तस्मै या इष्टका यावतीर्वा यथावा ।
स चापि तत्प्रत्यवदद्यथोक्तमथास्य मृत्युः पुनरेवाह तुष्टः ॥ १५ ॥

லோகாதிமக்நிம் தமுவாச தஸ்மை யா இஷ்டகாயாவதீர்வா யதாவா । ஸசாபி தத்ப்ரத்யவதத்யதோக்தமதாஸ்ய ம்ருத்யு: புநரேவாஹ துஷ்ட: ॥ 15 ॥

लोकादिं லோகாதிம் = லோகங்களுக்கு ஆதியாயும்
तं தம் = பிரசித்தமாயுமிருக்கிற
अग्निं அக்நிம் = அக்கினியையும்
याः इष्टकाः யா: இஷ்டகா: = சயனம் என்கிற யஞ்ஞத்தில் எவ்விதமான, யஞ்ஞவேதிக்கு உபயோகமான கற்களோ

I - 1 - 15 - வது மந்திரம்.

வி-பா:—लोकादिं லோகாதிம் :—லோகத்துக்குக் காரணமான, (ஸ்வர்க்கசாதனமான)

तं अग्निं उवाच தம் அக்நிம் உவாச :—அந்த அக்கினியைச் சொன்னான்.

या…यथावा யா…யதாவா :—எப்படிப்பட்ட இஷ்டகைகள் (செங்கற்கள்) எத்தனை இஷ்டகைகள், எவ்விதமாக அவைகளை

து-பா:-अग्रथत्वादाग्निनामासौ नाचिकेताग्निगोहरिः ।
लोकोविष्णोरनन्तस्य तज्ज्ञानान्नित्य आप्यते ।
प्रतिष्ठासर्वलोकस्य सविष्णुस्सर्वदृद्गतः ।
सएवसर्वलोकादि स्तं ज्ञात्वामुच्यतेध्रुवम् ॥ (गतिसारे)
அக்ரத்வாதக்நிநாமாஸௌ நாசிகேதாக்நிகோஹரி: ।
லோகோவிஷ்ணோரநந்தஸ்ய தஜ்ஞாநாந்நித்ய ஆப்யதே ।
ப்ரதிஷ்டாஸர்வலோகஸ்ய ஸவிஷ்ணுஸ்ஸர்வஹ்ருத்கத: ।
ஸஏவஸர்வலோகாதி ஸ்தம் ஜ்ஞாத்வாமுச்யதேத்ருவம் ॥
(கதிஸாரே) ॥ 14 ॥

I - 1 - 15 வது மந்திரம்.

लोकादिमग्निं तमुवाचतस्मै லோகாதிமக்நிம் தமுவாசதஸ்மை என்பதற்கு முந்தின மந்திரத்தில் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. முன் சொன்னதற்கு அதிகமாக இந்த மந்திரத்தில் யமன் சொல்லுகிறான்.

इष्टकाः இஷ்டகா:=இஷ்டகைகளின் (செங்கற்களின்) தேவதையான விஷ்ணு.

याः யா: = எந்த ஸ்வரூபமுள்ளவன்

ச-பா:-यावतीः वा யாவதீ: வா = எவ்வளவு எண்ணிக்கை உள்ளவையோ

यथावा யதாவா = எந்தப்பிரகாரத்தினுல் அதில் அக்கினி தரிக்கப்படுமோ, இவைகளை எல்லாம்

मृत्युः ம்ருத்யு: = யமன்

तस्मै தஸ்மை = நசிகேதசுக்கு

उवाच உவாச = சொன்னுன்

सः च अपि ஸ: ச அபி = அந்த நசிகேதசும்

तत् தத் = அப்படி சொன்னதை

यथोक्तं யதோக்தம் = சொன்னபிரகாரம்

अस्य அஸ்ய = யமனுக்கு

प्रत्यवदत् ப்ரத்யவதத் = திரும்பிச் சொன்னுன்

अथ அத = பிறகு

तुष्टः துஷ்ட: = நசிகேதஸ்சொன்னதினுல் சந்தோஷத்தை அடைந்த

मृत्युः = ம்ருத்யு: = யமன்

पुनः एव புந: ஏவ = மறுபடியும்

आह ஆஹ = சொன்னுன்.

வி-பா:—அடுக்க வேண்டியது, இவைகளை எல்லாம் சொன்னுன் என்பது கருத்து.

सः च ஸ: ச = அந்த நசிகேதசும்

तत् தத் = கேட்ட எல்லாவற்றையும்

यथोक्तं प्रत्यवदत् யதோக்தம் ப்ரத்யவதத் = அனுவாதித்துத் தானும் சொன்னுன்.

अथ अस्य तुष्टः அத அஸ்ய துஷ்ட: :—சிஷ்யனுடைய கிரகிக்கும் தன்மையைபார்த்து சந்தோஷமடைந்த

मृत्युः ம்ருத்யு: = யமன்

पुनः एवआह புந: ஏவ ஆஹ :—மறுபடியும் சொன்னுன்.

यावत्यः யாவத்ய: என்பதற்குப் பதிலாக यावतीः யாவதீ: என்கிற பிரயோகம் வேதசம்மதம். ॥ 15 ॥

து-பா:-यावतीःवा யாவதீ:வா = இஷ்டகைகளின் சங்கை. இது 360.

यथावा யதாவா = எப்படிப்பட்ட பரிமாண முள்ளவைகள் அல்லது எப்படி அறியக்கூடியவைகள். 360 இஷ்டகைகளுக்கும் தேவதையான விஷ்ணுவையும், எண்ணிக்கை, பரிமாணம் இவைகளையும் யமன் சொன்னுன் என்பது கருத்து.

ஐதரேய பாஷ்யத்தில் 1080 இஷ்டகைகள் சொல்லியிருப்ப

ச-பா:-அ - கை :—இது சுருதிவசனம் :—

लोकादिं...तस्मै லோகாதிம் தஸ்மை :—முதல் சரீரத்தைத் தரித்தபடியால் லோகங்களுக்கு ஆதியாயும், பிரகிருதத்தில் நசிகேதசால் பிரார்த்திக்கப்பட்டதுமான அக்கினியை நசிகேதசுக்கு யமன் சொன்னான்.

या...वा :—மேலும், (சயனம் என்னும் யஞ்ஞத்தில்) யஞ்ஞவேதிக்கு உபயோகப்படும்படியான கற்கள் ஸ்வரூபத்தில் எப்படிப்பட்டவை என்பதையும், அவைகளின் சங்கியையும், எவ்விதமாக[55] அக்கினி அவைகளில் தரிக்கப்படும் என்பதையும், இவைகளெல்லாம் யமன் சொன்னான் என்று அர்த்தம்.

து-பா:-தால் அந்த பாஷ்யத்துக்கும் இந்த பாஷ்யத்துக்கும் விரோதம் என்று சொல்லக்கூடாது. ஏனெனின் அந்த உபநிஷத் பாஷ்யத்தில் கௌண்டரவ்வியருடைய மதமும் இந்த உபநிஷத்தில் வேறு ரிஷியின் மதமும் சொல்லப்பட்டிருக்கின்றன. அல்லது, ஒவ்வொரு இஷ்டகையில் 1080 ரூபமிருப்பதாக அந்த ஐதரேய பாஷ்ய தாத்பரியம் என்றும், இவ்விடத்தில் இஷ்டகைகளின் சங்கையிற் தாத்பரியம் என்றும் வைத்துக்கொள்ளலாம்.

இஷ்டகாதேவதையான விஷ்ணு ஒருவனானாலும், இஷ்டகைகள் அநேகமாயிருப்பதாலும், அல்லது பகவத்ரூபம் அநேகமாயிருப்பதாலும், இஷ்டகா: என்று பன்மைப் பிரயோகம் சம்பவித்திருக்கிறது.

எத்தனை இஷ்டகைகள் சயனம் செய்யத்தக்கவையோ அவைகளை யமன் சொன்னான் என்னும் வியாக்கியானம் பொருந்ாது ஏனெனில் இஷ்டகைகள் பிரத்தியக்ஷமாய் காணப்படுவதால் அவைகளின் ஸ்வரூபத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. மேலும்,

55. அந்தந்த இஷ்டகைக்கு ஏற்பட்ட மந்திரோச்சாரணத்தால் என்பது கருத்து.

ச-பா:-सः...उक्तं ஸ: உக்தம் :—அந்த நசிகேதசும் யமன் சொன்னபடி [56] யமனுக்குச் சொன்னான்.

अथ...तुष्टः அத...துஷ்ட: :—பிறகு, இப்படி நசிகேதஸ் சொனதினால் சந்தோஷமடைந்தவனாய், தான் கொடுக்கிறதாகச்சொன்ன மூன்று வரன்களுக்கும் வேறான நான்காவது வரனைக் கொடுக்க இச்சித்து, யமன் மறுபடியும் வசனித்தான். ॥ 15 ॥

து-பா:-त्रिणाचिकेतः शान्तियत्यन्तमेति த்ரிணாசிகேத: ஶாந்திமத்யந்தமேதி என்றும் மேல் (கட I-1-17) வாக்கியத்தில் இஷ்டகா ஞானத்தால் மோக்ஷம் கிடைக்கிறதாக சொல்லப்பட்டிருக்கிறது. கேவலம் இஷ்டகைகளின் ஞானத்தால் மோக்ஷமுண்டாகமாட்டாது. ஆகையால் இப்பதத்தால் இஷ்டகாதேவதை என்று அர்த்தம் செய்யவேண்டியது. இதர தேவதா ஞானத்தால் மோக்ஷம் சித்திக்காதபடியால் இந்த தேவதை விஷ்ணு என்றே அறியத்தக்கது.

सः च अपि ஸ: ச அபி = இப்படி உபதேசிக்கப்பட்ட அந்த நசிகேதசும்

यथोक्तं யதோக்தம் = யமன் சொல்லியபடி

तत् தத் = அந்த பகவத்ஸ்வரூபத்தை

प्रत्यवदत् ப்ரத்யவதத் = அனுசரித்துச் சொன்னான். (சொல்லிக்காட்டினான்)

अथ அத = சொல்லிக்காட்டின பிறகு, அல்லது அப்படிச் சொல்லிக் காட்டினதினாலேயே

अस्य அஸ்ய = இந்த நசிகேதஸ் விஷயமாய்

तुष्टः துஷ்ட: = சந்தோஷமடைந்த

मृत्युः ம்ருத்யு: = யமன்

पुन: புந: = மறுபடியும்

एवं ஏவம் = அடியில்வருமாறு

आह ஆஹ = சொன்னான்

பிரமாணவாக்கியம் :—

सएवसर्वलोकादि स्तज्ज्ञात्वामुच्यतेध्रुवं ।
इष्टकादेवतांविष्णुं षष्ट्युत्तरशतत्रिकम् ।
यथावेदेवविज्ञाय मुच्यतेकर्मबन्धनात् ॥ (गतिसारे)

ஸஏவஸர்வலோகாதி ஸ்தஜ்ஞாத்வாமுச்யதேத்ருவம் ।
இஷ்டகாதேவதாம்விஷ்ணும் ஷஷ்ட்யுத்தரஶதத்ரிகம் ।
யதாவதேவவிஜ்ஞாய முச்யதேகர்மபந்தநாத் (கதிஸாரே)

॥ 15 ॥

56. இது நசிகேதஸ்னுடைய கிரகிக்கும் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது.

கேள்விகேட்ட நசிகேதஸை ஸ்துதிக்கிறார்.

I - 1 - 16 - வது மந்திரம்.

तमब्रवीत्प्रीयमाणो महात्मावरं तवेहाद्य ददामिभूयः ।

तवैवनाम्ना भवितायमग्निः सृङ्कांचे मामनेकरूपां गृहाण ॥ 16 ॥

தமப்ரவீத்ப்ரீயமாணோ மஹாத்மா வரம்தவேஹாத்யததாமி பூய: । தவைவநாம்நா பவிதாயமக்நி:॥ ஸ்ருங்காம்சேமாமநேகரூபாம் க்ருஹாண ॥ 16 ॥

ச-பா:—प्रीयमाण: ப்ரீயமாண: = பிரீதியை அடைந்த

महात्मा மஹாத்மா = பெரும்புத்தியுள்ள யமன்

अद्य அத்ய = இப்போது

इह இஹ = இவ்விடத்தில்

भूय: பூய: = மறுபடியும்

वरं வரம் = வரத்தை

तव தவ = உனக்கு

ददामि ததாமி = கொடுக்கிறேன்.

I - 1 - 16 வது மந்திரம்.

வி-பா:—प्रीयमाण: ப்ரீயமாண: :—சந்தோஷ மடைந்தவனும்

महात्मा மஹாத்மா = நல்ல மனதுடையவனுமிருக்கிற யமன்

तं தம் = நசிகேதசைப்பார்த்து

भूय: பூய: = மறுபடியும்

वरं...ददामि வரம்...ததாமி :—நான்காவது வரன் கொடுக்கிறேன் என்று சொன்னான்.

I - 1 - 16 - வது மந்திரம்.

து-பா:—அ-கை :—எதைச் சொன்னான் என்பதை சந்தோஷ மடைந்த சமயத்திலேயே **தம்** என்பதினால் யமன் சொல்லுகிறான்.

तं தம் = நசிகேதசிடத்தில் சிஷ்யனாகும்படியான யோக்கிய தையைக்கண்டு அவனிடத்தில்

प्रीयमाण: ப்ரீயமாண: = பிரசன்னமானவனாய்

महात्मा மஹாத்மா = உதார மனமுள்ள யமன்

अब्रवीत् அப்ரவீத் = சொன்னான். ஆதரவின் பொருட்டு முன் சொல்லப்பட்டதே சொல்லப்படுகின்றது.

अद्य அத்ய = இப்போது

भूय: பூய: = மறுபடியும், மூன்று வரன்களைவிட வேறான

इह இஹ = சிதிவிஷயமாய்

वरं வரம் = வரத்தை

ददामि ததாமி = கொடுக்கிறேன் என்று சொன்னான் என்பதாய்கருத்து. அந்தவரத்தை **तवैव** தவைவ என்பதினால் சொல்லுகிறான்.

ச-பா:-(इति ஐதி = என்று)

तं தம் = நசிகேதசுக்கு

अब्रवीत् அப்ரவீத் = சொன்னான்

अयं அயம் = இந்த

अग्निः அக்நி: = அக்கினி

तव தவ = உன்னுடைய

नाम्नाएव நாம்நா ஏவ = பேராலேயே

भविता பவிதா = பிரசித்தம் ஆகட்டும்

इमां இமாம் = இந்த (சமீபத்திலிருக்கிற)

अनेकरूपां அநேகரூபாம் = அநேகரூபங்களுள்ள

सृङ्कां ஸ்ருங்காம் = இரத்தினமாலையை, கர்மகதியை

गृहाण க்ருஹாண = ஸ்வீகரி.

வி-பா:—तव...अग्निः தவ...அக்நி: :—அது என்னவெனில் சொல்லுகிறார். என்னால் சொல்லப்படும் அக்கினி உன் பெயரால் நாசிகேதாக்கினி என்று பிரசித்தமாகப் போகிறது.

सृंकां ... गृहाण ஸ்ருங்காம்...க்ருஹாண :—விசித்திரமாயும் சப்தத்துடன் கூடியுமிருக்கிற இரத்தின மாலையை ஸ்வீகரித்துக் கொள். ॥ 16 ॥

து-பா:—अयं அயம் = இந்த, (என்னால் உபதேசிக்கப்பட்ட)

अग्निः அக்நி: = இஷ்டகாசிதி ரூபமான அக்கினி

तव தவ = உன்னுடைய

नाम्ना एव நாம்நாஏவ = பெயராலேயே அதாவது நாசிகேதாக்கினி என்கிற பெயராலேயே

भविता பவிதா = பிரசித்தமாக ஆகட்டும்

इमां இமாம் = இந்த

अनेकरूपां அநேகரூபாம் = ஸ்வர்ண மயமான, (சப்தத்தையுடைய அல்லது விசித்திரமான என்று சொல்லக்கூடாது)

सृंकांच ஸ்ருங்காஞ்ச = கண்ட மாலையையும்

गृहाण க்ருஹாண = எடுத்துக்கொள்ளு என்று யமன் சொன்னான். பிரமாணவாக்கியம் :—

यमोनुवादसंतुष्टो वन्हेस्तन्नामतामपि ।

शृंकांस्वर्णमयींचैवकण्ठमालामदाद्विभुः ॥ (इति पाद्मे)

யமோநுவாதஸந்துஷ்டோ வந்ஹேஸ்தந்நாமதாமபி ।

ஸ்ருங்காம்ஸ்வர்ணமயீஞ்சைவகண்டமாலாமதாத்விபு: ॥

(இதி பாத்மே)॥ 16 ॥

I - 1 - 17 - வது மந்திரம்.

त्रिणाचिकेतस्त्रिभिरेत्यसन्धिं त्रिकर्मकृत्तरतिजन्ममृत्यू ।
ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा निचाय्येमांशान्तिमत्यन्तमेति ॥ 17 ॥

த்ரிணாசிகேதஸ்த்ரிபிரேத்யஸந்திம் த்ரிகர்மக்ருத்தரதிஜந்மம்ருத்யூ।
ப்ரஹ்மஜஜ்ஞம் தேவமீட்யம் விதித்வா நிசாய்யேமாம் ஶாந்திமத்யந்தமேதி॥17॥

ச-பா:-அ-கை :—तं···भूय:— தம்...பூய: — என்ன (யமன் பேசினான்) எனின், சிஷ்யனுடைய யோக்கியதையைக் 57 கண்டு சந்தோஷமடைந்த பெரும்புத்தியுள்ள 58 யமன் பிரீதிநிமித்தமாக மறுபடியும் நான்காவது[59] வரத்தை இப்போது உனக்குக் கொடுக்கிறேன் என்று நசிகேதசைப் பார்த்துச் சொன்னான்.

तव···अग्नि: தவ...அக்நி: :—என்னால் சொல்லப்படும் அக்கினி உன்னுடைய பெயராலேயே (அதாவது நாசிகேதாக்கினி என்கிற பெயரால்) விளங்கட்டும்.

सृङ्कां···गृहाण ஸ்ருங்காம்...க்ருஹாண — மேலும்[60], சப்தத்துடன் கூடியும், இரத்தினமயமாயும், விசித்திரமாயு 61 மிருக்கிற இந்த[62] மாலையை ஸ்வீகரி; அல்லது நல்லதான 63 கர்மமார்க்கத்தை ஸ்வீகரி. கர்மஞானம் 64 அநேக பலன்களுக்குக் காரணமாயிருப்பதால் அங்கீகரி என்பது கருத்து. ॥ 16 ॥

57. சொன்ன விஷயத்தை சொன்னபடி கிரகித்த சாமர்த்தியம்

58. தான் சொன்னதை கிரகித்துவிட்டானே என்பது லோப புத்தி. அப்படிப்பட்ட புத்தியில்லாதவன் பெரும் புத்தியுள்ளவன்.

59. தகப்பனாருடைய சந்தோஷம்; அக்கினிவித்தை; ஆத்மவித்தை; இவைகளைத்தவிர நான்காவது

60. இது மட்டுமல்ல; நசிகேதசுக்கு ஆசை யுண்டாகும்படியான வேறு ஒன்றையும் கொடுக்கிறேன்.

61. நீலமுதலிய அநேக வர்ணங்களான விசித்திரமான

62. பிரத்தியக்ஷமாய் எதிரிலிருக்கிற

63. தூமமார்க்கம், அர்ச்சிராதி மார்க்கம் இவை முதலியவைகளால் அடையக்கூடிய பலம். सृज् ஸ்ருஜ் என்னும் வினைப்பகுதியின் கதி என்னும் அர்த்தத்தால் இந்த இரண்டாவது அர்த்தம் ஏற்படுகிறது.

64. 'கர்மத்தைச் செய்யாவிட்டால் வரப்பிரதானத்தால் பலம் கிடைக்கமாட்டாதாகையால், கர்மத்தின் விசேஷ ஞானத்தை சம்பாதித்துக் கொள்.'

ச-பா:—**त्रिणाचिकेत** த்ரிணாசிகேத° = நாசிகேதாக்கினியைமூன்று தடவை அனுஷ்டித்தவன்

त्रिभि: த்ரிபி: = மூன்று பெயர்களுடன்

संधि ஸந்தி° = சம்பந்தத்தை

एत्य ஏத்ய = அடைந்து

त्रिकर्मकृत् த்ரிகர்மக்ருத் = மூன்று கர்மங்களைச் செய்கிறவன்

जन्ममृत्यू ஜந்மம்ருத்யூ = ஜனன மரணங்களை

तरति தரதி = அதிக்கிரமிக்கிறான்

ब्रह्मजज्ञं ப்ரஹ்மஜஜ்ஞம் = ஹிரணிய கர்பனிடமிருந்து உண்டானவனையும் சர்வஞ்ஞனையும்

देवं தேவம் = ஞானாதி குணங்களால் பிரகாசிக்கிறவனையும்

ईड्यं ஈட்யம் = ஸ்தோத்திரம் செய்யத் தகுந்தவனையுமிருக்கிற அக்கினியை

विदित्वा விதித்வா = சாஸ்திரத்தால் அறிந்து

निचाय्य நிசாய்ய = ஆத்ம பாவத்தால் பார்த்து

इमां இமாம் = இந்த

शान्तिं சாந்திம் = சாந்தியை

अत्यन्तमेति அத்யந்தமேதி = அதிகமாய் அடைகிறான்

அ-கை:—மறுபடியும்[65] யமன் கர்மத்தை ஸ்துதிக்கிறான்.

त्रिणाचिकेत: த்ரிணாசிகேத: = நாசிகேதாக்கினி சயனத்தை

I - 1 - 17 வது மந்திரம்.

வி-பா:—**அ-கை:**—மறுபடியும் கர்மத்தை ஸ்தோத்திரம் செய்கிறார்.

त्रिणाचिकेत: ...**अयंत्रायः पवते** த்ரிணாசிகேத:...ஸ்வயம்வாவய:

I - 1 - 17 - வது மந்திரம்.

து-பா:—அ-கை:—(கண்டார்த்தப்படி):—உன் பெயராலேயே அக்கினிவிளங்கட்டும் என்று சொல்லப்பட்டது. அப்படியே தானும் சொல்லிக்கொண்டு அதை அனுஷ்டிக்கிறவனுக்கு இந்த மந்திரத்தில் பலனை யமன் சொல்லுகிறான். (டீகைப்படி):—**அநந்த லோகாப்திம்** என்பதினால் அக்கினியிலிருக்கிற பகவானுடைய ஞானம் அநந்தலோகப் பிராப்திக்குச சாதனமென்று சொல்லப்பட்டது. அந்த ஞானம்தான் எப்படி உண்டாகும் என்கிற சங்கையை நிவிர்த்தித்து **அநந்த லோகாப்தி** என்னும் வாக்கியத்தால் கூறினதையே யமன் கூறுகிறான்.

त्रिनाचिकेत: த்ரிநாசிகேத: :—நசிகேதஸ: + அயம் = நாசி கே

65. பிரீதியின் பேரில் அதிகமான வரத்தைக் கொடுத்ததின் பிறகு அந்த அக்கினிஞானபலத்தின் பலத்தைச்சொல்லி அதை மறுபடியும் ஸ்துதிக்கிறார்.

ச-பா:—மூன்றுதடவை அனுஷ்டித்தவன் - (அல்லது அக்கினியை அறிந்து, அத்தியயனம் செய்து, அதை அனுஷ்டித்தவன்)

त्रिभिरेत्यसन्धिं த்ரிபிரேத்யஸம்திம் = (1) மாதா, பிதா, குரு, இவர்களுடன் சம்பந்தத்தை [66] அடைந்து-சுருதிப் பிரமாணம்:—

यथामातृमान् पितृमान् आचार्यवान्

ब्रूया त्तथातच्छैलिनोब्रवीत्

யதா மாத்ருமாந் பித்ருமாந் ஆசார்யவாந்

ப்ரூயாத் ததாதச்சைலிநோப்ரவீத்

முதலிய வசனங்கள் அல்லது,

வவதே என்பது முதல் (யஜுர்வேகடம் 2-வது அத்தியாயம் 7—8—9) மூன்று அனுவாகங்களை அத்தியயனம் செய்கிறவன்

त्रिकर्मकृत् த்ரிகர்மக்ருத் = யாகம், அத்தியயனம், தானம், இம்மூன்று கர்மங்களைச் செய்கிறவன் அல்லது பாகயஞ்ஞம், ஹவிர்யஞ்ஞம், சோமயஞ்ஞம் என்னும் மூன்று யஞ்ஞங்களைச் செய்கிறவன்

त्रिभिः த்ரிபி: = மூன்று தடவை அனுஷ்டிக்கப்பட்ட அக்கினியால்

संन्धिं ஸம்திம் = பரமாத்ம உபாசனத்தோடு சேர்க்கையை

एत्य ஏத்ய = அடைந்து

து-பா:—தஸ: என்று வரவேண்டிய இடத்தில் நாசிகேத: என்பது சாந்தஸம் त्रयः + नाचिकेताः + यस्य + असौ = त्रिनाचिकेतः— अथवा — त्रिशः + चितः + नाचिकेताग्निः + येन सः = त्रिनाचिकेतः -- த்ரய: + நாசிகேதா: + யஸ்ய + அஸௌ = த்ரிநாசிகேத: — அல்லது— த்ரிஶ:+சித: + நாசிகேதாக்நி: + யேநஸ: = த்ரிநாசிகேத:— அதாவது நாசிகேதாக்கினி சயனத்தை மூன்று தடவை அனுஷ்டித்த புருஷன்.

त्रिभिः த்ரிபி: = மூன்று, ரிக், யஜுஸ், சாம என்கிற வேதங்களுடன்.

संन्धिं ஸம்திம் = சம்பந்தத்தை

एत्य ஏத்ய = அடைந்து எவன் இருக்கிருனே - அதாவது மூன்று வேதங்களுக்கு விரோதமன்றியில் எவனிருக்கிருனே, அதாவது, மூன்று வேதங்களிற் சொல்லியபடி பகவானுடைய தத்துவம் முதலியவைகளை எவன் அறிந்திருக்கிருனே (வேத விருத்தமானுல் வேதசம்பந்தம் கிடைக்கமாட்டாது என்பதுகருத்து).

66. உபநயனம் வரையில் தாயாருடையவும், வேதாத்தியயனம் வரையில் தகப்பனர் குரு இவர்களுடையவும் சிக்ஷையிலிருந்து.

ச-பா:-(2)வேதம்ஸ்மிருதி, சிஷ்டபுருஷன், இவர்களுடைய ஆஞ்ஞைக் குட்பட்டு, அல்லது,

(3) பிரத்தியக்ஷம், அனுமானம், வேத சாஸ்திரம், இம்மூன்று பிரமாணங்களுக்கு உட்பட்டு (அதாவது இவைகளால் எல்லாவற்றையும் நன்ருய் தெரிந்து கொண்டு. இவைகளினின்றும் தர்மஞானமுண்டாவது பிரத்தியக்ஷம்

त्रिकर्मकृत् ...मृत्यू த்ரிகர்மக்ருத்...ம்ருத்யூ = ஜ்யோதிஷ்டோமம் முதலியயாகம், அத்தியயனம், தானம், இவைகளை அனுஷ்டிக்கிறவன், ஜன்ம மரணங்களை அதிக்கிரமிக்கிருன்.

வி-பா—जन्ममृत्यूतरति ஜந்மம்ருத்யூதரதி = ஜனனமரணங்களைத் தாண்டுகிருன், அதாவது ஜனனமரணங்களற்றவனுக ஆகிருன்

करोतितद्येनपुनर्नजायते கரோதிதத்யேநபுநர்நஜாயதே = (எதினுல் திரும்பி வருகிறதில்லையோ அதைச் செய்கிருன்) என்கிற வாக்கியத்திற் சொல்லிய அர்த்தமே இவ்விடத்திற் சொல்

து-பா:— त्रिभिः एत्यसंधि த்ரிபிः ஏத்யஸந்திம் என்பதை முந்தினபதத்துடனும் பிந்தின பதத்துடனும் அன்வயித்துக்கொள்ள வேண்டியது.

மாதா பிதா குரு இவர்களின் அனுஜ்ஞையை மீருமல் என்று அர்த்தம் செய்வது பொருந்தாது. ஏனெனின் இதுவும் கர்மமாத்திரமாயிருப்பதால் ஜனனமரணங்களைத்தாண்ட சாக்ஷாத் சாதகமாகமாட்டாது.

त्रिकर्मकृत् த்ரிகர்மக்ருத் = யஞ்ஞம், தானம், தபஸ், இவைகளைச் செய்கிறவன் - யஞ்ஞம், அத்தியயனம், தானம் என்று அர்த்தம் செய்யக்கூடாது. ஏனெனின் பகவத்கீதை (XVIII-5) யில் यज्ञदानतपः कर्मनत्याज्यं कार्यमेवतत् யஜ்ஞதாநதப:கர்ம நத்யாஜ்யம் கார்யமேவதத் (யஞ்ஞம், தானம், தபஸ் தள்ளத்தக்கவைகளல்ல, செய்யத்தக்கவைகள் என்று) சொல்லி யிருப்பதால் யஞ்ஞம், தானம், தபஸ், இம்மூன்றையே இவ்விடத்தில் கிரகிக்கவேண்டியது. அத்தியயனம் தள்ளத்தக்க விஷய மல்லவே எனின், இவ்விடத்திலிருக்கும் தபஸ்சப்தம், பகவத்கீதை (XVII-14-15-16) யில்சொல்லிய சாரீரக, மானசிக, வாசிகதபஸைச் சொல்லுவதால், வாசிக தபஸில் அத்தியயனம் சேர்ந்திருக்கிறது.

जन्ममृत्यू ஜந்மம்ருத்யூ = ஜனனமரணங்களை

तरति தரதி = தாண்டுகிருன்; முக்தனுகவே அவன் ஆகிருன் என்பது கருத்து.

ச-பா:-ब्रह्मजज्ञं ப்ரஹ்மஜஜ்ஞம் = மேலும்[67] இந்த அக்கினி ஹிரணிய கர்ப்பனிட மிருந்து உண்டானவனாயும் சர்வஞ்ஞனாயு மிருக்கிறான்.

வி-பா:— லப்பட்டிருக்கிறது. இப்படியே இந்த அர்த்தம் **त्रयाणमेव चैवं** த்ரயாணாமேவசைவம் = என்னும் (I - 4 - 6) பிரம்மசூத்திரத்தில் வியாசரால் கூறப்பட்டிருக்கிறது.

ब्रह्मजज्ञं इति ...त्रिभिरत्यसन्धिं ப்ரஹ்மஜஜ்ஞமிதி த்ரிபிரேத்யஸந்திம் என்னும் வாக்கியத்தால் சொல்லப்பட்ட அங்கியான (பிரதானமான) பரமாத்ம உபாசனையைச் சொல்லுகிறார்.

இந்த மந்திரம் **विशेषणाच्च** விசேஷணாச்ச என்னும் (I-2-12) பிர்ம்ம சூத்திர பாஷ்யத்தில் பாஷ்யகாரரால் அடியில் வருமாறு வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.

ब्रह्मजज्ञः ப்ரஹ்மஜஜ்ஞ: = பிரம்மத்தினிடமிருந்து உண்டானதாலும், ஞானத்தோடு கூடியிருப்பதாலும் இந்த சப்தம் ஜீவனைக் குறிப்பிடுகிறது.

து பா:—ब्रह्मजज्ञं ப்ரஹ்மஜஜ்ஞம் = (அ-கை) (கண்டார்த்தப்படி) நாசிகேதாக்கினியை அனுஷ்டித்தல், யஞ்ஞாதி கர்மங்களைச் செய்தல், இவைகளால் மட்டும் முக்தி கிடைக்கமாட்டாது. **த்ரிபிரேத்திய சந்திம்** என்பதால் கூறப்பட்ட பகவானுடைய தத்வ ஞானமும் அவசியம் வேண்டியது என்று சொல்லுகிறார். (டீகைப்படி) வேதத்திற் சொல்லிய பகவத்ஞானம் சாக்ஷாத் மோக்ஷத்திற்கு சாதனமாக மாட்டாது. ஆனால் மனனாதிகள் மூலமாய்த்தான் இது சாதனமாகும்: மோக்ஷமும் ஜனனமரணங்களைத் தாண்டுதல் மட்டுமல்ல, ஆனால் சுகரூப மாயுமிருக்கிறது. இந்த பாவத்தால் அக்கினியிலிருக்கிற பகவானுடைய ஞானமும் மோக்ஷசாதனம் என்று வேறு விதமாய்ச் சொல்லுகிறார்.

ब्रह्मजज्ञं ப்ரஹ்மஜஜ்ஞம் :— **ब्रह्मण :(वेदात्) + जायते (अभिव्यज्यते)= ब्रह्मज:** ப்ரஹ்மண: (வேதாத்) + ஜாயதே (அபிவ்யஜ்யதே) = ப்ரஹ்மஜ: **सर्वंजानातीतिज्ञः** ஸர்வம்ஜாநாதீதிஜ்ஞ:, **ब्रह्मजश्चासौज्ञश्च = ब्रह्मजज्ञः** ப்ரஹ்மஜச்சாஸௌஜ்ஞச்ச = ப்ரஹ்மஜஜ்ஞ: அதாவது வேதத்தால் வியக்தமாய் அறியப்படுகிறவனாயும், சர்வத்தையும் அறிகிறவனாயுமிருக்கிற ஹரி, இந்த பதத்திற்கு **ब्रह्मण: (हिरण्यगर्भात्) जायते** ப்ரஹ்மண: (ஹிரண்யகர்ப்பாத்) ஜாயதே = அதாவது ஹிரணிய கர்ப்பனிடமிருந்து உண்டானவன் என்று சிலர் அர்த்தம் செய்வது அடியிற் கண்ட

67. வேறு பக்ஷத்தைச் சொல்லுகிறார்.

ச-பா:—देवमीड्यं தேவமீட்யம் = பிரகாச ஸ்வரூப முடையவனையும் அதாவது ஞானமுதலிய குணங்களை யுடையவனையும் ஸ்துதிக்கத் தகுந்தவனையு மிருக்கிறான்.

विदित्वा निचाय्य விதித்வா நிசாய்ய = இப்படிப்பட்டவனை சாஸ்திரத்தால் தன் ஸ்வரூபமாக 68 அறிந்து.

इमां...एति இமாம்...ஏதி = தன் புத்திக்கு பிரத்தியக்ஷமான 69

வி-பா:—तं देवं ईड्यं विदित्वा தம் தேவம் ஈட்யம் விதித்வா:—உபாசகனை ஜீவாத்மாவை பரமாத்மகனாக (பிரம்மத்தை அந்தர்யாமியாக உடையவனாக) அறிந்து.

தேவசப்தம் பரமாத்மாவைக் கூறுகிறபடியாலும், ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்கியம் சம்பவிக்காததாலும் இவ்விடத்திலிருக்கும் தேவசப்தம் பரமாத்மகம் என்று அர்த்தம் என்பது பாஷ்யத்தின் கருத்து.

निचाय्य நிசாய்ய :—பிரம்மத்தை அந்தர்யாமியாக உடைய தன் ஆத்மாவின் சாக்ஷாத்காரத்தை அடைந்து

इमां = त्रिकर्मकृत्तरति இமாம் = த்ரிகர்மக்ருத்தரதி என்னும்

து-பா:—ब्रह्मेतिवेदेउद्दिष्टः तस्माद्व्यक्तोयतोहरिः।
ब्रह्मजस्तेनकथितस्सएवज्ञोखिलज्ञतः॥ (इतिनामनिरुक्ते)
ப்ரஹ்மேதிவேதேஉத்திஷ்டஸ்தஸ்மாத்வ்யக்தோயதோஹரி:।
ப்ரஹ்மஜ்ஞஸ்தேநகதிதஸ்ஸஏவஜ்ஞோஅகிலஜ்ஞத:॥
(இதி நாமநிருக்தே)

புராணப் பிரமாண வசனத்திற்கு விருத்தமாகையால் பொருந்தாதெனத் தெரியவரும். ஆகையால் வேதத்தால் வியக்தமாய் அறியக்கூடியவனையும் சர்வஜ்ஞனையும்

देवं தேவம் = கிரீடை முதலிய குணங்களுடன் கூடினவனையும்

ईड्यं ஈட்யம் = பிரம்மா முதலானவர்களால் ஸ்துதிக்கத் தகுந்தவனையுமிருக்கிற ஹரியை

निचाय्य நிசாய்ய = விசாரித்து

विदित्वा விதித்வா = சாக்ஷாத்காரமாக்கி

इमां இமாம் = வேதம் முதலியவைகளிற் சொல்லிய

68. அக்கினி சயனத்துக்கு வேண்டிய இஷ்டகைகள் 720. காலமேயும் சாயந்திரமும் ஒரு சம்வத்சரம் அனுஷ்டிக்கப்படும் அக்கினி ஹோத்திரங்கள் 720. இந்த இஷ்டகைகளுக்குச் சதிர்சமான அக்கினிஹோத்திரங்களால் அனுஷ்டிக்கப்படும் அக்கினியே நான் என்று தியானித்து

69. தான் அனுஷ்டிக்கக்கூடிய உபாசனையால் சாக்ஷாத்தாய் உண்டாகக் கூடிய

ச-பா:—உபரதியை விசேஷமாய் அடைகிறான் - விராட் பலத்தை ஞான70கர்மங்களால் 71 அடைகிறான் என்பது கருத்து. ॥ 17 ॥

வி-பா:—முன் மந்திரத்திற்சொல்லியிருக்கிற சம்சாரத்தின்

शान्ति ஶாந்திம் = சாந்தியை

एति ஏதி = அடைகிறான். ॥ 17 ॥

I-1-18- (a) மந்திரம்.

यो वाप्येतां ब्रह्मजज्ञात्मभूतां चितिं विदित्वाचिनुते नाचिकेतम् । सएव भूत्वा ब्रह्मजज्ञात्मभूतः करोति तद्येनपुनर्नजायते ॥ 18 a ॥

யோவாப்யேதாம் ப்ரஹ்மஜஜ்ஞாத்மபூதாம் சிதிம் விதித்வாசி நுதே நாசிகேதம் । ஸ ஏவஸ்பூத்வா ப்ரஹ்மஜஜ்ஞாத்மபூத: கரோதி தத்யேந புநர்நஜாயதே ॥ 18 a ॥

यः ய: = எவன்

एतां ஏதாம் = இந்த

चितिं சிதிம் = அக்கினி சிதியை

ब्रह्मजज्ञात्मभूतां ப்ரஹ்மஜஜ்ஞாத்மபூதாம் = பிரம்மத்தை அந்தர்யாமியாக உடைய தன்னுடைய ஸ்வரூபமாக

विदित्वा விதித்வா = தியானம் செய்து

नाचिकेतं நாசிகேதம் = நாசிகேதாக்கினி சயனத்தைச் செய்கிறானோ

सः एव ஸ: ஏவ = அவனே

ब्रह्मजज्ञात्मभूतः भूत्वा ப்ரஹ்மஜஜ்ஞாத்மபூத: பூத்வா = பிரம்மத்தை அந்தர்யாமியாக உடைய தன்னுடைய ஸ்வரூபத்தைத் தியானம் செய்துகொண்டு

करोति...जायते கரோதி...ஜாயதே :—பிரகிருதி மண்டலத்தில் மறுபடியும் ஜனிக்காமலிருப்பதற்குக் காரணமான பதவது

து-பா:—शान्ति ஶாந்திம் = முன் சொன்ன ஜனனமரணங்களைத் தாண்டுதலாகிய, அல்லது இனி சொல்லப்போகிற சுகரூபமான சாந்தியை, மோக்ஷத்தை

अत्यन्त அத்யந்தம் = உள்ளபடி, அல்லது அத்தியந்த சாந்தியை அதாவது அத்தியந்த சுகரூப மோக்ஷத்தை

एति ஏதி = அடைகிறான். பிரமாணவாக்கியம்

तं ज्ञात्वा मुच्यतेध्रुवं ॥ इतिगतिसारे ॥

தம்ஜ்ஞாத்வா முச்யதே த்ருவம் ॥ இதி கதிஸாரே ॥

70. உபாசனை
71. சயனகர்மம்

1 - 1 - 18 - வது மந்திரம்.

त्रिणाचिकेतस्त्रयमेतद्विदित्वा य एवंविद्वांश्चिनुते नाचिकेतम् ।
समृत्युपाशान्पुरतः प्रणोद्य शोकातिगो मोदते स्वर्गलोके ॥ 18 ॥

த்ரிணாசிகேதஸ்த்ரயமேதத்விதித்வா ய ஏவம்வித்வாம்ஶ்சிநுதே நாசிகேதம்। ஸம்ருத்யுபாஶாந்புரத: ப்ரணோத்ய ஶோகாதிகோ மோததே ஸ்வர்கலோகே ॥ 18 ॥

ச-பா:—**त्रिणाचिकेतः** த்ரிணாசிகேத:=முன்சொல்லப்பட்ட திரு ணாசி கேதபுருஷன்

एतत् ஏதத்=இந்த

त्रयं த்ரயம்=மூன்றையும் (15 - வது மந்திரத்தில் சொல்லிய கற்களின் ஸ்வரூபம், அவைகளின் சங்கியை, ஆவைகளில் அக்கினி தரிக்கும் விதம்)

வி-பா:—பாசனையைச் செய்கிறான். ஆனதால் தன்னுடைய ஆத்மாவை பகவதந்தர்யாமி என்று நினைத்துக்கொண்டே அக்கினிசயனம் செய்யவேண்டும் என்பது கருத்து. ஏனெனின், **त्रिभिरेत्यसन्धि त्रिकर्मकृत् तरतिजन्ममृत्यू** த்ரிபிரேத்யஸந்திம் த்ரிகர்மக்ருத் தரதிஜந்மம்ருத்யூ என்னும் பூர்வமந்திரத்தில், இவ்விடத்திற் சொல்லிய அக்கினிசயனம், பகவதுபாசனத்தின் வழியாய் மோக்ஷசாதனம் என்று சொல்லியிருக்கிறதென்பது கருத்து.

இந்த மந்திரம் சில புஸ்தகங்களிலில்லை. சிலர் வியாக்கியானம் செய்யவில்லை. ஆயினும் ரொம்பபிராமாணிகர்களான வியாசர் முதலானவர்களால் வியாக்கியானம் செய்யப்பட்டிருப்பதால் இந்த மந்திரம் நூதனமென்று நினைக்கக்கூடாது.

I - 1 - 18 - வது மந்திரம்.

त्रिणाचिकेतः த்ரிணாசிகேத: = முன்சொன்னபடியே அர்த்தம்

त्रयमेतद्विदित्वा ...ब्रह्मजज्ञंदेवमीड्यं த்ரயமேதத்விதித்வா...ப்ரஹ்மஜ

1 - 1 - 18 வது மந்திரம்.

து-பா:—அ-கை:—சொன்ன அர்த்தத்தையே மறுபடியும் விவரிக்கிறார்.

यः ய:=எந்த

विद्वान् வித்வாந்=பிரம்மஞானி

त्रिनाचिकेतः த்ரிநாசிகேத: = மூன்று தடவை நாசிகேதாக்கினியை அனுஷ்டித்தவனாய்

एतत् ஏதத் = இந்த

त्रयं த்ரயம் = மூன்றை, 15 - வது மந்திரத்திற் சொல்லிய

ச-பா:-विदित्वा விதித்வா=தெரிந்துகொண்டு

एवं ஏவம்=இந்தபிரகாரம் ஆத்மாவாக

विद्वान् வித்வாநு=அக்கினியை அறிந்தவனாய்

यः ய:=எவன்

नाचिकेतं நாசிகேதம்=நாசிகேதாக்னி விஷயமான தியானத்தை

चिनुते சிநுதே=செய்கிறானோ

सः ஸ:=அவன்

मृत्युपाशान् ம்ருத்யுபாசாநு=அதர்மம், அஞ்ஞானம், ராகம், துவேஷம் முதலிய மிருத்தியுபாசங்களை

पुरतः புரத:=முதலில் சரீரம் விழும்முன்னமேயே

வி-பா:—ஜ்யோதிஷ்வரூபம் என்னும் மந்திரத்திற் சொல்லப்பட்ட பிரம்மஸ்வரூபத்தையும் அதை அந்தர்யாமியாயுடைய தன்னுடைய ஆத்மஸ்வரூபத்தையும், त्रिभिरेत्यसन्धि த்ரிபிரேத்யஸந்தி: என்னும் வாக்கியத்தால் கூறப்பட்ட அக்கினி ஸ்வரூபத்தையும் विदित्वा விதித்வா குரு உபதேசத்தாலாவது சாஸ்திரத்தாலாவது அறிந்து

यः...नाचिकेतसं ய:...நாசிகேதஸம்:—மேற்சொன்ன அர்த்தத்திரயத்தின் அனுசந்தானத்தோடு எவன் நாசிகேதாக்கினி சயனத்தைச் செய்கிறானோ

सः ஸ: = அவன்

मृत्यपाशान् ம்ருத்யுபாசாநு = இராகத்துவேஷம் முதலியவைகளை

पुरतः புரத: = சரீரவியோகத்துக்கு முன்னமேயே

து-பா:—விஷ்ணுரூப இஷ்டகா தேவதை, இஷ்டகா சங்கியை, இஷ்டகா பரிமாணம், ஆக இம்மூன்றையும்

विदित्वा விதித்வா = அறிந்து

एवं ஏவம் = இந்தப்படி ஞானத்தை அடைந்து

नाचिकेतं நாசிகேதம் = நாசிகேதாக்கினி விஷயமாய்

चिनुते சிநுதே = பரந்து, ஆமை, முதலிய ஆகாரமாக இஷ்டகைகளால் வேதியை (மேடு, திண்ணை) சித்தம் செய்கிறானோ

सः ஸ: = அவன்

पुरतः புரத: = தனக்கு முன் விவரிக்கப்பட்டிருக்கிற

मृत्युपाशान् ம்ருத்யுபாசாநு = யமபாசங்களை

ச-பா:—प्रणोद्य ப்ரணோத்ய = விட்டு

शोकातिग: ஶோகாதிக: = மானசிகதுக்கரஹிதனாய்

स्वर्गलोके ஸ்வர்க்லோகே = ஸ்வர்க்கலோகத்தில்

मोदते மோததே = சுகத்தை அடைகிறான்

அ - கை:—இப்போது அக்கினிஞானம், சயனயாகபலன், பிரகிருதபிரசங்கம், இவைகளை யமன் உபசங்காரம் செய்கிறான்.

त्रिणाचिकेत:...नाचिकेतं த்ரிணாசிகேத:...நாசிகேதம் :— சயனயாகத்திற்கு வேண்டிய கற்களின் ஸ்வரூபம், அவைகளின் சங்கியை, அவைகளில் அக்கினியை தரிக்கும்விதம், இம்மூன்றையும் அறிந்து அந்த அக்கினியே தான் என்று தெரிந்துகொண்டு நாசிகேதாக்கினி 72 யஞ்ஞத்தை முடித்தவன் 73

स:...लोके ஸ:...லோகே :— அதர்மம், அஞ்ஞானம், ராகம், துவேஷம் முதலிய மரணபாசங்களை இந்த சரீரம் விழுந்துபோவதற்குமுன்னமேயே விட்டவனாய், விராட்டாகிய அக்கினியைதான் என்று தெரிந்துகொண்டதினால் விராட்டிற் சம்பந்தமுள்ள ஸ்வர்க்கலோகத்தில் சந்தோஷிக்கிறான். ॥ 8 I ॥

வி-பா:—प्रणोद्य ப்ரணோத்ய = தள்ளி, ஜீவிக்கும்போதே இவைகளற்றவனாயிருந்து

शोकातिग:...लोके ஶோகாதிக:...லோகே :— 12 - வது மந்திரத்தில் சொல்லியபடியே அர்த்தம். ॥ 18 ॥

து-பா:—प्रणोद्य ப்ரணோத்ய = திரஸ்கரித்து

शोकातिग: ஶோகாதிக: = சோகத்தைத் தாண்டினவனாய்

स्वर्गलोके ஸ்வர்கலோகே = விஷ்ணு லோகத்தில்

मोदते மோததே = சுகத்தை அனுபவிக்கிறான். (இது கண்டார்த்தப்படி அர்த்தம். டீகாக்காரருடைய அன்வயம் எப்படி எனின்)

அ-கை :—அக்கினியிலிருக்கிற பகவத் ஞானம்மட்டும் மோக்ஷசாதனமன்று. ஆனால் இஷ்டகாதிகளுடன் கூடின இஷ்டகா தேவதாஞானமும் வேண்டியது என்கிறார்.

त्रिणाचिकेत: त्रयमेतत् विदित्वा த்ரிணாசிகேத: த்ரயமேதத் விதித்வா என்கிற பதங்களை முந்தின மந்திரத்திலுள்ள शान्तिमत्यन्तमेति ஶாந்திமத்யந்தமேதி என்கிற பதங்களுடன் சேர்த்து அர்த்தம் செய்யவேண்டும்.

72. அக்கினி சப்தத்தால் அக்கினி விஷயகத்தியானம் கூறப்படுகிறது
73. பிரயத்தினமாக தியானம் செய்கிறவன்

து-பா:—சொன்னபடி அறிந்து கர்மத்தைச் செய்கிறவன் யோக்கியனுனல் சாயுஜ்ஜிய பலத்தை அடைகிருன் என்று **य एवं** யஏவம் என்பதினல் சொல்லுகிருர்.

यः யঃ = எந்த அதிகாரி

एवं ஏவம்=மேற் சொல்லியபடி அக்கினியிலிருக்கிற விஷ்ணுவை

विद्वान् வித்வாந் = அறிந்து

नाचिकेतं நாசிகேதம் = நாசி கேதாக்கினியை

त्रिनुते த்ரிநுதே = மூன்று தடவை அனுஷ்டிக்கிருனே

सः ஸঃ = அவன்

पुरतः புரதঃ = முதலில்

मृत्युपाशान् ம்ருத்யுபாசாந் = சம்சாரத்தை

प्रणोद्य ப்ரணோத்ய = நிரசனம் செய்து

शोकातिगः சோகாதிகঃ = சோகத்தைத் தாண்டினவனுய்

स्वर्गलोके ஸ்வர்கலோகே = ஆநந்தஞான பிரகாசாத்மகமான விஷ்ணு வினிடத்தில் பிரவேசித்தவனுய்

मोदते மோததே = சந்தோஷப்படுகிருன். பிரசித்த ஸ்வர்க்க லோகத்தில் சந்தோஷித்த பிறகு விஷ்ணு லோகமாகிற ஸ்வர்க்க லோகத்தில் சந்தோஷிக்கிருன். மோக்ஷத்தை அடைவதாகச் சொல்லியிருப்பதால் ஸ்வர்க்க சப்தத்திற்கு பிரசித்த ஸ்வர்க்க லோகம் அர்த்தமன்று.

ஸ்வர்க்க சாதன அக்கினி என்பதற்கு அந்த அக்கினியி லிருக்கிற பகவான் என்பதாய் புராண வசனத்தால் அர்த்தம் செய்யப்பட்டது. இந்த உபநிஷத்தின் அடியிற்கண்ட யுக்திகளா லும் அப்படியே தெரியவருகிறது.

மேலும், இந்தப் பிரகரணம் விஷ்ணு பரமாய் இருந்தாலும் பிரசித்தமான அக்கினி பரமாயும் ஏன் இருக்கக்கூடாது. இரண்டு பக்ஷங்களிலும் பாதகம் ஒன்றும் தோன்றவில்லை. சகல சப்தங் களும் பகவத் வாசகங்களானதாலும், அக்கினி சப்தமும் பகவா னையே குறிப்பிட்டாலும், ஸமாகர்ஷ நியாயத்தால் பகவானுக்குச் சொன்னதை அக்கினிக்கும் ஏன் அங்கீகாரம் செய்யக்கூடாது. இவ்விரண்டிற்கும் உத்தரம் அடியில் கூறப்பட்டிருக்கிறது.

लोकादिः லோகாதிঃ உலகங்களுக்கு ஆதியாயிருத்தல், **गुहानिहितत्वं** குஹாநிஹிதத்வம் ஹிருதய குஹையிலிருப்பு, ஜன்ம மரண ங்கள் முதலியவைகளைத் தாண்டுதலாகிய மோக்ஷத்திற்குக் காரண

து-பா:-மான ஞானத்திற்கு விஷயமாயிருத்தல், प्रतिष्ठा, ப்ரதிஷ்டா, ब्रह्मजज्ञः ப்ரஹ்மஜஜ்ஞ: अनन्तलोकाप्तिः அநந்தலோகாப்தி: முதலிய விசேஷணங்கள் பகவானுக்கே பொருந்தும். அக்கினி சப்தம் பகவத்வாசகமாயும் பிரசித்தாக்கினி வாசகமாயு மிருந்தாலும், பிரசித்தாக்கினிக்கு லோகாதி: முதலிய விசேஷணங்கள் பொருந்தாவாகையால், அக்கினி சப்தத்தால் பகவான் என்றே அர்த்தம் செய்யவேண்டும் மேலும் कामस्याप्तिं जगतःप्रतिष्ठां क्रतोरनन्त्यमभयस्यपारं । स्तोममहदुरुगायंप्रतिष्ठां दृष्ट्वा காமஸ்யாப்திம் ஜகத: ப்ரதிஷ்டாம் க்ரதோரநந்த்யம் அபயஸ்யபாரம் । ஸ்தோமமஹதுருகாயம் ப்ரதிஷ்டாம் த்ருஷ்ட்வா என்கிற மேல்மந்திரத்தில் अनन्तलोकाप्तिमथोप्रतिष्ठां அநந்தலோகாப்திமதோப்ரதிஷ்டாம் முதலிய இப்போது சொன்னவைகளே சொல்லப்படுகின்றன.

जगतःप्रतिष्ठां ஜகத:ப்ரதிஷ்டாம் என்பதால் अथोप्रतिष्ठां அதோப்ரதிஷ்டாம் என்பதும், क्रतोरनन्त्यं க்ரதோரநந்த்யம் என்பதால் अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம் என்பதும், अभयस्यपारं அபயஸ்யபாரம் என்பதால் तरतिजन्ममृत्यूशान्तिमत्यन्तमेति தரதிஜந்மம்ருத்யூ சாந்திமத்யந்தமேதி என்பதும், स्तोममहत् ஸ்தோமமஹத் என்பதால் ब्रह्मज ப்ரஹ்மஜ என்பதும், प्रतिष्ठां ப்ரதிஷ்டாம் என்பதால் मोदतेस्वर्गलोके மோததே ஸ்வர்கலோகே என்பதும் கூறப்படுகின்றன. அவ்விடத்தில் சொல்லிய उरुगाय உருகாய விசேஷணங்களும் இவ்விடத்திற் சொல்லிய अनन्तलोकाप्ति அநந்தலோகாப்தி முதலிய விசேஷணங்களும் பகவானுக்கேப் பொருந்தும், அக்கினிக்குப் பொருந்தாவாம்.

जगतः प्रतिष्ठां ஜகத:ப்ரதிஷ்டாம் முதலியவை उरुगाय உருகாய விசேஷணங்களாயினும் பகவானுடைய விசேஷணங்கள் என்று எப்படிச் சொல்லலாம் எனின், त्वंविष्णुरुरुगायोनमस्यः த்வம்விஷ்ணுருருகாயோ நமஸ்ய: என்கிற சுருதிவசனத்தாலும், श्रीर्यत्ररूपिण्युरुगायपादयोः करोतिमानं वहुधाविभूतिभिः ஸ்ரீர்யத்ரரூபிண்யுருகாயபாதயோ: கரோதிமாநம் பஹுதாவிபூதிபி: என்கிற பாகவத வசனத்தாலும், இன்னும் சில வசனங்களாலும் उरुगाय உருகாய சப்தம் பகவானுக்கே உபயோகிக்கப்பட்டிருப்பதால், சகல விசேஷணங்களும் பகவானுக்கே பொருந்தும்-

गुहानिहितत्वं குஹாநிஹிதத்வம் என்கிற விசேஷணம் பகவானுக்கே பொருந்தும் என்று சொல்லக்கூடாது. ஏனெனின் ஜாடராக்கினி ரூபமாய் அக்கினியும் குஹையிலிருப்பதாய் அக்கினிக்கும் இந்த

து-பா:—விசேஷணம் பொருந்தும். அக்கினியும் தேவதையான தால் சரீரத்துடன் கூடியிருக்கிறான். ஆகையால் அக்கினி ஹிருதய குஹையி லிருக்கக்கூடும். இது பொருந்தாது. ஏனெனின், योवेदनिहितंगुहायां யோவேதநிஹிதம்குஹாயாம் முதலிய சுருதிகளில் ஹிருதயத்தில் பகவான் இருக்கிறதாகவே சொல்லியிருக்கிறது. ஜீவனும் ஹிருதயத்தி லிருப்பதாக சொல்லப்பட்டாலும், பகவானுக்கே இந்த விசேஷணம் விசேஷமாய்ப் பிரசித்தம். சரிதான் அக்கினியும் குஹையிலிருப்பதாகச் சொல்லியிருக்கிறதே? ஆயினும் சுருதி முதலியவைகளில் பகவானுக்கே விசேஷமாய் இந்த விசேஷணம்கொடுக்கப்பட்டிருக்கிறது. விசேஷப்பிரசித்தியையே எடுத்துக்கொள்ள வேண்டியது. मैथिलः மைதிலঃ என்று சொன்ன மாத்திரத்தில் மிதிலா தேசத்திலிருக்கிறவன் என்று ஒருவனும் அறிகிறதில்லை; ஆனால் மிதிலா தேசத்தின் அதிபதி என்றே அறிகிறார்கள். இவ்விதமாக இந்த விசேஷணங்களால் பகவானே அறியத்தக்கவன்.

மேலும் अनन्तलोकाप्तिं அநந்தலோகாப்திம் முதலிய விசேஷணங்கள் அக்கினிக்குப் பொருந்தா. பகவத் ஞானமன்றியில் அக்கினி ஞானத்தால் மட்டும் அநந்த லோகம் கிடைக்கமாட்டாது. பகவத் ஞானமன்றியில் அக்கினி ஞானத்துடன் யஞ்ஞாதி கர்மங்களைச் செய்வதால் அநந்தலோகம் கிடைக்கட்டுமே எனின் तद्वा एतदक्षरं தத்வா ஏதத³க்ஷரம் முதலிய (பிரஹ III-1-8) சுருதி வசனத்தால் பகவத் ஞானமில்லாத அஞ்ஞானிகளுக்கு ஹோமம் முதலியயாவும் முடிவுள்ள பலத்தையே கொடுக்கும்என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக்ஷேபம்: அக்கினி ஞானத்தால் மட்டும் அநந்த லோகம் கிடைக்கும். ஏனெனின் மோக்ஷம் கிடைக்காவிட்டாலும் ஸ்வர்க்கம் கிடைக்கும். இதுவும் அநந்தம்தான். ஏனெனின் வெகுகாலமிருக்கிறபடியால் வியவஹாரம் அப்படியே ஏற்பட்டிருக்கிறது.

உத்தரம்:—अनन्तलोक அநந்தலோக சப்தத்துக்கு மோக்ஷம் முக்கியார்த்தம்; ஸ்வர்க்கம் அமுக்கியார்த்தம். முக்கியார்த்தத்துக்கும் பாதகம் இல்லாத பக்ஷத்தில் அமுக்கியார்த்தம் சித்திக்கமாட்டாது. அப்படியே அநந்தலோக சப்தத்துக்கு மோக்ஷம் முக்கியார்த்த மாயினும், அதற்கும் அக்கினி ஞானம் பரம்பரையாய் சாதக மாகலாமே எனின், நேரான சாதகம் என்று சொல்லுவது முக்கியமானதால் பரம்பரா சாதகமா யிருக்கிறது என்று

I - 1 - 19 - வது மந்திரம்.

ச-பா:-एषतऽग्निर्नचिकेत: स्वर्ग्योयमवृणीथाद्वितियेनवरेण ।
एतमग्नितवैव प्रवक्ष्यंति जनासस्तृतीयंवरं नचिकेतोवृणीष्व ॥19॥

ஏஷதே(அ)க்நிர்நசிகேத: ஸ்வர்க்யோயமவ்ருணீதா த்வீதீயேந வரேண । ஏதமக்நிம்தவைவப்ரவக்ஷ்யந்திஜநாஸஸ்த்ருதீயம்வரம் நசிகேதோவ்ருணீஷ்வ ॥ 19 ॥

ச-பா:-हेनचिकेत: ஹேநசிகேத: = ஓ நசிகேதசா,

द्वितीयेन த்விதீயேந = இரண்டாவது

वरेण வரேண = வரத்தால்

यं யம் = எந்த அக்கினி வரத்தை

अवृणीथा: அவ்ருணீதா: = வரித்தாயோ

I - 1 - 19 - வது மந்திரம்.

வி-பா:-एष: ஏஷ:...—ஸ்வர்க்கலோக சாதகமான இந்த அக்கினிஉனக்கு உபதேசிக்கப்பட்டது.

यम् யம் ...वरेण வரேண... :—ஸ்பஷ்டம். மேலும்

து-பா:-சொல்லுவதும் அமுக்கிய விஷயம். முக்கிய சாக்ஷாத் சாதனமே அங்கீகரிக்கத்தக்கது.

ஆ:—अनन्तलोकाप्ति அநந்தலோகாப்தி என்கிற விசேஷம் அக்கினிக்குப் பொருந்தாவிட்டாலும், लोकादिः லோகாதி: முதலிய விசேஷணங்கள் பொருந்தலாமே. எப்படி யெனின், முதல் சரீரம் தரித்தவனானதால் लोकादिः லோகாதி: ஜகத்துக்கு ஆசிரயனா யிருப்பதால் प्रतिष्ठा ப்ரதிஷ்டா ஹிரணியகர்ப்பனிடமிருந்து உண்டான படியாலும் சர்வஞ்ஞனானதாலும் ब्रह्मजज्ञः ப்ரஹ்மஜஜ்ஞ: வித்வான்களுடைய புத்தியிலிருப்பதால் गुहानिहितः குஹாநிஹித: இப்படி இருக்க இந்த விசேஷணங்கள் பகவானுக்குக் தகும் என்று எப்படிச் சொல்லலாம்.

உத்தரம்:—இது சரியன்று. அக்கினிக்கு இந்த விசேஷணங்கள் முக்கியமாய் பொருந்தாவாம்.

ஆ:—எப்படியாவது பொருந்துகின்றன.

உத்தரம்:—முக்கியமாய் பொருந்தாத படியால் அங்கீகரிக்கலாகாது ॥ 18 ॥

I - 1 - 19 வது மந்திரம்.

து-பா:-அ - கை :—உபசம்ஹாரம் செய்கிறார்.

द्वितीयेनवरेण த்விதீயேநவரேண = இரண்டாவது வரத்தால்

यं யம் = எதை

ச-பா:-(स: ஸஃ = அப்படிப்பட்ட)

स्वर्ग्यः ஸ்வர்க்யஃ = சுவர்க்கப்ராப்தி சாதனமான

एष: ஏஷஃ = இந்த

अग्निः அக்நிஃ = அக்கினி வரமானது

ते தே = உனக்கு

(दत्त: தத்தஃ = என்றல் கொடுக்கப்பட்டது)

(किञ्च கிஞ்ச = மேலும்)

एतं ஏதம் = இந்த

अग्निं அக்நிம் = அக்கினியை

जनास: ஜநாஸஃ = ஜனங்கள்

तव தவ = உன்னுடைய

(नाम्ना एव நாம்நா ஏவ = பேராலேயே)

प्रवक्ष्यन्ति ப்ரவக்ஷ்யந்தி = சொல்லுகிறார்கள். இது நான் கொடுத்த நான்காவது வரம்

हेनाचिकेतः ஹேநசிகேதஃ = நாசிகேதசா

तृतीयं த்ருதீயம் = மூன்றுவது

वरं வரம் = வரத்தை

वृणीष्व வ்ருணீஷ்வ = கேட்டுக்கொள்

வி-பா:-एतं ஏதம்...:—ஜனங்கள் உன்பெயராலேயே இந்த அக்கினியைச் சொல்லப்போகிறார்கள்.

तृतीयं த்ருதீயம்...:—ஸ்பஷ்டம்

து-பா:-अवृणीथा: அவ்ருணீதாஃ = வரித்தாயோ

एष: ஏஷஃ = அந்த

स्वर्ग्यः ஸ்வர்க்யஃ = ஸ்வர்க்கசாதனமான

नाचिकेतः अग्निः நாசிகேதஃ அக்நிஃ = நாசிகேதாக்கினி

ते தே = உனக்கு

(कथित: கதிதஃ = சொல்லப்பட்டது)

एतं ஏதம் = இப்போது பிரீதியால் தான் கொடுத்த வரத்தை ஏதம் என்பதினுல் நிர்த்தாரணை செய்கிறார்.

एतं ஏதம் = இந்த

अग्निं அக்நிம் = அக்கினியை

तवएव தவவேவ = உன் சம்பந்தமான பெயராலேயே

जनास: ஜநாஸஃ = ஜநங்கள்

प्रवक्ष्यन्ति ப்ரவக்ஷ்யந்தி = சொல்லுவார்கள்

तृतीयं த்ருதீயம் : — இப்போது இரண்டாவது வரத்தையும் கொடுத்து, பிரீதிபூர்வமாய் தானுகவே கொடுத்த வரத்தை யு

ச-பா:-அ - கை :—மேற்சொன்னதை உபசம்ஹாரம் செய்கிறார்.

एषः...वरेण ஏஷ:...வரேண :— ஓ நசிகேதஸே, இரண்டாவது வரத்தால் கேட்ட ஸ்வர்க்க சாதனமான அக்கினி வரத்தை நான் உனக்குக் கொடுத்திருக்கிறேன். இது சொன்னதின் சுருக்கம்.

तव ...जनासः தவ...ஜநாஸ: = மேலும் இந்த அக்கினியை ஜனங்கள் உன்பெயராலேயே சொல்லுவார்கள். இப்படி நான்காவது வரம் கொடுத்தேன்.

तृतीयं...वृणीष्व த்ருதீயம்...வ்ருணீஷ்வ:= மூன்றாவது வரத்தைக் கேட்டுக்கொள். இதைக் கொடாதவனாயில் நான் ரிண கிரஸ்தனாகவே 74 இருப்பேன் என்பது கருத்து. ॥ 19 ॥

வி-பா:-I. ஆக்ஷேபம் :—இந்தப்பிரகாணத்திலிருக்கிற ஸ்வர்க்க சப்தத்திற்கு மோக்ஷம் அர்த்தம் என்பதற்கு என்ன பிரமாணம் ?

II. சமாதானம் :—சர்வஞ்ஞான பாஷ்யகாரர் स्वर्ग्यं अग्निं ஸ்வர்க்யம் அக்நிம் என்னும் மந்திரத்தை (I - 1 - 13) பிரஸ்தாபித்துச் சொல்லுவதாவது :—

(1) இவ்விடத்திலுள்ள ஸவர்க்க சப்தம் பரம புருஷார்த்தமென்னும் மோக்ஷத்தைக் கூறுகின்றது. ஏனெனின், स्वर्गलोका अमृतत्वं भजन्ते ஸ்வர்கலோகா அம்ருதத்வம் பஜந்தே என்னும் வாக்கியத்தில் அவ்விடத்திலிருக்கிறவர்களுக்கு ஜனன மரணங்களில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

(2) மேலும், त्रिणाचिकेतः த்ரிணாசிகேத:...मृत्यू த்ரிணாசிகேத:... என்னும் பிரதிவசனத்தில் ஜன்ம மரணங்கள் அற்றும்போவதாகச் சொல்லியிருக்கின்றது.

(3) மூன்றாவது வரனைக் கேட்கும்போது நசிகேதஸ் நாசத்தை அடையும் பலன்களை நிந்திக்கப் போகிறபடியால், மேற்சொன்ன நசுவரபலத்திலிச்சையில்லாத நசிகேதஸ் நாசத்தையடை

து-பா:-ஸ்திரப்படுத்தி மூன்றாவது வரத்தைக்கேள் என்று யமன் சொல்லுகிறான்.

हे नाचिकेतः ஹே நசிகேத: = ஓ நசிகேதா

तृतीयं த்ருதீயம் = மூன்றாவது

वरं வரம் = வரத்தை

वृणीष्व வ்ருணீஷ்வ = கேட்டுக்கொள் என்று யமன் சொன்னான் என்றபடி. ॥ 19 ॥

74. பிரார்த்திக்கப்படாமல் ஸ்வயமாகவேகேள் என்று சொல்லுவது அனுசிதமாகையால், கொடாதவனாயில் என்று சொல்லுகிறார்.

யும் ஸ்வர்க்கமென்னும் பலத்துக்குச் சாதனமானதை பிரார்த்திக்கிறுன் என்று சொல்லுவது சரியன்று.

(4) ஸ்வர்க்க சப்தம் ரொம்ப மேன்மையான சுகத்தைச் சொல்லுகிறபடியால் அளவற்ற சுகமாகிய மோக்ஷமும் ஸ்வர்க்க சப்தத்தால் சொல்லப்படலாம்.

இப்படி நேராகவும் தாற்பரியத்தாலும் பாஷ்யகாரர் சொல்லியிருப்பதால் சங்கைக்கு இடமில்லை.

III ஆக்ஷேபம் :—

1. முக்கியார்த்த விஷயத்தில் :—

* **स्वर्गलोकेनभयं किञ्चनास्ति** (I - 1 - 12)

ஸ்வர்க்கலோகே நபயம் கிஞ்சநாஸ்தி (I - 1 - 12)

शोका ஶோகா (I - 1 - 12)

सत्वमाग्निं ஸத்வமக்நிம் (I - 1 - 13)

स्वर्गलोका ஸ்வர்க்கலோகா ... (I - 1 - 13)

என்னும் இரண்டாவது வரனைக்கேட்கும் இரண்டு மந்திரங்களில் நான்கு தடவை உபயோகிக்கப்பட்டிருக்கும் ஸ்வர்க்க சப்தம் முக்கிய விர்த்தியால் மோக்ஷத்தைக் கூறுகின்றதா? அல்லது அமுக்கிய விர்த்தியால் அதை கூறுகின்றதா?

(1.) முதல் பக்ஷம் பொருந்தாது. ஏனெனின் **स्वर्गापवर्गाभ्यां, स्वर्गापवर्गयोरेकं, न स्वर्गं नापुनर्भवं, सस्वर्गस्स्यात्सर्वान्प्रत्यविशिष्टत्वात्** ஸ்வர்க்காபவர்க்காப்யாம், ஸ்வர்க்காபவர்க்கயோரேகம், நஸ்வர்க்கம் நாபுநர்பவம், ஸஸ்வர்க்கஸ்ஸ்யாத்ஸர்வாந்ப்ரத்யவிஶிஷ்டத்வாத் முதலியபிரயோகங்களில் மோக்ஷத்திற்கு வேருன வஸ்துவைச் சொல்லுவதாய் லோகத்திலும் வேதத்திலும் பிரசித்தமாய் விளங்கும். ஸ்வர்க்க சப்தம் மோக்ஷத்தை சொல்லமாட்டது.

(2) **ध्रुवसूर्यान्तरं यत्तुनियुतानिचतुर्दश ।**
स्वर्गलोकः सकथितो लोकसंस्थानचिन्तकैः ॥

(2) த்ருவஸூர்யாந்தரம் யத்துநியுதாநிசதுர்தஶ ।
ஸ்வர்க்கலோகஃஸகதிதோ லோகஸம்ஸ்தாநசிந்தகைஃ ॥

லோகங்களின் ஸ்தானங்களை அறிந்த பெரியோர்கள் துருவ மண்டலத்திற்கும் சூரிய மண்டலத்திற்கும் மத்தியில் 14 - நியுத (280000 - யோஜனை) முள்ள பிரதேசம் ஸ்வர்க்க லோகமென்று சொல்லுகிருர்கள். இந்த புராண வசனத்தை அனுசரித்து சூரியனுக்கும் துருவனுக்கும் மத்தியிலிருக்கும் லோக விசேஷத்தையே ஸ்வர்க்க சப்தத்தின் அர்த்த மென்று ஒப்புக்கொள்ள வேண்டி

யது. லோகத்திலும் வேதத்திலும் மேற்சொல்லிய ஸ்தானமே ஸ்வர்க்க மென்று சொல்லப்படுகின்றது. மோக்ஷம் அப்படியல்ல ஆகையால் ஸ்வர்க்க சப்தத்திற்கு முக்கிய விர்த்தியால் மோக்ஷம் அர்த்த மென்று சொல்லக்கூடாது.

2. அமுக்யார்த்த விஷயத்தில் :— அமுக்கிய விர்த்தியால் ஸ்வர்க்க சப்தம் மோக்ஷத்தைகூறும் என்னும் பக்ஷமும் பொருந்தாது. முக்கியார்த்தத்தை எடுத்துக்கொள்ளுவதில் பாதக முண்டானால், அமுக்யார்த்தத்தை எடுத்துக் கொள்ளலாம். அப்படி பாதகமிருக்கவில்லை. எப்படி யெனின்.

(1) பிரச்ன வாக்கியத்திலிருக்கும் ஜராமரண மற்ற தன்மை அமிருதத்துவமடையும் தன்மை சுவர்க்க சப்தத்தின் முக்கியார்த்தத்துடன் பொருந்தாமையால், அந்த அர்த்தம் பாதகமாக பாவிக்கப்படுகின்றதா ?

(2) பிரதி வசனத்திலிருக்கும ஜரா மிருத்யுகாரணம் சுவர்க்க சப்தத்தின் முக்கியார்த்தத்துடன்பொருந்தாமையால்,அந்த அர்த்தம் பாதகமாக பாவிக்கப்படுகின்றதா ?

(3) அல்லது நாசத்தை அடையும் ஸ்வர்க்கத்தை, சகலவித இச்சைகளிலும் ஆசையற்ற நசிகேதஸ் பிரார்த்திகக மாட்டானாகை யால் சுவர்க்க சப்தத்திற்கு முக்கியார்த்தம் பொருந்த மாட்டா தென்று பாவிக்கப்படுகின்றதா !

முதலாவதுக்குச் சமாதானம் :—

(a) ஸ்வர்க்க லோகத்தில் வசிக்கிறவர்களுக்கு கிழத்தன்மை, மரணம், பசி, தாகம், துக்கம், முதலியவைகளின் இல்லாமையும், அமிருதபானத்தால் மரணமடையாத தன்மையின் பிராப்தியும் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஸ்வர்க்க சப்தத்திற்கு முக்கியார்த்தத்தையே எடுத்துக் கொள்ளுவதில் பாதகமில்லை.

(b) மேலும் **अभूतसंप्लवस्थानं अमृतत्वं हिभाष्यते** 𑌅𑌭𑍂𑌤𑌸𑌂𑌪𑍍𑌲𑌵𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂𑌹𑌿𑌭𑌾𑌷𑍍𑌯𑌤𑍇 என்னும் ஸ்மிருதியில் பூதங்களின் பிரளயம் வரையில் இருக்கும் லோகம் **अमृतत्वं** 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂 என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த உபநிஷத்திலும் **अजीर्यतां अमृतानां उपेत्य** 𑌅𑌜𑍀𑌰𑍍𑌯𑌤𑌾𑌂 𑌅𑌮𑍃𑌤𑌾𑌨𑌾𑌂 𑌉𑌪𑍇𑌤𑍍𑌯 என்னும் (கட I. 1-28) வாக்கியத்தில்மிருத்யுவினிடத்திலும் **अमृत** 𑌅𑌮𑍃𑌤 சப்தம் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. இக்காரணங்களால் **अमृत** 𑌅𑌮𑍃𑌤 சப்தம் மோக்ஷத்தையே குறிப்பிடவேண்டும் என்கிற அவசிய

வி-ப:—மில்லை. ஆகையால் **अमृतत्व** அம்ருதத்வ சப்தத்திற்கு மோக்ஷந் தான் அர்த்தம் என்று அனுவசியமாக வைத்துக்கொண்டு, அப்படி வைத்துக்கொண்டதை அனுசரித்து சுவர்க சப்தத்திற்கும் முக்கியார்த்தத்தைவிட்டு அமுக்கியார்த்தத்தை ஸ்வீகரிக்க வேண்டியதில்லை.

மேலும் **अमृतत्व** அம்ருதத்வ சப்தத்திற்கு மோக்ஷமே அர்த்தம் என்று வைத்துக்கொண்டாலும் சுவர்க சப்தத்திற்கு முக்கியார்த்தமான லோக விசேஷத்தையே ஒப்புக்கொள்ளலாம். எப்படியெனின், ஸ்வர்க்கலோகத்தில் வசிப்பவர்களே பிரம்மோபாசனம் செய்து **तेब्रह्मलोकेतुपरान्तकाले** (मु III-2-6) தேப்ரஹ்மலோகேஷு பராந்தகாலே (மு III-2-6) என்கிற சுருதிப்படி மோக்ஷத்தை அடையலாம்.

மேலும் **स्वर्गलोका अमृतत्वंभजन्ते** ஸ்வர்கலோகா அம்ருதத்வம் பஜந்தே என்னும் வாக்கியத்தில் **स्वर्ग** ஸ்வர்க சப்தம் முதலிலிருக்கிறது, வஸ்துவை குறிப்பிடுகிறது, அதற்கு அன்னியமான வஸ்துவை குறிப்பிடமாட்டாது. **अमृतत्व** அம்ருதத்வ பதம் கடைசியிலிருக்கிறது, வஸ்துவின் தன்மையைக் குறிப்பிடுகின்றது, ஆபேக்ஷிக அமிருதத்துவம் (ஒரு லோகத்தில் வெகுகாலவாசம்) என்று மோக்ஷத்துக்கு வேறான அர்த்தத்தைக்கூட குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது. ஆகையால் **अमृतत्व** அம்ருதத்வ சப்தம் மோக்ஷத்தைத் தான் குறிப்பிடுகிறதாக பாவித்து, அதை அனுசரித்து ஸ்வர்க சப்தத்திற்கும் முக்கியார்த்தமான லோக விசேஷத்தை விட்டு அமுக்கியார்த்தமான மோக்ஷமென்னும் அர்த்தத்தை ஸ்வீகரிக்க வேண்டியதில்லை.

வஸ்துவின் தன்மையை குறிப்பிடும் சப்தத்தை அனுசரித்து வஸ்துவை குறிப்பிடும் சப்தத்தின் அர்த்தத்தை மாற்றக்கூடாதென்பதற்கு திருஷ்டாந்தம்:—**देवदत्तःअभिरूपः** தேவதத்த: அபிரூப: என்னும் வாக்கியத்தில் **देवदत्तः** தேவதத்த: என்பது வஸ்துவை குறிப்பிடும் பதம். **अभिरूपः** அபிரூப: என்பது வஸ்துவின் தன்மையாகிய நல்ல அழகை குறிப்பிடும்பதம். **देवदत्तः** தேவதத்த: கொஞ்ச மழகுள்ளவனயிருக்கிறான். **यज्ञदत्तः** யஜ்ஞதத்த: நிரம்ப அழகுள்ள வனயிருக்கிறான். **देवदत्तः अभिरूपः** தேவதத்த: அபிரூப: என்கிற வாக்கியத்திற்கு தேவதத்தன் ஸ்வற்ப அழகுள்ளவனயிருக்கிறான் என்று அர்த்தம் செய்யவேண்டுமேதவிர, **अभिरूपः** அபிரூப: என்கிறபதத்தின் முக்கியார்த்தத்தையே முக்கியமாய் வைத்துக்கொண்டு, அதை அனுசரித்து வாக்கியார்த்தத்

வி-ப:—தைச் செய்யக்கூடாது. அதாவது தேவதத்தன் என்கிற பதத்திற்கு தேவதத்தன் என்கிற புருஷன் அர்த்தமல்லவென்றும் யஞ்ஞதத்தன் அர்த்தமென்றும் அர்த்தத்தைமாற்றக்கூடாது. இது போல் வஸ்துவின் தன்மையைக் குறிப்பிடும் अमृतत्व அம்ருதத்வ சப்தத்தை அனுசரித்து வஸ்துவை குறிப்பிடும் स्वर्ग ஸ்வர்க சப்தத்தின் அர்த்தத்தை மாற்றக்கூடாது.

ஆகையால் स्वर्गलोका अमृतत्वं भजन्ते ஸ்வர்கலோகா அம்ருதத்வம் பஜந்தே என்னும் பிரச்ன வாக்கியதிலுள்ள अमृतत्व அம்ருதத்வ சப்தத்தால் स्वर्ग ஸ்வர்க சப்தத்தின் முக்கியார்த்தத்தைமாற்றி மோக்ஷமென்று அர்த்தம் செய்யவேண்டியதில்லை.

இவைமுதலிய இடங்களில் (1) தர்மபலத்துக்கு வேறாகவும் ஞானத்தால் அடையத்தகுந்ததாகவு மிருக்கிற பிராப்பியமான பிரம்மத்தின் சொரூபமும், (2) அந்த இடங்களிலேயே தர்மத்துக்கு வேறாக मत्वा மத்வா என்னும் பதத்தால் கூறப்படும் உபாயத்தின் சொரூபமும்,(3) धीरोहर्षशोकौ जहाति தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி என்னு மிடத்தில் धीर தீர என்னும் பதத்தால் கூறப்பட்ட பிராப்தாவி (அடைகிறவ) னுடைய சொரூபமும் ஆக இவைகளை செவ்வையாய் அறியவேண்டியதற்காக अन्यत्र அந்யத்ர என்பதினால் கேட்கிறார்.

ச-பா:-अन्यत्र...वद अन्यत्र...वद:—(யமன் சொன்னதை நசிகேதஸ் கேட்டு மறுபடியும் சொல்லுகிறான்.) நான் உமக்கு யோக்கியனை சிஷ்யனாயும், நீர் எனக்கு பிரசன்ன ராயுமிருந்தால், சாஸ்திரத்திற் சொல்லியதர்மானுஷ்டானங்களுக்கும், அவைகளின் பலங்களுக்கும், சாதனங்களுக்கும் வேறாயும், அதர்மத்திற்கு வேறாயும், காரியகாரணங்களுக்கு வேறாயும், சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவைகளுக்கு வேறாயும், (அதாவது மூன்று கால வித்தியாச மற்றதாயும்) இப்படி சகல வியவஹார விஷயங்களுக்கும் வேறாயிருக்கிறதாக எந்த வஸ்துவை நீர் அறிகிறீரோ அதை எனக்குச் சொல்லும். 169 ‖ 43 ‖

வி-பா:—ஆக்ஷேபம்:ஸ்ரீ பாஷ்யத்தில் (1) देवं मत्वा தேவம்மத்வா என்பதால் உபாசிக்கத்தகுந்ததாகச் சொல்லப்பட்டதாயும், அடையத்தகுந்ததாயு மிருக்கிற பிரம்மத்தினுடையவும், (2) अध्यात्मयोगाधिगमेन அத்யாத்மயோகாதிகமேந என்னும் வாக்கியத்தால் அறியவேண்டியதாகக் கூறப்படும் ஜீவனுடையவும், (3) मत्वा धीरो हर्षशोकौ जहाति மத்வாதீரோஹர்ஷசோகௌஜஹாதி என்னும் வாக்கியத்தால் கூறப்பட்டபிரம்மோபாசனத்தினுடையவும்,சொரூபத்தைச் செவ்வையாய் அறியவேண்டியதற்காகத் திரும்பியும் अन्यत्रधर्मात् அந்யத்ர தர்மாத் என்னும் வாக்கியத்தால் கேட்கிறான் என்று சொல்லி யிருப்பதால், அதற்கு விருத்தமாக धीर: தீர: என்பது ஜீவனைக் குறிப்பிடுகிறது என்று எப்படிச்சொல்லலாம்.

சாமாதானம் :—நீ இபபடி சொல்லக்கூடாது. अध्यात्मयोगाधिगमेन அத்யாத்மயோகாதிகமேந என்பதால் அறியத்தகுந்ததாக கூறப்படும் ஆத்ம சப்தத்தின் அர்த்தம், பிரஜாபதி வித்தையில் (वृह வ்ரூஹ) உபாசிககத்தகுந்ததாயும் அடையத்தகுந்ததாயும் கூறப்படும் பரிசுத்த ஜீவனுடைய சொரூபந்தான். ஆனதால் அந்த வாக்கியமும் அடையக்கூடியதை தான் சொல்லுகிறது. வாஸ்தவத்தில் அந்த சொரூபம் प्राप्ता ப்ராப்தா வினின்றும் (அடைகிறவனின்றும்) வேறில்லாததால் प्राप्ता ப்ராப்தா வான பிரத்தியகாத்மா

169: நான் ஆதியில் கேட்ட தேகத்தை விடவேறான ஆத்மாவின் பாரமார்த்திக ஸ்வரூப ஞானமே மோக்ஷ சாதனமா யிருந்தால அதையே சொல்லும் என்று நசிகேதஸ் கேட்கிறான். ஆனதால் முன்கேட்ட மூன்று வரங்களுக்கும் வேறாக இப்போது கேட்கப்பட்டதாக நினைக்கக்கூடாது. येयंप्रेते யேயம்ப்ரேதே என்கிறமந்திரத்தில் கேட்ட வஸ்துவின் ஓங்கார உபாசனையகிற ஞானசாதனத்தைச் சொல்லும் பொருட்டு முன்கேட்டவஸ்துவின் ஸ்வரூபத்தை நசிகேதஸ் கேட்கிறான். இந்த மந்திரம் பிரம்ம சூத்திரம் I-2-11-ல் அடியில் வருமாறு பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

வி-பா:-வினது என்னும் பாஷ்யம் விரோதிக்கமாட்டாது. ஆனதால் பாஷ்யக்காரர் ப்ரசனபிரஸ்தாபத்தில்முதலில் பிராப்யத்தைபிர்சனம் செய்வதாகபிரஸ்தாபித்து, அதற்கு உத்தரமாக नजायतेम्रियतेवा நஜாயதெ ம்ரியதெவா என்னும் மந்திரத்தால் முதலில் பிராப்தாவான ஜிவஸ்வரூபத்தை யமன் பிரதிவசனம் சொல்லுகிருன் என்று, பாஷ்யகாரர் சொல்லுவதும் விரோதிக்கமாட்டாது. ஏனெனின் नजायते நஜாயதெ என்னும் மந்திரத்தில் विपाश्चित् விபஸ்சித் என்பதால் கூறப்பட்ட பரிசுத்த ஸ்வரூபம் प्राप्त ப்ராப்தஸ்வரூபமல்ல.

आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुः मनीषिणः ॥ (कठ I - 3 - 4)
ஆத்மேந்த்ரியமநோயுக்தம்போக்தேத்யாஹு: மநீஷிண: (கட I-3-4)
विज्ञानसारथिर्यस्तु मनःप्रग्रहवान्नरः ॥
விஜ்ஞாநஸாரதிர்யஸ்து மந:ப்ரக்ரஹவாந்நர:
सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमंपदम् ॥ कठ I - 3 - 9)
ஸோத்வந:பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம்பதம்॥ (கட I-3-9)

என்கிற மந்திரத்தில் கூறப்படும் ஜீவஸ்வரூபமே प्राप्ता ப்ராப்தா- அப்படியே विशेषणाच्च விஶேஷணாச்ச என்னும் சூத்திர (I-2-12) பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறது.

து-பா:-धर्मात् தர்மாத் = புண்ணியாத்மாவான ஜீவனைவிட

अन्यत्र அந்யத்ர = வேருயும்

अधर्मात् अन्यत्र அதர்மாதந்யத்ர = அதர்மாத்மாவான ஜீவனைவிட வேருயும் (கண்டார்த்தபடி—தர்மாதர்மமற்றவனுயும்)

अस्मात् அஸ்மாத் = பிரமாண விஷயமான

कृताकृतात् க்ருதாக்ருதாத் = காரிய அகாரியங்களான அசேதனங்களுக்கு

अन्यत्र அந்யத்ர = வேருயும் (இரண்டிற்கும் விலக்ஷணம் என்பது கருத்து)

भूतात् च भव्यात् च பூதாச்ச பவ்யாச்ச = மூன்று காலங்களிலுள்ள பதார்த்தங்களைவிட

अन्यत्र அந்யத்ர = வேருயு மிருக்கிற(க:—கிருதாகிருதத்திற்கே பூதாச்ச என்பதை விவரணமாக வைத்துக கொள்ளலாம்.)

तत् தத் = முக்த நியாமகரான பகவத் ஸ்வரூபத்தை

यत् யத் = எவ்விதமாக

(கண்டார்த்தபடி தத்=லோகத்துக்கு விலக்ஷணமா யிருப்பதால் பிரசித்தமா யிருக்கிற யத்=எந்த வஸ்துவை)

पश्यसि பஶ்யஸி = பார்க்கிறீரோ

तत् தத் = அந்த பிரகாரமாக (க : அந்த வஸ்துவை)

वद வத = எனக்குச் சொல்லும். ॥ 43 ॥

வி பா:—ஆனதால் प्राप्य ப்ராப்ய னையும் प्राप्ता ப்ராப்தா வையும் ஒரே இடத்திலிருப்பதாய்ச் சொல்லும் गुहां குஹாம் மந்திரத்தில், छायातपौ சாயாதபௌ என்கிற இடத்தில் அஞ்ஞனைச்சொல்லும் छाया சாயா சப்தத்தால் प्राप्ता ப்ராப்தா வான ஜீவன் கூறப்பட்டிருக்கிறான், विपश्चित् விபஶ்சித் என்பதால் கூறப்படவில்லை. ஆனதால் अध्यात्मयोगाधिगमेन அத்யாத்மயோகாதிகமேந என்னும் மந்திரத்தில் प्राप्य ப்ராப்ய னையே சொல்லியிருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவேண்டியது. இந்த மந்திரம் வியாசாசாரியரால் त्रयाणां த்ரயாணாம் என்னும் சூத்திரத்தில் (I - 4 - 6) வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.

धर्मः தர்ம:=உபாயம்.

धर्मात् अन्यत्र தர்மாதந்யத்ர=பிரசித்தமான உபாயத்துக்கு விலக்ஷணமானது.

अधर्मः அதர்ம: = தர்மத்துக்கு வேறான உபேயம் அதாவது அடையத்தகுந்த வஸ்து.

अधर्मात् अन्यत्र அதர்மாதந்யத்ர = பிரசித்தமான சாதிக்கத் தகுந்த பலத்துக்கு வேறான என்று அர்த்தம்.

अस्मात् அஸ்மாத் என்னும் பதத்தால் அந்த பலத்தைச் சாதிக்கிறவன் என்று அர்த்தம். அவனே उपेता உபேதா=அடைகிறவன். இவன் தர்மபலத்தை அடையும் उपेता உபேதா வுக்கு வேறானவன். ஏனெனில் சாதகாவஸ்தையில் தன்னால் கோரப்படும் பலத்துக்கு வேறான பலத்தில் வைராக்கியத்தை அடைந்திருக்கிறான், பலத்தை அடையும் தசையில்பிரகாசமான 8-குணங்களோடு கூடிய ஸ்வரூபத்தை உடையவனாயிருக்கிறான்.

कृताकृतात् க்ருதாக்ருதாத் ;—இது தர்மம் முதலியவைகளுக்கு விசேஷணம்.

भूताच्चभव्याच्च பூதாச்சபவ்யாச்ச ;— இதுவும் தர்மம் முதலியவைகளுக்கு விசேஷணம் என்று அறியவேண்டியது. அதாவது कृत க்ருத மாயும் अकृत அக்ருத மாயும் भूत பூத மாயும் भव्य பவ்ய மாயும் இருக்கும் தர்மாதிகளுக்கு வேறான எந்த வஸ்து உண்டோ அதை எனக்குச் சொல்லும் - இப்படி வியாக்கியானம் செய்யும் பக்ஷத்தில் कृताकृतात् भूताच्च भव्याच्च धर्मादन्यत्र अधर्मादन्यत्र க்ருதாக்ருதாத் பூதாச்ச பவ்யாச்ச தர்மாதந்யத்ர அதர்மாதந்யத்ர என்பதில் 3 अन्यत्र அந்யத்ர சப்தமேபோதுமானது. 4-வது अन्यत्र அந்யத்ர சப்தம் வியர்த்தம்.

வி-பா:—மேலும் उपाय उவாயம் என்னும் உபாசனம் भूतभविष्यत् वर्त्तमान ஹூதஹவிஷ்யுவத் தேமான மென்னும் 3-காலங்களுக் குட்பட்டிருப்பதால், இவைகளுக்கு வேறானது என்று சொல்லக்கூடாதென்று ஆலோசித்து வேறு விதமாயும் வியாக்கியானம் செய்கிறார். धर्माधर्माच्च अन्यत्र யமொயமொஷ் சுநுத்ர என்பது உபாசன விஷயமான கேள்வி. ஏனெனின் நல்லபலன் கெட்டபலன் இவைகளுக்குச் சாதனங்களானபுண்ணியபாவங்களுக்குஉபாசனம்வேறுபட்டிருக்கிறது. कृताकृतात्भूताच्चभव्याच्च अन्यत्र க்ருதாக்ருதாஸ்ஹூதாஷ் ஹவ்யாஷ் சுநுத்ர என்பதினால் காலத்துக்குட்படாததும் அடையத்தகுந்ததாயுமிருக்கிற வஸ்து கேட்கப்படுகின்றது. அடையும் சேதனமும் (ஜீவனும்) நித்தியனாயிருப்பதாலும், அடையும் வஸ்துவில் சேர்ந்திருப்பதாலும் மேற்சொன்ன வாக்கியத்தால் அவனுடைய பிரச்னம் அடங்கியிருக்கிறதாக ஏற்படுகின்றது. प्राप्ता ப்ராப்தா வின் ஸ்வரூபம் प्राप्य ப்ராப்ய த்தில் சேர்ந்திருப்பதாக இனி சொல்லப்போகிறோம். இவ்விடத்திலிருக்கும் यत् तत् யக் தக் என்னும் இரண்டு பதங்களும் மேற்சொன்ன மூன்றையும் சொல்லுகிறதென்று கருத்து என்பதாய் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

பூர்வபக்ஷி.—இந்தப் பக்ஷத்தில் இரண்டுவஸ்துக்களைக் கேட்பதாகச் சொல்லக்கூடாது. ஏனெனின் अन्यत्रधर्मात् अन्यत्रअधर्मात् சுநுத்ரயமொக் சுநுத்ரஅயமொக் என்று ஆரம்பத்திலிருக்கும் இரண்டு அன்னியத்ர சப்தங்களும் ஒரு அர்த்தத்தைச் சொல்லுவதுபோல் अन्यत्र अस्मात् कृताकृतात् भूतात् अन्यत्र சுநுத்ர சுஸ்மாக் க்ருதாக்ருதாக் ஹூதாக்சுநுத்ர என்று மேலிருக்கும் இரண்டு அன்னியத்ர சப்தங்களும் ஒரே அர்த்தத்தையே கூறுவதாக ஒப்புக்கொள்ள வேண்டியது.

ஆனால் अन्यत्र अस्मात् कृताकृतात् भूताच्च भव्याच्च சுநுத்ர சுஸ்மாக் க்ருதா க்ருதாக் ஹூதாஷ்ஹவ்யாஷ் என்னுமிடத்தில் காலத்திரயத்துக்குட்பட்ட வஸ்துவுக்கு வேறான வஸ்துவைச் சொல்லுவதாய் ஒப்புக்கொள்ளுமிடத்தில் च வ காரமிருப்பதுபோல், மேற்சொன்ன காலத்திரயத்துக்குட்பட்ட வஸ்துவை குறிப்பிடும் अन्यत्रधर्मात् अन्यत्र अधर्मात् சுநுத்ர யமொக் சுநுத்ர அயமொக் என்னுமிடத்திலும் च வ காரம் இருந்தால், ஒரே அர்த்தத்தைச் சொல்லுவதாகத் தோன்றும். கீழிருக்கும் இரண்டு अन्यत्र சுநுத்ர சப்தங்களும், மேலிருக்கும் இரண்டு अन्यत्र சுநுத்ர சப்தங்களும்

வி-பா:—வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்லுவதால் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் சகாரம் இல்லை: ஆனதால் மேற் பிரஸ்தாபித்த நான்கு अन्यत्र அந்யத்ர சப்தங்களும் ஒரே அர்த்தத்தைக்கூறுவதாக ஒப்புக்கொள்ளாமலிருக்கக் காரணமில்லாதபடியால், अन्यत्रधर्मात् அந்யத்ரதர்மாத் என்கிற வாக்கியமும் प्राप्य ப்ராப்ய மான பிரம்மத்தையே கூறுவதாக ஒப்புக் கொள்ளவேண்டும்.

சி:—नायमात्माप्रवचनेन நாயமாத்மாப்ரவசநேந (I - 2 - 23) என்று உபாய விசேஷத்தை உத்தரமாகச் சொல்லுவதாய் காணப்பட்டுவதால், உபாய விசேஷத்தின் பிரச்னத்தையும் இந்தவாக்கியத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டியது. ஆனதால் மேற் சொன்னபடி சகாரமில்லாவிட்டாலும், இரண்டு अन्यत्र அந்த்ர சப்தங்களுக்கும் அர்த்தம் வெவ்வேறு என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

பூ:—नायमात्माप्रवचनेन நாயமாத்மாப்ரவசநேந (I - 2 - 23) என்னும்வாக்கியத்தில், பிரீதியை அடைந்த உபாசனத்தினாலேயே (அதாவது பிரீதியுடன் செய்த உபாசனத்தாலேயே அடையப்படும் தர்மமுள்ள प्राप्य ப்ராப்ய த்தின் உபதேசம் காணப்படுவதால், முக்கியமாய் உபாயத்தை உத்தரமாகச் சொன்னதாக தெரியவில்லை.

சி:—नाशान्तमानसोवापि प्रज्ञानेनैनमाप्नुयात्
यस्तु अविज्ञानवान्भवति अमनस्कः सदाशुचिः नसतत्पदमाप्नोति

நாஶாந்தமாநஸோவாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத் யஸ்து அவிஜ்ஞாநவாந்பவதி அமநஸ்கஃ ஸதாஶுசிஃ நஸதத்பதமாப்நோதி

என்னும் மேல் வாக்கியங்களில், अविज्ञानवान् नतत्पदमाप्नोति அவிஜ்ஞாநவாந் நதத்பதமாப்நோதி (உபாசனமில்லாதவன் அந்த பதத்தை அடையமாட்டான்) என்பதினால் உபாயவிஷயமாய் பிரதிவசனம் ஏற்பட்டிருப்பதால், अन्यत्रधर्मात् अन्यत्रअधर्मात् அந்யத்ரதர்மாத் அந்யத்ராதர்மாத் என்னும் இடத்தில் பிரசித்தமான தர்மாதர்மங்கள் என்னும் உபாயத்துக்கு விருத்தமான உபாசனமென்னும் உபாயம் ஏன் கேட்கப்பட்டிருக்கக்கூடாது.

பூ:—प्राप्य ப்ராப்ய மான வஸ்துவுக்கு, பிரீதியை அடைந்த ஞானமே உபாயம் என்று சொன்னதினால், உபாயத்தில் பிரீதியை அடையும் தன்மை என்னும் விசேஷம் பலிக்குமே எனின் பலிக்கட்டும். இதனால் உபாயம் பிரச்னப்பிரதி வசனங்களுக்கு பிரதானவிஷயமாயிருக்கவேண்டும் என்று சொல்லவேண்டியதில்லை. ஏ

வி-பா:-னெனின் தேவதத்தனுடைய வீடு எது என்னும் கேள்விக்கு அநேகவிதமான புஷ்பங்களுடைய சிறுதோட்டமும், வாசலுக்குச் சமீபத்தில் சங்குசக்கிரம் முதலியவைகள் எழுதப்பட்டிருப்பதும் தேவதத்தனுடைய வீட்டுக்கு அடையாளம் என்று மறுமொழிகொடுக்கப்பட்டால், அந்த மறுமொழிக்கு சிறுதோட்டமும் வாசலில் சித்திரமும் முக்கியமான விஷயம் என்று ஒருவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதுபோல் பிரம்மம் எது என்னும் கேள்விக்கு பிரீதியை அடைந்த ஞானத்தால் அடையத் தகுந்தது என்னும் மறுமொழிக்கு பிரீதியாகிய ஞானம் முக்கியமான விஷயம் என்று சொல்லக்கூடாது. ஆனதால் अन्यत्रधर्मात् என்று தொடங்கும் வாக்கியத்தால் இந்தப் பிரகரணத்திலிருக்கும் 4 அந்யத்ரசப்தம் ஒரே அர்த்தத்தைச் சொல்லுவதாய் ஏற்படுவதற்காக தர்மாதர்மங்களால் அடையத்தகுந்த வஸ்துவைவிட வேறானது பிரம்மம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

சி:—இவன் தேவதத்தனிடமிருந்து உண்டாகவில்லை, யஞ்ஞதத்தனிடமிருந்து உண்டானான் என்னும் வார்த்தையைக்கேட்டு, தேவதத்தனுக்கு வேறான எவனை அறிகிறாயோ அவனைச்சொல்லு என்னும் கேள்வியின்பேரில் ஏற்படும் மறுமொழிக்கு தேவதத்தனுக்கு வேறான யஞ்ஞதத்தன் என்று அர்த்தம் என்பதுபோல, கௌணமாக லக்ஷணையால் தேவதத்தனுடைய பிள்ளைக்கு வேறானவனை கேட்பதாகத் தோன்றமாட்டாது; அதுபோல, கர்மத்தால் அடையத் தகுந்ததல்ல, ஞானத்தால் அடையத் தகுந்தது என்று உபதேசம்பெற்று, தர்மத்தைவிட வேறானதைச் சொல்லு என்னும் கேள்விக்கு தர்மத்துக்கு வேறான ஞானமென்றும் உபாயமே கருத்து என்று சொல்லுவது யுக்தம், தர்ம சப்தத்திற்கு லக்ஷணையால் தர்மத்தால் சாதிக்கத்தக்கது என்று நினைத்து அதற்கு வேறான பிரம்மத்தை மறுமொழியாகக் கூறக்கூடாது. அதுபோல் अन्यत्रअधर्मात् என்று தொடங்குகிற வாக்கியமும் உபாயத்தையே கூறுவதாக நிச்சயமாய் ஒப்புக்கொள்ள வேண்டியது. பின்வரும் இரண்டு अन्यत्र என்கிற சப்தங்களும் காலத்திரயத்துக்குள் அடங்கின வஸ்துவுக்கு வேறானதைச் சொல்லுவதால் உபாயத்தைக் கூறும் பக்ஷத்தில், காலத்திரயத்துக்குள் அடங்காத உபாயத்தையே கூறவேண்டியதாகும். அப்படிப்பட்ட உபாயம் ஒன்றுமில்லாதபடியால் பிந்திய அந்யத்ர சப்தம் இரண்டும் உபாயத்தைக் கூறமாட்டாது. ஆனதால் பின்வரும் இரண்டு அந்

I - 2 - 15 - வது மந்திரம்.

सर्वे वेदा यत्पदमामनन्ति तपांसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण ब्रवीम्योमित्येतत् ॥ 44 ॥

ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத்வதந்தி
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ர
வீம்யோமித்யேதத் ॥ 44 ॥

ச-பா:-सर्वे ஸர்வே = சமஸ்த

வி-பா:-யத்ர சப்தமும், முன்வரும் இரண்டு அந்யத்ர சப்தத்தால் கூறப்பட்ட அர்த்தத்தைச் சொல்லுவதாய் ஒப்புக்கொள்ளாமல், பிராப்யமான பிரம்மத்தையே கூறுவதாய் ஒப்புக்கொள்ளவேண்டும். नीलोदीर्घोरक्तोह्रस्वः कः நீலோதீர்கோரக்தோஹ்ரஸ்வ: க: என்னுமிடத்தில் நீல பதத்திற்கும் தீர்க்க பதத்திற்கும் விரோத மில்லாதபடியால் அவை ஒரே அர்த்தத்தைக்கூறும். பின்வரும் ரக்த ஹ்ரஸ்வ பதங்களுக்குள் விரோதமில்லாதபடியால் அவை ஒரே அர்த்தத்தைக்கூறும். இவ்விடத்தில் ச காரமில்லாமற் போனாலும், கீழிருக்கும் இரண்டு ரக்தஹ்ரஸ்வ பதங்களும் போலிருக்கும் நீல தீர்க்க பதங்களோடு ஒரே அர்த்தத்தைக் கூறுவதாய் காணப்படவில்லை. ஆனால் மேற்படி வாக்கியம் இரண்டு புருஷர்களின் விஷயமாய் ஏற்பட்ட கேள்வி என்றே ஒப்புக்கொள்ளவேண்டும். இதுபோல் இவ்விடத்திலும் யத்பதத்தோடு அன்வயிக்க வேண்டிய இரண்டு சகாரம் இல்லாவிட்டாலும் 4-அந்யத்ர சப்தங்களும் ஒரே அர்த்தத்தைக் கூறமாட்டாது. மேலும், நீ சொல்லுகிறபடி ஒரே அர்த்தத்தைக் கூறுவதாக ஒப்புக்கொண்டாலும், கேள்வி மறுமொழிகளுக்கு இரண்டாவது வியாக்கியானத்தில், அடையத்தகுந்த வஸ்துவின் கேள்வியிலேயே அடங்கி யிருப்பதுபோல், உபாயத்தின் கேள்வியும் அடங்கி யிருப்பதால் त्रयाणामेव उपन्यासः प्रश्नश्च த்ரயாணாமேவ உபந்யாஸ: ப்ரஶ்நஶ்ச (I - 4 - 6) என்னும் சூத்திரப்படி உபாயம் உபேயம் உபேதா இவைகளின் கேள்வி மறுமொழிகள் கூறியிருப்பதாகச் சொல்லக்கூடாது. மேற்சொன்னபடி உபேயமே முக்கியமாய் கேட்கப்பட்டிருக்கிற தென்னும் கருத்தை அனுசரித்தே तत्तेपदंसंग्रहेणब्रवीमि தத்தேபதம்ஸங்க்ரஹேண ப்ரவீமி (I - 2 - 15) என்னும் வாக்கியத்தில் பத சப்தத்தால் கூறப்படும் ப்ராப்ய வஸ்துவே பிரதி வசனத்துக்கு அர்த்தமாக ஸ்பஷ்டமாய்த் தோன்றுகின்றது.

ச-பா:-वेदाः வேதா: = வேதங்களும்

यत् யத் = எந்த

पदं பதம் = அடையத்தகுந்த ஸ்வரூபத்தை

आमनन्ति ஆமநந்தி = பிரதிபாதிக்கின்றனவோ

सर्वाणि ஸர்வாணி = சகல

तपांसिच தபாம்ஸிச = கர்மங்களும்

यत् யத் = எதை

वदन्ति வதந்தி = சொல்லுகின்றனவோ (அதாவது தபசுகள் எந்தப்பிருப்திக்கி சாதனங்களோ)

வி-பா:-அ-கை:—இவ்விதமாய் கேட்கப்பட்ட யமன் नजायतेम्रियते நஜாயதே ம்ரியதே (2-18) முதலிய மந்திரங்களால், கேட்ட அர்த்தத்தை விஸ்தாரமாகச் சொல்ல எண்ணங்கொண்டு, கேட்கிறவனுக்கு அதிகமான ஆதரவு உண்டாகவேண்டியதற்காக, அடையத்தகுந்த வஸதுவின் மாஹாத்மியத்தைப் பிரகாசித்துக்கொண்டு, சங்கிரகமாகச் சொல்லுவதாய் सर्वे ஸர்வே என்னும் மந்திரத்தால் சொல்லுகிறான். ॥ 43 ॥

I - 2 - 15 வது மந்திரம்.

து-பா:-அ-கை:—(டீ) இவ்விதமாய் பிரார்த்திக்கப்பட்ட யமன், நசிகேதசுடைய புத்தியில் படுவதற்காக, சுருக்கமாய் பகவத் ஸ்வரூபத்தைச் சொல்லுவதாய் பிரதிஞ்ஞை செய்கிறான். (க) கேட்ட பிரம்ம ஸ்ரூபத்தை அதின் மஹிமையுடன் யமன் சொல்லுகிறான்.

सर्वे ஸர்வே = (அ-கை) சுருக்கமாய்ச் சொல்லுவதைக் கிரஹிப்பதில் உபயோகமில்லை என்னும் சங்கையை நிவிர்த்திக்கும் பொருட்டு சகல வேதங்கள் இவ்விடத்தில் கூறப்படுகின்றன.

सर्ववेदाः ஸர்வேவேதா: = ரிக் முதலிய எல்லாவேதங்களும்

यत्पदं யத்பதம் = எவனுடைய ஸ்வரூபத்தை

आमनन्ति ஆமநந்தி = முக்கியமாய் போதிக்கின்றனவோ

यद् (प्रीत) யத் (ப்ரீதி) = எவனைஉத்தேசித்து, எவனுடைய பிரீதியின் பொருட்டு

सर्वाणि ஸர்வாணி = சமஸ்தமான

तपांसि தபாம்ஸி = கர்மங்களையும்

वदन्ति வதந்தி = சொல்லுகின்றனவோ.

ச-பா:-यत् யத் = எதை
इच्छन्तः இச்ச²ந்த: = விரும்புகிறவர்கள்
ब्रह्मचर्यं ப்³ரஹ்மசர்யம் = பிரம்ம சரியநியமத்தை
चरन्ति சரந்தி = ஆசரிக்கிறார்களோ
तत् தத் = அந்த
पदं பத³ம் = ஸ்வரூபத்தை
ते தே = உனக்கு
सङ्ग्रहेण ஸங்க்³ரஹேண = சுருக்கமாய்
ब्रवीमि ப்³ரவீமி = சொல்லுகிறேன்
एतत् ஏதத் = இது
ओमिति ஓமிதி = ஓம் என்று (அறி)

து-பா:-यत् யத் = எவனுடைய (டீ) ஞானத்தை (க) பிரீதியை
इच्छन्त: இச்ச²ந்த: = இச்சிக்கிற மஹான்கள்
ब्रह्मचर्यं ப்³ரஹ்மசர்யம் = (டீ) குருகுலவாசம் முதலிய பிரம்ம சரியத்தை (க) பிரம்மத்தை விஷயமாக்கும் சிரவணம் முதலியவை களை அல்லது ஸ்திரீ சங்கமில்லாமை முதலிய விரதத்தை
चरन्ति சரந்தி = அனுஷ்டிக்கிறார்களோ
तत्पदं தத்பத³ம் = அந்த பகவானுடைய ஸ்வரூபத்தை
ते தே = உனக்கு
संग्रहेण ஸங்க்³ரஹேண = சுருக்கமாய்
ब्रवीमि ப்³ரவீமி = சொல்லுகிறேன்.
ओं इत्येतत् ஓம் இத்யேதத் = டீகாகாரர் இதை யமனுடைய வசனமாயும் கண்டார்த்தக்காரர் நசிகேதசுடைய அல்லது யமனுடைய வசனமாயும் அர்த்தம் செய்கிறார்கள். டீகைப்படி
एतत् ஏதத் = உன்னால் கேட்கப்பட்டபகவத் ஸ்வரூபத்தை
ओं ஓம் = குணநிறைந்த ரூபத்தால் ஓம் என்று பெயருள்ளதாக
इति இதி = உபாசிக்கவேண்டும். அல்லது உபதேச முடிவை இந்தப்பதம் கூறுகிறது. வேறுவித பாவத்தை நிவிர்த்தி செய்வதற்காக இதி சப்தம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.
(கண்டா) இவ்விதமாக யமனால் சொல்லப்பட்ட நசிகேதஸ் ஓம் என்று சொல்லுகிறான்.
एतत् ஏதத் = சொல்லுவதாக உம்மால் பிரதிஞ்ஞை செய்யப்பட்ட பிரம்மஸ்வரூபம்
इति இதி = "சகல வேதங்கள்" என்று நீர் சொன்னப் பிரகாரமாகவே
ओं ஓம் = இருக்கிறது என்கிற அங்கிகாரத்தை இந்த அக்ஷரம் கூறுகிறது.

ச-பா:-அ-கை :—இந்தப்படி கேட்ட நசிகேதசுக்கு யமன் கேட்ட வஸ்துவையும் வேறு விசேஷணத்தையும் 170 சொல்ல இச்சையுள்ளவனாய் சொன்னான்.

सर्वे...आमनन्ति ஸர்வே...ஆமநந்தி:—சகல வேதங்களும் 171 அடையக்கூடிய எந்த ஸ்தானத்தை ஒரேமொழியாய்ச் சொல்லுகின்றனவோ 171 (a)

तपांसि...वदन्ति தபாம்ஸி...வதந்தி :—சகல கர்மங்களும் எதை சொல்லுகின்றனவோ 172 (அதாவது எதை அடைய சாதனங்களோ)

यत्...चरन्ति யத்...சரந்தி :—எதை இச்சிக்கிறவர்கள் குருகுல வாசமாகிய பிரம்ம சரியத்தை (அல்லது வேறுவித 173 பிரம்ம சரியத்தை) யாவது ஆசரிக்கிறார்களோ

तत्... ब्रवीमि தத்...ப்ரவீமி :—நீ அறிய இச்சிக்கும் அந்த ஸ்தானத்தை உனக்கு சுருக்கமாகச் 174 சொல்லுகிறேன்.

ओंइत्येतत् ஓம்இத்யேதத் :—உன்னால் அறிய இச்சிக்கப்பட்ட 175 அந்த ஸ்தானம் ஓங்காரத்தால் கூறப்பட்டும் ஓங்காரத்

வி-பா:-पदं பதம் :—पद्यते பத்யதே என்னும் வித்பத்தியால் பத சப்தம் அடையத்தகுந்த வஸ்துவின் ஸ்வரூபத்தைச் சொல்லுகின்றது.

सर्वे...आमनन्ति ஸர்வே...ஆமநந்தி :—எந்த ஸ்வரூபத்தை சர்வவேதங்களும் நேராகவாவது பரம்பரையாகவாவது கூறுகின்றனவோ என்பது கருத்து.

170. ஓங்கார உபாசனே

171. சமானவாக்கியம் :—சுவேதா - IV-9; பக-கீதை VIII-II.

171. (a) तं त्वौपनिषदं தம்த்வௌபநிஷதம் முதலிய சுருதிகளால் சாக்ஷாத் ஞானசாதன மாகிய வேதங்களின் ஒருபாகமான உபநிஷத்துகள் என்று அறியத்தக்கது.

172. கர்மங்கள் அந்தக் கரணசுத்தி மூலமாக ஞானத்துக்குச்சாதகமாயிருப்பதால் அவைகள் நேரில் பிர்ம்மத்தைப் பிரதிபாதிக்க மாட்டாவாகையால் அடையச் சாதனங்கள் என்று சொல்லப்பட்டன.

173. இந்திரன் விரோசனன் இவர்களுடைய கதையில் கூறப்பட்ட பிரம்ம வித்தியாங்கமான பிரம்மசரியம்.

174. மந்தாதிகாரிகள் அறியவேண்டியதற்காக.

175. எந்த சப்தத்தை உச்சரிப்பதால் எந்த அர்த்தம் விளங்குகிறதோ, அந்த அர்த்தத்தை அந்த சப்தம் கூறுவதாகச் சொல்லப்படும். ஓங்காரத்தை உச்சரிப்பதினால் சித்தசமாதான முள்ளவனுக்கு எந்த சாக்ஷியின்

ச-பா:—தைப் பிரதீகமாயும் [176] உடைத்தாயிருக்கிறது.

வி-பா:—இந்த மந்திரத்தில், சகலவேதங்களாலும் பிரஸ்தாபிக்கப் படும் வஸ்துவைச் சொல்லுவதாய், கூறியிருப்பதால்.

प्रजापति ப்ரஜாவதி வித்தையைப்போல் இந்த உபநிஷத்து முழுமையும் பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைக் கூறும்என்னும் அடியில் விவரிக்கப்படும் சங்கைக்கு இடமில்லை.

சங்கையாவது :—

(1) नजायतेम्रियतेवाविपश्चित् நஜாயதெ ம்ரியதெவவிபஸ்சித் (கீ-II-18) हन्ताचेन्मन्येतहन्तुम् ஹந்தாசெந்மந்யெதஹந்தும் (கீ-II-19) என்னும் இரண்டு மந்திரங்களும் ஸ்பஷ்டமாய் பரிசுத்த ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறபடியால்,

(a) अणोरणीयान् அணோரணீயாந் (11 - 20) என்கிற மந்திரமும்

(b) अविनाशितुतद्विद्धि येन सर्व्वमिदंततं அவிநாஸிதுதத்வித்தியெந ஸர்வமிதந்ததம் (I - 2 - 15) (எந்த ஆத்மஸ்வரூபத்தால் இந்த சகல ஜகத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அது நாசமற்றதென்று அறி.

(c) निर्व्यापारं अनाख्येयं व्याप्तिमात्रमनूपमं

நிர்வ்யாபாரம் அநாக்யெயம் வ்யாப்திமாத்ரமநூபமம்

(சொரூபத்தில் வியாபாரமற்றது, பெயரற்றது, ஞான குணத்தின் வியாப்தியுள்ளது ஒப்பில்லாதது)

இந்த இரண்டு ஸ்மிருதி வசனங்களால் சகலத்திற்குள்ளேயும் பிரவேசிக்க யோக்கியமாயும், அதிசூட்சுமமாயும், வியாபகமாயுமிருக்கும் ஜீவஸ்வரூபத்தையே கூறுகின்றது.

(2) सूक्ष्मत्वात् तदविज्ञेयं दूरस्थञ्च अन्तिकेचतत्

ஸூக்ஷ்மத்வாத் தத்விஜ்ஞேயம் தூரஸ்தஞ்சாந்திகெசதத்

(அந்த ஆத்மஸ்வரூபம் சூட்சுமமாயிருப்பதால் அறியத்தகாதது, தூரத்திலும் சமீபத்திலு மிருக்கிறது) என்றும் கீதா (XIII 16) வாக்கியத்தை அனுசரித்து

ஞானம் மனதில் உதிக்கிறதோ அந்த சாக்ஷி ஓங்காரத்தால் கூறப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சத்துவ குணப்பிரதானமான மாயையால் மறைபட்டு ஓங்காரத்தை உபாதியாயுடைய பிர்ம்மமே நான் என்று தியானம் செய்யத்தக்கதென்பது கருத்து.

176. இதிலும் அசமர்த்தனுயிருக்கிறவன் பிரணவத்தைப் பிர்ம்ம ரூபமாக பாவிக்க வேண்டும்.

வி-பா:-आसीनो...सर्वत: ஆஸீநோ...ஸர்வத: என்னும் (II-21) மந்திரமும் அந்த ஜீவஸ்வரூபத்திற்கே பொருந்தலாம்.

(3) ग्रसिष्णु: प्रभविष्णुच க்ரஸிஷ்ணு: ப்ரபவிஷ்ணுச (சகலத்தையும் சம்காரம் செய்கிறவன், உண்டுபண்ணுகிறவன்) என்னும் உபபிரம்மண (வேதார்த்த நிர்ணய) வசனத்தை அனுசரித்து.

यस्य ब्रह्मच...सः யஸ்ய ப்ரஹ்மச...ஸ: என்னும் (II - 25) மந்திரமும் அந்த ஜீவஸ்வரூபத்திற்கு ஒத்த அர்த்தத்தையே கூறுவதாகச் சொல்லலாம்.

(4) द्वितीयं विष्णुसंज्ञस्य योगिध्येयंपरंपदं

த்விதீயம்விஷ்ணுஸம்ஜ்ஞஸ்ய யோகித்யேயம்பரம்பதம்

(விஷ்ணு என்னும் பெயருடைய இரண்டாவதான சுத்தாத்மாவின் ஸ்வரூபம் யோகிகளால் தியானிக்கக்கூடிய பரம்பதம்) என்று கருத்துள்ள விஷ்ணு புராணத்தை அனுசரித்து

सोध्वनः परं आप्नोति तद्विष्णोः परंपदं

ஸோத்வந: பரம் ஆப்னோதி தத்விஷ்ணோ:பரம்பதம்

என்னும் (I - 3 - 9) மந்திரம் சுத்தாத்ம ஸ்வரூபத்திற்கே ஒக்கும்.

(5) अव्यक्तोऽक्षरइत्युक्तस्तमाहुः परमांगतिं

அவ்யக்தோऽக்ஷரஇத்யுக்தஸ்தமாஹு: பரமாம்கதிம்

(சுத்தாத்மா அவ்வியக்தமென்றும் சுத்தமென்றும் சொல்லப்படுகின்றான். அவனே பரமகதியாகச் சொல்லுகிறார்கள்.) என்னும் கீதா (VIII - 21) வசனத்தால் साकाष्ठासापरागतिः ஸாகாஷ்டாஸாபராகதி: என்னும் (I-3-11) மந்திரமும் பரிசுத்த ஆத்மாவைச் சொல்லலாம்.

(6) समंसर्वेषु भूतेषुतिष्ठन्तंपरमेश्वरं

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம்பரமேஶ்வரம்

(சர்வ பூதங்களிடத்திலும் ஒரே ரூபமாயிருக்கிறான். அவன் பரம ஐசுவரியமுள்ளவன்) என்னும் கீதா (XIII - 28) வசனத்தை அனுசரித்து

एषसर्वेषुभूतेषु ஏஷஸர்வேஷு பூதேஷு என்னும் (I-3-12) மந்திரமும் ஆத்மாவின் சுத்த ஸ்வரூபத்தைச் சொல்லலாம்.

(7) पराञ्चिखानि பராஞ்சிகாநி என்னும் (IV - 1) மந்திரத்தில் ஆத்மாவுக்கு வெளியிலுள்ள பதார்த்தங்களை நிந்திப்பதின் மூலமாக பிரத்தியக் என்னும் ஆத்மாவே கூறப்பட்டிருக்கின்றது.

வி-பா:-(8) तिष्ठन्तंपरमेश्वरं திஷ்டந்தம்பரமேச்வரம் என்னும்கீதாவாக்கியத்தில் சுத்த ஆத்மா பரமேசுவரன் என்று சொல்லியிருப்பதால் ईशानोभूतभव्यस्य ஈசாநோபூதபவ்யஸ்ய என்னும் (க. II-1-12.) மந்திரமும் சுத்தாத்ம ஸ்வரூபத்தைக் கூறலாம்.

(9) பேத பிரசக்தியுள்ள பிரத்தியகாத்ம ஸ்வரூபத்திலேயே நேஹநாநா என்று பேதநிஷேதம் ஒவ்வும்படியாயிருப்பதால்

वेणुरन्ध्रविभेदेन भेदः षड्जाद्यभिसंज्ञितः ।
अभेदव्यापिनोवायोः तथासौपरमात्मनः ॥
வேணுரந்த்ரவிபேதேந பேத: ஷட்ஜாத்யபிஸம்ஜ்ஞித: ।
அபேதவ்யாபிநோவாயோ: ததாஸௌபரமாத்மந: ॥

(ஒரேமாதிரியாய் அநேக துவாரங்களில் பிரவேசிக்கும் வாயுவுக்கு புல்லாங் குழலின் வெவ்வேறு துவாரசம்பந்தத்தால் ஷட்ஜ முதலிய பெயர் கிடைக்கிறதுபோல, ஏகரூபமான ஆத்மா தேவ சரீரம் முதலான அநேக சரீரங்களில் பிரவேசித்தாலும், சரீரங்களின் வித்தியாசத்தால், தேவன், மனுஷ்யன் முதலிய பேதம் ஏற்படுகிறது.) என்னும் விஷ்ணுபுராண வசனம் கூறும் அர்த்தத்தை वायुः यथैकोभुवनंप्रविष्टः வாயு: யதைகோபுவநம்ப்ரவிஷ்ட: என்னும் (க. II-1-10.) மந்திரமும் கூறுகிறது. இந்த மந்திரமும் சுத்த ஆத்ம ஸ்வரூபத்தைக் கூறலாம்.

(10) सर्वतः पाणिपादं ஸர்வத: பாணிபாதம் என்னும் கீதா (XIII 14) வாக்கியத்தின் பாஷ்யத்தில், பரப்பிர்ம்மத்தோடு அதிசாதிருசியத்தை அடைந்திருக்கிற சுத்த ஆத்மஸ்வரூபத்தில் ஸர்வத: பாணிபாதாதி (எல்லா விடத்திலுமுள்ள கைகால் முதலியவைகளால்) செய்யப்படும் காரியத்தைச் செய்யக்கூடிய தன்மை சம்பவிக்கலாம் என்று சொல்லியிருப்பதால் एकंबीजंबहुधाकरोति ஏகம் பீஜம்பஹுதாகரோதி என்னும் மந்திரமும் சுத்தாத்மாவைக் கூறுவதில் பாதகமில்லை.

(11) नतत्रसूर्योभाति நதத்ரஸூர்யோபாதி என்னும் (க. II-2-15.) மந்திரமும்

नतत् भासयतेसूर्यः, ज्योतिषामपितज्ज्योतिः तमसः परमुच्यते நதத்பாஸயதேஸூர்ய:, ஜ்யோதிஷாமபிதஜ்ஜ்யோதி: தமஸ:பரமுச்யதே (அந்த ஆத்மஸ்வரூபத்தை சூரியன் பிரகாசிக்கும்படிச் செய்யமாட்டான், ஜோதிகளுக் கெல்லாம் ஜோதி, பிரகிருதிக்கு விலக்ஷணம்) என்னும் கீதா (XV6; XIII-18) வாக்கியங்களால், பரிசுத்த ஆதமஸ்வரூபத்தைச் சொல்லுவதாக பாவிப்பதே யுக்தமாயிருக்கிறது.

வி·பா:-(12) त स्वात् शरीरात्प्रवृहेत् தம்ஸ்வாச்ச்ரீராத் ப்ரவ்ருஹேத் என்னும் உபசம்காரத்திலுள்ள (க. II-3-17) மந்திரமும் சுத்த ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லுவதாக ஒப்புக்கொள்ளுவதே யுக்தமாயிருக்கிறது.

ஆனதால் இந்த கடோபநிஷத்து முழுமையும் சாந்தோக்கியத்திலுள்ள பிரஜாபதி வாக்கியம்போல் பிரத்தியகாத்மஸ்வரூபத்தை மாத்திரம் சொல்லுகிறதென்று சொல்லும்படியிருக்க, பிரத்தியகாத்மஸ்வரூபம், பரமாத்மஸ்வரூபம் இவ்விரண்டு பிராப்யங்களையும் சொல்லுவதாய் சிரமப்படுவது வியர்த்தம்.

சித்தாந்தி :—சகல வேதங்களாலும் கூறப்படும் வஸ்துவையே तत्तेपदंसंग्रहेणब्रवीमि தத்தேபதம்ஸம் க்ரஹேணப்ரவீமி (க. I-2-15) என்னும் வாக்கியத்தால் சொல்லுவதாய் யமன் பிரதிஞ்ஞை செய்கிறான். பரமாத்மஸ்வரூபத்தைச் சொல்லும் வேதபாகத்தால் கூறப்படும்தன்மை சுத்தஸ்வரூபத்திலில்லை. சுத்த ஸ்வரூபத்தைச்சொல்லும் வேதபாகத்தால் கூறப்படும்தன்மை, அந்த சுத்த ஸ்வரூபத்திற்கு அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மஸ்வரூபத்திற்காணப்படுகின்றது. ஆனதால் சகல வேதங்களாலும் கூறப்படும் தன்மை பரமாத்மாவுக்கே இருக்கிறது. ஆகையால் இந்த கடோபநிஷத்தில் முக்கியமாய் பரமாத்மாவைச் சொல்லுவதாய் ஒப்புக்கொள்ள வேண்டுமேதவிர, ஜீவஸ்வரூபத்தை சொல்லுவதாய் ஒப்புக்கொள்ளக் கூடாது.

तपांसि தபாம்ஸி:—இந்த மந்திரத்தின் மேல்பாகம் தபஸையே முக்கியமாய்ச் சொல்லுவதாக வியாசாசாரியார் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

यदिच्छन्तो... யதிச்சந்தோ... :—எந்த பதத்தை இச்சிக்கிறவர்கள் பிரம்மசரியத்தை அதாவது குருகுலவாசம் - ஸ்திரீ சங்கமில்லாமை, முதலியவைகளை அடையாளமாயுள்ள அனுஷ்டானங்களைச் செய்கிறார்களோ.

तत्तेपदं... தத்தேபதம் :—संगृह्यतेअनेन ஸம்க்ருஹ்யதேஅநேந என்னும் வித்பத்தியால் சங்கிரகம் என்றால் சப்தம் என்று அர்த்தம். அடையத்தகுந்தவஸ்துவைச் சொல்லுவதாகச் செய்யப்படும் பிரதிஞ்ஞையைக்கூறும் இந்த மந்திரத்தில், தற்செயலாய் பிரணவத்தின் பிரசம்சை ஏற்படுகிறபடியால், प्रणवप्रशस्य ப்ரணவம் ப்ரசஸ்ய) பிரணவத்தைத் துதித்து) என்னும் ஸ்ரீ பாஷ்யத்திற்கும், सर्वेवेदाः ஸர்வேவேதா: முதலான மூன்று மந்திரங்களில் கூறப்

I - 2 - 16 - வது மந்திரம்.

एतद्ध्येवाक्षरंब्रह्म एतद्ध्येवाक्षरं परं ।
एतद्ध्येवाक्षरंज्ञात्वा यो यदिच्छति तस्य तत् ॥ 45 ॥

வஏதத்யேவாக்ஷரம்ப்ரஹ்ம வஏதத்யேவாக்ஷரம்பரம் ।
வஏதத்யேவாக்ஷரஞ்ஜ்ஞாத்வா யோ யதிச்சதி தஸ்ய தத் ॥ 45 ॥

हि ஹி = ஆகையால்
एतत् வஏதத் = இந்த
अक्षरं एव அக்ஷரம்வஏவ = அக்ஷரமே

வி-பா:—பட்ட பிரம்மத்தை பிரணவத்தால் துதித்து என்று அர்த்தம்-என்னும் சுருதப் பிரகாசிகையின் வசனத்திற்கும் விரோதமில்லை.

ஓ...ஒழ...அந்தபதத்தைச் சுருக்கமாய்ச் சொல்லும் சப்தம் என்னவெனில் ஓம் இத்யேதத் என்று சொல்லுகிறார்.

ओंतत्सत् निर्देशः ब्रह्मणः त्रिविधः स्मृतः ஓம்தத்ஸத்நிர்தேசஃ ப்ரஹ்மணஃ த்ரிவிதஃஸ்ம்ருதஃ (ஓம், தத், சத் என்னும் 3 பதங்களால் பிரம்மம் கூறப்படுகிறது) என்றும் கீதா XVII-23) வாக்கியத்தால் பிரணவம் பிரம்மத்தைக்கூறும் சப்தமாயிருக்கின்றது. பிரணவத்தின் அவயவங்களான அகாரம் பரமாத்மாவையும் மகாரம் ஜீவனையும் சொல்லுவதால், அகார உகார மகாரங்களுடன் கூடின ஓங்காரத்தால் அடையப்படும் வஸ்துவான பிரம்மமும், அடையும் உபாயமும் அடைகிற ஜீவனும் உபதேசிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள வேண்டியது. ॥ 44 ॥

I-II-16-வது மந்திரம்.

அ-கை:—மேற் சொல்லியபடி அர்த்தத்துடன் கூடிய ஓங்காரத்தை இரண்டு மந்திரங்களால் ஸ்தோத்திரஞ் செய்கிறார்.

एतत्...ब्रह्म :—ओं इत्यनेनैवअक्षरेणपरमपुरुषं अभिध्यायीत வஏதத்... ப்ரஹ்ம :—ஓமித்யநேநைவ அக்ஷரேண பரமபுருஷம் அபித்யாயீத (ஓம் என்கிற அக்ஷரத்தாலேயே பரமபுருஷனைத்

I-2-16-வது மந்திரம்.

து-பா:—அ-கை:—பிரம்மஸ்வரூபத்தைச்சொல்ல இச்சிக்கும் யமன் அதை அறிகிறவனுக்குப்பலத்தை அதின் மாஹாத்மிய பூர்வகமாய்ச் சொல்லுகிறான்.

एतत् एव வஏதத் வஏவ=(இ) ஓம் என்று பெயருள்ள வஸ்துவே

अक्षरं அக்ஷரம் = தேகாதிகளில் நாசமற்றது.

ब्रह्म ப்ரஹ்ம=குணத்தால் பூர்ணமானது.

हि ஹி = எக்காரணத்தால்

ச-பா:—अपरं ப்ரஹ்ம = அபர பிரம்மம்

एतत् एव अक्षरं ஏதத் ஏவ அக்ஷரம் = இந்த அக்ஷரமே

परं பரம் = பரப்பிரம்மம்

एतत् हि एव अक्षरं ஏதத் ஹி ஏவ அக்ஷரம் = இந்த அக்ஷரத்தை யே

ज्ञात्वा ஜ்ஞாத்வா = அறிந்து

यः யஃ = எவன்

यत् யத் = எதை

इच्छति இச்சதி = இச்சிக்கிறானோ

तस्य தஸ்ய = அவனுக்கு

तत् தத் = அது

(भवति பவதி = உண்டாகிறது)

வி-பா:—தியானம் செய்யவேண்டும் என்னும் வாக்கியத்தால் ஓங்காரமானது பிரம்மத்தை அடைவதற்குச் சாதனமான தியானத்துக்குப் பிடிப்பாயிருக்கிறது. அதாவது ஓங்காரமே தியான சாதனம். இப்படிப் பிரம்மப்பிராப்திக்குச் சாதனமாயிருப்பதால் இந்த அக்ஷரம் பிரம்மம் என்று சொல்லப்படுகிறது.

एतत्...परं ஏதத்...பரம் :—ஜபம் செய்யத்தக்கவைகளுக்குள்ளும் தியானம் செய்யத்தக்கவைகளுக்குள்ளும் இது சிரேஷ்டம் என்று அர்த்தம்.

एतत् हि एव अक्षरं ஏதத் ஹி ஏவ அக்ஷரம் = இந்த ஓங்கார அக்ஷரத்தையே

ज्ञात्वा ஜ்ஞாத்வா = அறிந்து தியானம் செய்து, இந்த உபாசனையால்

यः யஃ = எவன்

து-பா:—एतदेवाक्षरं ஏதத் ஏவாக்ஷரம் = இந்த அக்ஷரமான வஸ்து

परं பரம் சகலத்திற்கும் பரமாயிருக்கிறதோ, அக்காரணத்தால்

एतत् एव अक्षरं ஏதத் ஏவ அக்ஷரம் = இந்த அக்ஷரத்தையே

ज्ञात्वा ஜ்ஞாத்வா = அறிந்து

यः யஃ = எந்த அதிகாரி

यत् इच्छति யத் இச்சதி = எதை இச்சிக்கிறானோ

तस्य தஸ்ய = அவனுக்கு

तत् தத் = அந்தபலம்

हि ஹி = பகவானிடத்தில் கிடைக்கிறதென்பது சித்தம்.

ச-பா:-एतत्...ब्रह्म ஏதத்...ப்ரஹ்ம:—அ:— ஆகையால் 177 இந்த அக்ஷரம் அபரப் பிர்ம்மமே.

एतत्...परं ஏதத்...பரம்:—ஆகையால் இந்த அக்ஷரம் பரப்பிரம்மமும் தான்.

एतत्...ज्ञात्वा ஏதத்...ஜ்ஞாத்வா :—இவைகளுக்கு ஓங்காரம் வாசகமாயும் பிரதீகமாயு மிருக்கிறது. இந்த ஓங்காரத்தை உபாஸ்யபிர்ம்மம் என்று அறிந்து

यो...तत् யோ...தத்:—எவன் பரம் அல்லது அபரம் இவைகளில் எதை இச்சிக்கிருனோ அவனுக்கு அது உண்டாகிறது (சித்திக்கிறது), பரப்பிர்ம்மத்தை இச்சித்தால் அது அறியப்படுகிறது. அபர பிர்ம்மத்தை இச்சித்தால் அது அடையப்படுகிறது. ॥ 45 ॥

வி-பா:-यत् யத்=எந்த பலத்தை

इच्छति இச்சதி=இச்சிக்கிருனோ

तस्य தஸ்ய=அவனுக்கு

तत् தத்=அந்தபலன் கிடைக்கும். ॥46॥

(கண்டார்த்தப்படி)

து-பா:-एतत् ஏதத்=உன்னுல் கேட்கப்பட்டது

अक्षरं அக்ஷரம்=விநாசமற்ற

ब्रह्म एव ப்ரஹ்மஏவ=பிரம்மமே.

एतत् एव ஏதத் ஏவ=இதுவே

परं अक्षरं பரம் அக்ஷரம்=பரமமான அக்ஷரம் என்று பெயருள்ளது.

हि ஹி = இது பிரசித்தியைக் கூறுகின்றது.

एतत्...तत् ஏதத்...தத் = எந்த அதிகாரி இதை அறிந்து எதை இச்சிக்கிருனோ அவனுக்கு அந்த இச்சை நிறைவேறுகிறது நிச்சயம் என்று அர்த்தம். ॥ 45 ॥

178. தத்துவ விசாரத்துக்கு அதிகார மில்லாதவர்களுக்கு ஓங்கார உபாசனையைச்சொல்லி, அதின் பலத்தைச் சொல்லிக்கொண்டு ஓங்காரத்தை ஸ்துதிக்கிருர். ஓங்காரம் பிரம்ம வாசகமாயும் பிரம்மப்பிரதீகமாயு மிருப்பதால்.

I - 2 - 17 - வது மந்திரம்.

एतदालम्बनं श्रेष्ठमेतदालम्बनं परं ।
एतदालम्बनंज्ञात्वा ब्रह्मलोके महीयते ॥ 46 ॥

𑌏𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑍇𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂𑌪𑌰𑌂 ।
𑌏𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ॥ 46 ॥

एतत् 𑌏𑌤𑌤𑍍=இந்த ஓங்காரமாகிய

आलम्बनं 𑌆𑌲𑌮𑍍𑌬𑌨𑌂=பிரம்மபிராப்தி சாதனம்

श्रेष्ठं 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂=சிரேஷ்டமானது.

एतत् 𑌏𑌤𑌤𑍍 =இந்த ஓங்காரமாகிய

आलम्बनं 𑌆𑌲𑌮𑍍𑌬𑌨𑌂=பிரம்ம பிராப்திசாதனம்

परं 𑌪𑌰𑌂=பரமாயும் அபரமாயுமுளது.

एतत् 𑌏𑌤𑌤𑍍=இப்படிப்பட்ட

I - II-17-வது மந்திரம்.

வி-பா:-एतत् आलंबनं 𑌏𑌤𑌤𑍍 𑌆𑌲𑌂𑌬𑌨𑌂:இந்த ஓங்காரத்தின் ஆலம்பனம்

(ध्यानादेः 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑍇𑌃 = தியானம் முதலியவைகளுக்கு

श्रेष्ठं 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂=சிரேஷ்டம் ஆனதால்

एतत्आलंबनंपरं 𑌏𑌤𑌤𑍍𑌆𑌲𑌂𑌬𑌨𑌂𑌪𑌰𑌂 :—இதை அவலம்பித்து (பிடித்து) க்கொண்டிருக்கிற தியானம் முதலியவைகள் மிகவும் சிரேஷ்டம்.

एतत्...महीयते 𑌏𑌤𑌤𑍍...𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 :—அர்த்தம் ஸ்பஷ்டம். (பதவுரையைப் பார்க்க.) ॥ 46 ॥

1 - 2 - 17 - வது மந்திரம்.

துபா:-एतत् 𑌏𑌤𑌤𑍍= ஓம் என்று பெயருள்ள பிரம்மம் (க) உன்னால் கேட்கப் பட்டதானது.

श्रेष्ठं आलंबनं 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌆𑌲𑌂𑌬𑌨𑌂=சமஸ்தத்திற்கும் முக்கியமான ஆசிரயம்.

परंआलंबनं 𑌪𑌰𑌂𑌆𑌲𑌂𑌬𑌨𑌂=இராஜாதி போல ஆசிரயமல்ல. விலக்ஷணமான ஆசிரயம்

एतत्आलंबनं ज्ञात्वा 𑌏𑌤𑌤𑍍𑌆𑌲𑌂𑌬𑌨𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾= இந்த ஆசிரயத்தை அறிந்து

ब्रह्मलोके 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇=பிரம்மலோகத்தில் அல்லது சத்தியலோகத்தில்

महीयते 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 = தனக்குக் கீழ்ப்பட்டவர்களால் பூஜிக்கப்படுகிறான்,

I - 2 - 18 - வது மந்திரம்.

न जायते म्रियते वा विपश्चिन्नायं कुतश्चिन्न बभूव कश्चित् ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥ 47 ॥

ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சிந்நாயம் குதஶ்சிந்ந பபூவ கஶ்சித் । அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥ 47 ॥

ச-பா:-आलम्बनं ஆலம்பநம் = சாதனத்தை
ज्ञात्वा ஜ்ஞாத்வா = தெரிந்துகொண்டு
ब्रह्मलोके ப்ரஹ்மலோகே = பிரம்மலோகத்தில்
महीयते மஹீயதே = பூஜ்ஜியனாகிறான்
एतत्...श्रेष्ठं ஏதத்...ஶ்ரேஷ்டம் :-இப்படி இருப்பதால் 178 இந்த ஓங்காரமாகிய சாதனம் பிரம்ம பிராப்திக்கு ஏற்பட்ட சாதகங்களுக்குள் 179 சிரேஷ்டமானது

एतत्...परं ஏதத்...பரம் :—இந்த சாதகம் பரம் அபரம் இரண்டையும் விஷயமாக்குகிறபடியால் இதுவே பரமாயும் அபரமாயுமிருக்கிறது.

एतत् ... महीयते ஏதத்...மஹீயதே = இந்த சாதகமான ஓங்காரத்தை அறிந்து, பர அபர பிரம்மபாவத்தை அடைந்து பிரம்மம்போல் உபாஸ்யனாகிறான் என்பது அர்த்தம். ॥46॥

अयं அயம் = இந்த ஆத்மா
नजायते நஜாயதே = பிறக்கிறதில்லை.
नम्रियतेवा நம்ரியதேவா = மறண மடைகிறதில்லை
विपश्चित् விபஶ்சித் = சர்வஞ்ஞன்
कुतश्चित् குதஶ்சித் = வேறு யாதொரு காரணத்தினின்றும்
नबभूव நபபூவ = உண்டாகவில்லை

துபா:- பிரமாண வாக்கியம் :—

एतद्ध्येवाक्षरंब्रह्म विष्णवाख्यं परमव्ययं ।
सर्वस्यालम्बनंज्ञात्वा मुच्यते नात्रसंशयः ॥ (इति महावराहे)
ஏதத்த்யேவாக்ஷரம்ப்ரஹ்ம விஷ்ணவாக்யம் பரமவ்யயம் ।
ஸர்வஸ்யாலம்பநம்ஜ்ஞாத்வா முச்யதே நாத்ரஸம்ஶய: ॥
(இதி மஹாவராஹே) ॥46॥

179. பரம் அபரம் இவ்விரண்டையும் அடைய சாதனமாயிருப்பதால்
180. காயத்திரி முதலியவைகளுக்குள்.

ச-பா:—कश्चित् கஶ்சித்=வேறு யாதொன்றும்
(अतः அத:=இதினின்றும்)
नबभूव நபபூவ = உண்டாகிறதில்லை.
अजः அஜ:=பிறப்பற்றது
नित्यः நித்ய: = நித்தியமாயிருக்கிறது நாசமற்றது
शाश्वतः ஶாஶ்வத:=அபக்ஷய மில்லாதது
पुराणः புராண: = புராதனமானது, (வளர்தலற்றது)
शरीरे ஶரீரே = தேகம்
हन्यमाने ஹந்யமாநே=கொல்லப் படும்போது
अयं அயம்=இந்த ஆத்மா
नहन्यते நஹந்யதே=கொல்லப்படுகிற தில்லை.

அ:—अन्यत्र धर्मात् அந்யத்ர தர்மாத் 180 (I - 2 - 14) முதலிய வசனத்தால் கேட்கப்பட்ட நிர் விசேஷமான 181 ஆத்மாவுக்கும் அபரப் பிரம்மத்துக்கும் ஓங்காரம் ஆலம்பனமாயும் பிரதீகமாயும் மற்ற மத்தியமாதிகாரிகளின் பொருட்டு சொல்லப்பட்டது.

I-II-18-வது மந்திரம்.

வி-பா:-அ-கை:—नजायते நஜாயதே முதலிய இரண்டு மந்திரங்களால்முதலில் ஜீவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார். இந்த மந்திரத்தை பிரஸ்தாபித்து வியாச ப்பட்டர் அடியில் வருமாறு சொல்லியிருக்கிறார். இந்த இரண்டு மந்திரங்களும் ஒரு விஷயத்தையே சொல்லுகின்றன. ஏனெனின் न हन्यते हन्यमाने शरीरे நஹந்யதே ஹந்யமாநே ஶரீரே என்னும் வாக்கியத்துக்கு வியாக்கியானமாய் இரண்டாவது மந்திரம் இருக்கிறது. हन्ताचेत् ஹந்தாசேத் என்னும் மந்திரமும் ஜீவவிஷயமே. பரமாத்மா கொல்லுகிறான், கொல்லப்படுகிறான், என்கிற ஞானம் ஜனங்களுக்கு இல்லை. ஏனெனின் பரமாத்மாபிரத்தியக்ஷப் பிரமாணத்தால் அறியப்படவில்லை

I - 2 - 18 வது மந்திரம்.

து-பா:—அ-கை:—பிரம்மலோகத்தை அடைந்தஞானிக்கும் ஜன்ம மரணங்களுண்டானல் அது சிரேஷ்டமான பலனாகாதே எனின், அவன் ஜனனமரணங்களை அடைகிறதில்லை என்கிறார்.

181. சாதன மில்லாதவனுக்குச் செய்யப்படும் உபதேசம் அநர்த்தத்தில் முடியும் என்று நினைத்து மந்தமத்திய மாதிகாரிகளுக்கு உத்தமமத்திய ம உபாயங்களைச்சொல்லி, இப்போது கேட்கப்பட்டதின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்.

182. வாஸ்தவத்தில் உபாதியற்ற பிர்ம்மத்துக்கு உபாதியை கற்பித்து பிரதீகாதிகள் சொல்லப்பட்டன.

ச-பா:—பிறகு[122] இப்போது ஓங்காரமாகிற உபாதியுடைய[183] அந்த ஆத்மாவின் சாக்ஷாத் ஸ்வரூபத்தை[184] நிச்சயிக்க வேண்டுமென்கிற இச்சையால் பின்வருமாறு[185] சொல்லப்படுகிறது.

வி-பா:—ஆகவேபரமாத்மா கொல்லுகிறான், கொல்லப்படுகிறான், என்கிறஞானம் எப்படி உண்டாகும். நான் இவனை கொல்லுகிறேன், இவன் என்னைக் கொல்ல வருகிறான், என்பதாய் ஜீவன் விஷயத்திலேயே இந்த ஞானம் ஜனங்களுக்கு உண்டாகிறது.

ஆக்ஷேபம்:—न अस्य जरयातज्जीर्यति நகஸ்யஜராயாதஜ்ஜீர்யதி என்னுமிடத்தில் இந்த சரீரத்தின் கிழத்தனத்தால் இதற்குள்ளிருக்கும் பரமாத்ம ஸ்வரூபம் கிழத்தனத்தை அடைகிறதில்லை என்று சொல்லியிருப்பதுபோல, இவ்விடத்திலும் பரமாத்மாவுக்கே கொல்லும், கொல்லப்படும் தன்மை நிஷேதிக்கப்படட்டுமே.

சமாதானம்:—மெய்யே. ஹிருதயாகாசத்திலிருக்கிற பிரம்மத்தை உத்தேசித்து, அதற்குச் சரீர விகாரங்கள் நிஷேதிக்கப்படலாம். இவ்விடத்திலோ ஜனங்களால் பிரம்மம் என்னும் பதத்தால் சாதாரணமாய் கிரகிக்கப்படும் அர்த்தத்தை எடுத்துக்கொண்டு நிஷேதம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுக்குக்கூட பிரம்மம் கொல்லுகிறதென்றாவது, கொல்லப்படுகிறதென்றாவது பிரமை இல்லை. ஆகையால் பிரம்மத்தை உத்தேசித்து மேற்சொல்லிய பிரமையை எடுத்துச்சொல்லி நிஷேதித்தல் கூடாது.

183. சாதனங்களைச் சொன்ன பிறகு.

184. உபாசனையின்பொருட்டு கற்பிக்கபட்ட உபாதியையுடைய.

185. உபாதியற்ற.

186. "இனி சொல்லப்போகிறது எந்த கேள்விக்கு [உத்தரம். अन्यत्रधर्मात् அந்யத்ரதர்மாத் என்னும் மந்திரத்தில் கேட்ட கேள்விக்கு உத்தரமாயிருந்தால், येयंप्रेते யேயம்ப்ரேதே என்னும் மந்திரத்திற்கேட்ட கேள்விக்கு உத்தரம் என்ன. இப்போது சொல்லப்போகிறதே உத்தரமெனின் வெவ்வேறான இரண்டு ஆத்மாக்கள் விஷயமாய் ஒரே உத்தரம் கொடுபடமாட்டாது" இந்த ஆக்ஷேபம் ஒவ்வாது. ஏனெனின் ஆத்மா பேதமற்றது. பரமாத்மாவைவிட வேறாக ஜீவாத்மா இருந்தால்பரமாத்மவிஷயமான अन्यत्रधर्मात् அந்யத்ரதர்மாத் =கேள்விக்கு नजायते நஜாயதே என்னும் மந்திரம் உத்தரமாகமாட்டாது. ஏனெனின் பரமாத்மாவுக்கு ஜன்மாதிகளின் சம்பந்தமில்லை. இவ்விருவர்களும் ஒன்றானால் வியாவஹாரிக ஜீவன் பரமாத்மாவின் அம்சமானதால் ஜீவனுக்கு நிஷேதிக்கப்படும் ஜன்மாதிகள் பரமாத்மாவுக்கும் நிஷேதிக்கலாம். ஆகையால் 2-பிரச்னங்களுக்கும் ஒரே உத்தரம் என்பதுகருத்து.

ச-பா:—नयाजते...वा நஜாயதே...வா,—இந்த ஆத்மா ஜனிக்கிற தில்லை, மரிக்கிறதில்லை. உற்பத்தியுள்ள அநித்திய வஸ்துக்களுக்கு அநேக விகாரங்களுண்டு. அவைகளுக்குள் ஆதி அந்தமான ஜன்ம மரணங்கள் இந்த ஆத்மாவுக்கு இல்லை என்று சொன்ன தானது சகல விகாரங்களும் இல்லை என்று சொல்லும் பொருட் டேயாம்.

विपश्चित् விபஶ்சித்:—கேவல சேதன ஸ்வரூபனானதால் சர்வஞ்ஞன்.

न...कुतश्चित् ந...குதஃசித்:—இந்த ஆத்மா ஒருவித காரணத்தினின்றும் உண்டாகவில்லை.

न...कश्चित् ந...கஶ்சித்:—இந்த ஆத்மாவி னிடத்தினின்றும்

வி-பா:—नजायते நஜாயதே என்னும் மந்திரமும் हन्ताचेत् ஹந்தாசேத் என்னும் மந்திரமும் ஒரு அர்த்தத்தைச் சொல்லுகின்றன. ஆனதால் இரண்டு மந்திரங்களும் ஜீவனையே குறிப்பிடுகின்றன.

विपश्चित् விபஶ்சித் = சகலத்தையும் அறியும் தன்மைக்கு யோக்கியனான இவன் இப்போது கூட

नजायतेम्रियतेवा நஜாயதே ம்ரியதே வா = ஜனன மரணங்களற்றவன்.

न अयं कुतश्चित् நஅயம் குதஶ்சித் = இவனை உண்டுபண்ணுகிறவன் ஒருவனுமில்லை.

न बभूवकश्चित् ந பபூவகஶ்சித் = முந்தியுங்கூட மனிதன்

து-பா:—विपश्चित् விபஶ்சித் = ஞானி, பிரம்மலோகத்தை அடைந்து

नजायतेम्रियतेवा நஜாயதே ம்ரியதே வா = தேகசம்பந்தம் என்னும் ஜன்மத்தையும், தேகவியோகமென்னும் மரணத்தையும் அடைகிறதில்லை. இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லுகிறார்.

(1) नायंकुतश्चित् நாயம்குதஶ்சித்

(2) नबभूवकश्चित् நபபூவகஶ்சித்

अयं அயம் = இந்த பகவான்

कुताश्चित् குதஶ்சித் = ஒன்றினிடத்திலிருந்தும்

न ந = உண்டாகிறதில்லை, மரிக்கிறதில்லை. பகவானுக்கு ஜன்மமரணங்களில்லாமையால், அப்படிப்பட்ட பகவானை அறிந்த ஞானிக்கும் தேக சம்பந்த வியோகரூப ஜன்ம மரணங்களுண்டாகமாட்டா.

नबभूवकश्चित् நபபூவகஶ்சித் = இந்த இடத்தில் ஞானிக்குக் கூறப்பட்டிருக்கும் ஜனனமரண மில்லாமை என்பது தேகத்தின்

ச-பா:—வேறு சத்தியபதார்த்தம் ஒன்றும் உண்டாகவில்லை.

अजः—अयं அஜ:...அயம் :—ஆகையால் இந்த ஆத்மா ஜனன மற்றவன், நித்தியன், (நாசமற்றவன,) சாஸ்வதன் (க்ஷயமற்றவன்)

पुराणः புராண:—எவன் சாஸ்வதனல்லவோ அவன் க்ஷயத்தை அடைகிருன். இவன் சாஸ்வதன்; ஆனதால் புராணன் அதாவது முன்னமேயும் புதியதானவன். எந்த பதார்த்தம் அவயவங்களின் ஜாஸ்தியால் வேறுபாட்டை அடைகிறதோ அது அப்போது புதியதாகிறது. திருஷ்டாந்தம் மண்குடம் முதலியவை.

வி-பா:—முதலான ரூபமாக உற்பத்தியில்லாதவன்.

अज :— नजायते அஜ: : நஜாயதே (ஜனிக்கிறதில்லை) என்று சொன்னதற்குக் காரணம் சொல்லுகிருர்.

नित्यः —नम्रियते நித்ய: : நம்ரியதே (மரிக்கிறதில்லை) என்று சொன்னதற்குக் காரணம் சொலலுகிருர்.

शाश्वतः :— नकुतश्चित् சாஸ்வத: : நகுதஸ்சித் (ஒரு இடத்தினின்று முண்டாகவில்லை) என்று சொன்னதற்குக் காரணம் சொல்லுகிருர்.

पुराणः —नबभूव புராண: :—நபபூவ (முந்தியும் உண்டாகவில்லை) என்று சொன்னதற்குக் காரணம் சொல்லுகிருர்.

துபா:—உற்பத்தி விநாச மில்லாமையே தவிர ஸ்வரூபத்தின் உற்பத்தி விநாசமில்லாமையல்ல. ஏனெனின் அது எல்லாருக்கும் பொதுவாயிருக்கின்றது. ஒரு ஜீவனும் ஸ்வரூபத்தால் உண்டானதில்லை, உண்டாகிறதில்லை, உண்டாகப் போகிறதில்லை. ஆனதால் அவன் ஸ்வரூபத்தால் ஜன்ம மரணங்களை அடைகிறதில்லை. ஞானிக்கு ஸ்வரூபத்தில் உற்பத்தி நாசங்களில்லாதபடியால், பந்ததசையிலேயே அவைகளில்லாமலிருக்க முக்திதசையில் அவைகளில்லை என்று சொல்லுவானேன்.

अजः அஜ: :—ஜீவன் தேகத்தை அடைந்திருப்பதால் அவனுக்கு எப்படி உற்பத்தி விநாசங்களில்லை எனின் சொல்லுகிருர்.

अयं அயம் = இந்த ஜீவன்

पुराणः (अपि) புராண: (அபி) = புரம் என்றும் தேகத்தை அடைந்திருந்தாலும், தேகசம்பந்த மடைந்திருந்தாலும்.

अजः அஜ: = சொரூபத்தால் ஜன்மமற்றவன்

नित्यः நித்ய: = ஸ்வரூபத்தால் மரணமற்றவன் (அதாவது நித்தியன்)

शाश्वतः சாஸ்வத:=விகாரமற்றவன்.

ச-பா:—இந்த ஆத்மா இப்படிபிராதபடியால் புராணன் அதாவது விர்த்தியற்றவன் என்பது அர்த்தம்.

न हन्यते...शरीरे நஹந்யதே ... ஶரீரே :—இப்படி யிருப்பதால் (ஜன்மாதிகளில்லாதபடியால்) சஸ்திரம் முதலியவைகளால் சரீரம் கொல்லப்படும்போதும் சரீரத்திலிருக்கும் ஆத்மா ஆகாசம்போல் கொல்லப்படுகிறதில்லை 186. ॥ 47 ॥

வி.பா—नहन्यते நஹந்யதே:—இவனுக்குளப்படி நித்தியத்தன்மை கூடும். சரீரத்தின் உள்ளே இருப்பதால் சரீரம் நசிக்கும்போது இவனுக்கும் நாசம் அவசியம் வரவேண்டியது என்னும் சங்கைக்குச் சமாதானம் சொல்லுகிறார். மேற் சொல்லிய பதங்களுக்கு அர்த்தம் ஸ்பஷ்டம். (பதவுரையைப்பார்க்க) ॥ 47 ॥

துபா:—नहन्यते நஹந்யதே:—(நித்தியமாயிருக்கும் தன்மையை ஸ்பஷ்டமாய்ச் சொல்லுகிறார்.) தேஹம் கொல்லப்பட்டாலும், ஜீவன் ஸ்வரூபத்தால் கொல்லப் படுகிறதில்லை. அவன் அதற்கு வேறாயிருக்கிறான் என்பது கருத்து.

नबभूवकश्चित् நபபூவகஶ்சித் என்பதால் ஸ்வரூபத்தில் ஜன்மாதிகளில்லைஎன்றுசொன்னதானது नजायतनाम्रियते நஜாயதே ந ம்ரியதே என்பதற்குக் காரணமாயிருக்கிறது. அல்லது नबभूवकश्चित् நபபூவகஶ்சித் என்பதால் கிடைத்ததையே अजोनित्यः அஜோ நித்ய: என்பதினால் உபசம்ஹாரம் செய்கிறார்.

பூ:—15-வது மந்திரத்திற் கூறப்பட்டவஸ்து விஷ்ணுஎன்று சொல்லக்கூடாது. ஏனெனின் நஜாயதே என்னும் பிரகிருத மந்திரத்தில் ஜீவனுக்கு ஜனன மரணமில்லாமை கூறப்பட்டிருப்பதால், இந்தப் பிரகரணம் ஜீவவிஷயம் என்று ஏற்படுகின்றது. விபச்சித் நாசமடையாத ஞானஸ்வரூபமுள்ளவன் உண்டாகிறதில்லை, மரிக்கிறதில்லை. நாயம் - இந்த ஆத்மா ஒரு காரணத்தினின்றும் உண்டாகிறதில்லை. இவனிடத்தினின்றும் ஒன்றும் உண்டாகிறதில்லை, ஆனதால் இந்த ஆத்மா நித்தியன். சாஸ்வத := குறைவற்றவன் ஆனதால் புராண: வெகுகாலமாயிருக்கிறவன், பிரகிருதவஸ்து விஷ்ணுவானால் இந்த மந்திரம் பொருந்தாது.

சி:—ஞான முடையவனை குறிப்பிடும் விபச்சித் சப்தத்திற்கு நாசமற்ற ஞானஸ்வரூபமுள்ளவன் என்று, ஞானி அஞ்ஞானி இவ்விருவரையும் பொதுவாய்க் குறிப்பிடுவதாய்ச் சொல்லக் கூடாது.

187. சமானவாக்கியம் :—பகவத்கீதை II-19.

I - 2 - 19 - வது மந்திரம்.

हन्ता चेन्मन्यते हन्तुꣳहतश्चेन्मन्यतेहतं ।
उभौ तौ न विजानीतो नायꣳहन्ति न हन्यते ॥ 48 ॥

ஹந்தா சேந்மந்யதே ஹந்துꣳஹதஶ்சேந்மந்யதே ஹதம்। உபௌ
தௌ ந விஜாநீதௌ நாயꣳஹந்தி நஹந்யதே ॥ 48 ॥

II-I-19-வது மந்திரம்.

அ - கை :—மேற் சொன்ன அர்த்தத்தையே விவரிக்கிறார்

துபா:—மேலும் कुतश्चिन्नजायते குதஶ்சிந் நஜாயதே என்பதாலேயே ஒன்றினிடமிருந்து இந்த ஆத்மா உண்டாகிறதில்லை என்று ஏற்பட்டால், नायं நாயம் என்பது வியர்த்தமாகும். வேறுகாரணமில்லாவிடினும் தன்னிடத்தினின்றும் தானே உண்டாகலாம் என்கிற சங்கை உண்டாகாதபடியால் नबभूवकश्चित् நபபூவகஶ்சித் என்று சொல்லவேண்டியதில்லை. ஏனெனின் பொதுவாய் இந்த ஆத்மாவுக்குக் காரணமில்லை என்பது कुतश्चित् குதஶ்சித் என்பதாலேயே சித்திக்கிறது. விஷ்ணுவைக் குறிப்பிடுவதாய் ஒப்புக்கொள்ளும் எங்கள் மதத்தில் இப்படிப்பட்ட தோஷமில்லை. ஞானமுடையவனுக்கு ஜனன மரணமில்லாமை என்னும் பலம் சொல்லப்பட்டிருப்பதால், மேற்சொல்லிய அசங்கதம் ஏற்படவில்லை.

பூ :—தேகத்தின் உற்பத்தி விநாசம் பகவானுக்கு இல்லாததுபோல், ஞானிக்கு மிராதபக்ஷத்தில் இருவருக்குள் விசேஷம் ஏற்படமாட்டாது.

சி :—உற்பத்தி விநாசமின்மை ஞானிக்கு பகவத்ஞானத்தால் உண்டாகிறது. பகவானுக்கோ அப்படியில்லை.

பூ :—இப்படி ஏன் அர்த்தம் செய்யவேண்டும். ஞானிக்கு ஸ்வரூபத்தில் மட்டும் உற்பத்தி நாசமில்லை என்றும், பகவானுக்கு ஸ்வரூபத்திலும் தேகத்திலும் இல்லை என்றும் ஏன் வியாக்கியானம் செய்யக்கூடாது.

சி :—ஞானி உள்பட சகல ஜீவர்களுக்கும் ஸ்வரூபத்தில் உற்பத்தி நாசங்களின்மை பொதுவாயிருப்பதால், அதைச் சொல்லுவதில் ஞானிக்கு ஒரு விசேஷமுமில்லை. ॥ 47 ॥

I - 2 - 19-வது மந்திரம்.

அ - கை :—நான் கொல்லுகிறேன். இவன் கொல்லப்படுகிறான். என்னும் வியவஹாரத்தால் ஜீவன் கொல்லப்படுவது பிரத்தியக்ஷமே, எனின், இத்தோற்றம் பிராந்தியே என்கிறார்.

சபா:—हन्ता ஹந்தா = கொல்லுகிறவன்

हन्तुं ஹந்தும் = கொல்ல

मन्यतेचेत् மந்யதேசேத் = நினைத்தானாகில்

हतः ஹதஃ = கொல்லப்பட்டவன்

हतं ஹதம் = கொல்லப்பட்டதாக

मन्यतेचेत् மந்யதேசேத் = நினைத்தானாகில்

तौ தௌ = அந்த

उभौ உபௌ = இருவர்களும்

नविजानीतौ நவிஜாநீதௌ = அறிந்தவர்களல்ல.

अयं அயம் = இந்த ஆத்மா

नहन्ति நஹந்தி = கொல்லுகிறதில்லை.

வி-பா :—हन्ता ... हन्तुं ஹந்தா ... ஹந்தும்:—நான் இவனைக்கொல்லப் போகிறேன் என்று தேகமே ஆத்மா என்கிற புத்தியால் நினைத்தால் என்றபடி.

हतः ... हतं ஹத ... ஹதம் :—தேகத்தில் ஒருஅவயவம் சேதிக்கப்பட் டிருக்கும்போது, தேகமே ஆத்மா என்னும் புத்தியால், தான் ஹிம்சிக்கப்பட்டதாய் ஆத்மாவை நினைத்தால்,

उभौ ... विजानीतः :—உபௌ ... விஜாநீதஃ :—(आत्मानं) ஆத்மாநம் ஆத்மஸ்வரூபத்தை இருவரும் அறிந்தவர்களல்ல.

आत्मानं ஆத்மாநம் = ஆத்ம ஸ்வரூபத்தை

न अयंहन्ति ந அயம் ஹந்தி = இவன் கொல்லுகிறதில்லை.

து-பா:—हंता ஹந்தா = கொல்லுகிறவன்

(जीवस्वभावं ஜீவஸ்வபாவம் = ஜீவஸ்வபாவத்தை)

हन्तुं ஹந்தும் = கொல்லுகிறவனாக

मन्यतेचेत् மந்யதேசேத் = நினைத்தால்

हतः ஹதஃ = கொல்லப்பட்டவன்

हतं ஹதம் = தன் ஸ்வரூபம் கொல்லப்பட்டதாக

मन्यतेचेत् மந்யதேசேத் = நினைத்தால்

उभौतौ உபௌதௌ = அவ்விருவரும்

नविजानीतौ நவிஜாநீதௌ = செவ்வையாய் அறிந்தவர்களல்ல. பிராந்தர்கள் என்பது கருத்து. ஏனெனின் வாஸ்தவத்தில் ஜீவ ஸ்வரூபம் நித்தியமா யிருப்பதால் கொல்லுகிறதல்ல, கொல்லப் படுகிறதல்ல என்று நாயம் என்பதினால் சொல்லுகிறார்.

अयं அயம் = கொல்லுகிறவன்

नहन्ति நஹந்தி = பிறனுடைய ஸ்வரூபத்தைக் கொல்லுகிறதில்லை.

ச-பா:—नहन्यते நஹந்யதே = கொல்லப்படுகிறதில்லை.

அ-கை:—ஆத்மா இப்படி[187] யிருந்தும், சரீரமே ஆத்மா வென்று நினைக்கிறவன், "இவனை (ஆத்மாவை) நான் கொல்லுகிறேன்" என்று

हतः ...हतं ஹத: ... ஹதம்:—மற்றொருவன் கொல்லப்பட்டவனாய் "நான் கொல்லப்பட்டேன்" என்று தன்னை அதாவது ஆத்மாவை கொல்லுங்கிரியைக்கு விஷயமாக நினைத்தானேயானால்

उभौ...विजानीतौ உபௌ...விஜாநீதௌ:—இவ்விருவர்களும் தங்கள் ஆத்மாவை அறிந்தவர்களல்ல. ஏனெனின்

नायं...हन्यते நாயம்...ஹந்யதே:—ஆத்மா விகாரமற்றிருப்பதால் ஆத்மா கொல்லுகிறதில்லை. ஆகாசம்போல் விகாரமற்றதாயிருப்பதாலேயே கொல்லப்படுகிறதுமில்லை[188]. ஆனதால்[189] தர்மாதர்மமாயுள்ள சம்சாரம் ஆத்மஞானமில்லாதவனுக்காக ஏற்பட்டிருக்கிறதே தவிர ஆத்மஞானிக்கு அல்ல. சுருதி பிரமாணத்தாலும் நியாயத்தாலும்[190] தர்மாதிகள் இவனிடத்தில் பொருந்தாவாம். ॥ 48 ॥

வி-பா:—(आत्मस्वरूपं ஆத்மஸ்வரூபம் = ஆத்ம ஸ்வரூபம்)

न हन्यते நஹந்யதே = கொல்லப்படுகிறதில்லை.

ஆக்ஷேபம்:—வேதாந்தத்தில் அறியத்தகுந்த பரிசுத்தமான ஆத்மஸ்வரூபவிஷயமாய் எப்படி ஹனனம் முதலியவை சொல்லி, பிறகு இல்லை என்று காண்பிவிக்கலாம்.

உத்தரம்:—இந்த ஆத்மஸ்வரூபமே சரீர சம்பந்தத்தை அடை

துபா:—अयं அயம் = கொல்லப்படுகிறவன்

नहन्यते நஹந்யதே = ஸ்வரூபத்தில் கொல்லப்படுகிறதில்லை. ஆனதால் தேகவிநாசத்தால் இப்படிப்பட்ட பிராந்தி ஏற்படுகின்றது. ॥ 48 ॥

188. அசங்கமாயிருந்தும்.

189. சமானவாக்கியம்:—பகவத்கீதை II-20.

190. ஆத்மா அவிக்கிரியனாயிருந்தால் தர்மாதிகளுக்கு அதிகாரியே யில்லாமல் போவான் சம்சாரமே இல்லாமற்போகும் என்கிற சங்கைக்குச் சமாதானம் சொல்லுகிறார்.

191. "எதை அறியாததினால் பிரவிர்த்தி உண்டாகிறதோ, அதை அறிந்ததினால் பிரவிர்த்தி எப்படி உண்டாகும்" என்கிற நியாயத்தால் ஆத்ம ஞானிக்கு தர்மாதிகள் பொருந்தா. ஆகையால் ஆத்மஞானி எப்போதும் முக்தன், இந்த விஷயத்தில் அடியிற்சொல்லியது சாஸ்திரப்பிரமாணம்:—

I - 2 - 20 - வது மந்திரம்.

अणोरणीयान्महतो महीयानात्मास्य जन्तोर्निहितो गुहायां ।
तमक्रतुः पश्यति वीतशोको धातुप्रसादान्महिमानमात्मनः ॥ 49 ॥

அணோரணீயாந்மஹதோ மஹீயாநாத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோ குஹாயாம் । தமக்ரதுः பஶ்யதி வீதஶோகோ தாதுப்ரஸாதாந்மஹிமாநமாத்மநः ॥ 49 ॥

வி-பா:—ந்திருப்பதால், அதன் பேரில் மேற் சொல்லிய இரண்டும் சம்பவிக்கலாம். இந்த இரண்டு மந்திரங்களையும் சாரீரக சூத்திரத்தில் वियत् விபத் பாதத்தில் **नात्माश्रुतेर्नित्यत्वाच्च** நாத்மாஶ்ருதேர் நித்யத்வாச்ச என்னும் (II-4-17) சூத்திரத்தில் பிரஸ்தாபித்து, ஜீவ ஸ்வரூபத்துக்கு உற்பத்திமுதலியவைகள் இல்லையென்று சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. [இவ்விடத்தில் ஸ்ரீ அரங்கராமானுஜாசாரியார் ஷை சூத்திரத்தின் பூர்வபக்ஷ சித்தாந்தங்களையும் **उत्पत्ति असंभवात्** உத்பத்தி அஸம்பவாத் என்னும் (II - 42) அதிகரணத்தின் பூர்வபக்ஷ சித்தாந்தங்கள், அவைகளின் மேல்வரும் ஆக்ஷேப சமாதானங்கள், இவைகளை விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார், இவைகளை சூத்திர பாஷ்யத்தமிழ் மொழிப்பெயர்ப்பில் விஸ்தாரமாய் சொல்லப் போகிறபடியாலும் பிரகிருத மந்திரார்த்தத்தைத அறிய மிகவும் அவசியமா யிராதபடியாலும், இவைகளை இவ்விடத்தில் எழுதவில்லை.] ॥ 48 ॥

I-II-20-வது மந்திரம்.

அ-கை:—இந்தப்பிரகாரம் இரண்டு மந்திரங்களால் **प्रत्यगात्म** ப்ரத்யகாத்ம (ஜீவ) ஸ்வரூபத்தைச் சோதித்து காண்பிவித்து, அதற்கு அந்தர்யாமியாயிருக்கிற பரமாத்ம ஸ்வரூபத்தை **अणोरणीयान्** அணோரணீயாந் மந்திரத்தால் சொல்லுகிறார்

I - 2 - 20-வது மந்திரம்.

துபா:-அ-கை:—இவ்விதமாக உபதேசிக்கப்பட்ட பிரம்ம ஞானிக்குப் பலனைச்சொல்லி, இனி பிரேதநியாமக பிரம்மத்தைப்பற்றி உபதேசிக்கிறார்.

विवेकीसर्वदामुक्तः कुर्वतोनास्तिकर्तृता ।
अलेपपदमाश्रित्य श्रीकृष्णजनकौयथा ॥

விவேகீஸர்வதாமுக்தः குர்வதோநாஸ்திகர்த்ருதா ।
அலேபபதமாஶ்ரித்ய ஸ்ரீக்ருஷ்ணஜநகௌயதா ॥

அர்த்தம் :—விவேகியானவன் எப்போதும் முக்தன். உலக வியவஹாரத்தை அனுசரித்து கர்மத்தைச்செய்தாலும், ஸ்ரீகிருஷ்ண ஜனகர் இவர்கள்போல் பற்றுதலற்றதால் கர்மத்தைச் செய்கிறவர்களல்ல.

ச-பா.—आत्मा ஆத்மா=ஆத்மா

अणोः அணோ:=சூட்சுமத்தைவிட

अणीयान् அணீயாந்=சூட்சுமமானது.

महतः மஹத:=ஸ்தூலமானதைவிட

महीयान् மஹீயாந்=ஸ்தூலமானது.

अस्य அஸ்ய=இந்த

जन्तोः ஜந்தோ:=பிராணியின்

गुहायां குஹாயாம்=ஹிருதய குகையில்

निहितः நிஹித:=வைக்கப்பட்டிருக்கிறது.

अक्रतुः அக்ரது:=ஆசையற்றவன்

धातुःप्रसादात् தாதுப்ரஸாதாத்=சரீரத்தை தரிக்கும் மனம் முதலிய கரணங்களின் சாந்தியால்

வி-பா:-अणोः அணோ:—சகலசேதநங்களையும்விட சூட்சும்மாயிருக்கிற ஜீவனுக்கும்

अणीयान् அணீயாந் = மிகவும் சூட்சமமானவன் (அதற்குள் பிரவேசிப்பதற்கு யோக்கியன்)

महतः மஹத: :—ஆகாசம் முதலியவைகளுக்கும்

महीयान् மஹீயாந்:—மிகவும் பெரியது. (தன்னால் வியாபிக்கப்படாத வஸ்து இல்லை என்பது கருத்து.

अस्यजन्तोः அஸ்ய ஜந்தோ: :— नजायते நஜாயதே என்னும் மந்திரங்களிற் கூறிய ஜீவனுக்குள் ஆத்மா பிரவேசித்து

து-பா:—आत्मा ஆத்மா = பகவான்

अणोः अणीयान् அணோ: அணீயாந் = அணுவா யிருக்கிறதை விட அணுவானவன்

महतः महीयान् மஹத: மஹீயாந் = பெரியதான வஸ்துவிலும் பெரியவன்.

अस्य அஸ்ய :—மேற் சொன்னதைக் கொஞ்சம் விவரிக்கிறார்

अस्य அஸ்ய=नबभूव நபபூவ (18-வது மந்திரம்)என்பதினால் கூறப்பட்ட அநாதியான (நித்தியமான)

जन्तोः ஜந்தோ: = பரம சூக்ஷ்மமாயிருக்கும் ஜீவனுடைய

गुहायां குஹாயாம்=ஹிருதய குகையில்

निहितः நிஹித:=பிரேரகனாய் இருக்கிறான்

तमक्रतुः தமக்ரது: :—16-வது மந்திரத்தில் ஞானமாத்திரம் கூறப்படவில்லை. ஆனால் அபரோக்ஷஞானம் கூறப்பட்டிருக்கிறது. அந்த அபரோக்ஷ ஞானத்திற்குச் சாதனத்தையும் பலத்தையும் இனி சொல்லுகிறார்.

ச-பா:-तं தம்=அந்த

आत्मनः ஆத்மந: = ஆத்மாவின்

महिमानं மஹிமாநம்=மஹிமையை

पश्यति பச்யதி=பார்க்கிறான்.

वीतशोकः (भवति) வீதசோக:(பவதி)=சோகமற்றவனாகிறான்.

அ-கை :—ஆத்மாவை[191] எப்படி புருஷன் அறிவான் என்பதைச் சொல்லுகிறார்

अणोः...महीयान् அணோ:...மஹீயாந்=சூட்சுமமான சாமை முதலியவைகளைவிட சூட்சுமமானது[192].பூமிமுதலிய பெரிய பதார்த்தங்களைவிட பெரிது. அணுவாகவாவது[193] பெரிதாகவாவது

வி-பா:-ஏவுகிறான் என்பது கருத்து. ஆனதால் மேற்கண்ட இரண்டு மந்திரங்களால கூறப்படும் प्रत्यगात्म ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தைவிட अणोरणीयान् அணோரணீயாந் என்னும்மந்திரத்தில் கூறப்படும் வஸ்து வேறு தான் என்பது சித்திக்கிறது.

து-பா:-अक्रतुः அக்ரது:=அஎன்று பெயருள்ளவிஷ்ணுவினிடத்தில் நிச்சய புத்தியுள்ள அதிகாரி - இந்த பதத்திற்கு ஆசையற்றவன் என்று அர்த்தம் செய்யக்கூடாது, திருஷ்டாதிருஷ்ட பதார்த்தங்களில் வைராக்கியம் பகவானைப்பார்க்க நேரான காரணமாகமாட்டாது.

तं தம்=அணிமாதி குணமுள்ளவனையும்

आत्मनः ஆத்மந: = தன்னைவிட

महिमानं மஹிமாநம்=மஹத்—மானம்=வெகு குணங்களுள்ளவனுயு மிருக்கிற பரமாத்மாவை

धातुः தாது: = சகலத்தையும் தரிக்கும் ஹரியின்

प्रसादात् ப்ரஸாதாத் = பிரசாதத்தால்

पश्यति பச்யதி=பார்க்கிறான், (தியானயோக மூலமாய் சாக்ஷாத் கரிக்கிறான்.)

(ततः தத:=அந்த பிரசாதத்தால்)

वीतशोकः भवति வீதசோக: பவதி=சோகமற்றவனாக ஆகிறான். ॥ 49 ॥

191. இச்சை விடுதல் முதலிய சாதனங்களை விதிப்பதற்காக மேல் மந்திரத்தை ஆரம்பிக்கிறார்.

192. இதே வாக்கியத்தை சுவேதா - உப-III-20-ல் பார்க்க.

193. ஒரே வஸ்துவை அணு வென்றும், மஹத்து என்றும் எப்படி சொல்லலாமெனின், உபாதியை உத்தேசித்து அணு முதலிய வியவஹாரம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, வாஸ்தவத்தில் இல்லை என்கிறார்.

ச-பா:—பிரபஞ்சத்தில் எந்தவஸ்து இருக்கிறதோ அதற்கு நித்தியமான ஆத்மாவே ஸ்வரூபமாயிருக்கிறது. அந்த பதார்த்தம் ஆத்மாவை விட்டுவிலகினால் அசத்தாகின்றது. ஆகையால் இந்த ஆத்மாவே அணுவைவிட அணுவென்றும் பெரிதைவிட பெரிதென்றும் சொல்லப்படுகின்றது. ஏனெனின் சகலநாமரூபகர்மங்களும் ஆத்மாவின் உபாதிகளே.

अस्य...गहायां அஸ்ய... குஹாயாம்=இந்த ஆத்மா 194 பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமுள்ள சகலஜீவர்களின் ஹிருதய குஹையிலும் ஆத்மாவாயிருக்கிறது.

வி-பா:—ஆக்ஷேபம் :—ஹிருதய குஹையைக் கூறுவதாயும், எதினுடைய குஹை என்று சம்பந்தத்தை அபேக்ஷித்துக்கொண்டிருக்கிற **गुहायां** குஹாயாம் என்னும் பதத்தோடு **अस्य** அஸ்ய என்பதை அன்வயிக்கவேண்டுமே தவிர, **आत्मा** ஆத்மா என்பதுடன் அன்வயிக்கக்கூடாது.

உத்தரம் :—காகாக்ஷி நியாயத்தால் (அதாவது காக்கையின் நேத்திரேந்திரியம் இரண்டுகோளகங்களுடனும் சம்பந்தப்படுதல், ஆத்ம சப்தத்தோடும் அன்வயிக்கலாம், **குஹாயாம்** என்பதோடும் அன்வயிக்கலாம். இதில் தோஷமில்லை. பூர்வ தந்திரத்தில் (பூர்வ மீமாம்சையில்) **मूलत: शाखां परिवास्य उपवेषं करोति** மூலத: சாகாம் பரிவாஸ்ய உபவேஷம்கரோதி (கிளியை அடியில்மூடிக்கொண்டு சுற்றுதல்) என்னுமிடத்தில் **மூலத:** என்பது **பரிவாஸத்துடனும் உபவேஷணத்துடனும்** சம்பந்தப் படுவதுபோல் **அஸ்ய ஜந்தோ:** என்பது ஆத்மாவுடனும் **குஹாயாம்** என்பதுடனும் அன்வயிக்கலாம். ஜீவனுடைய ஹிருதய குஹையில் இருப்பதாய்ச் சொன்னாலும், பரமாத்மாவுக்கு ஜீவனினின்றும் பேதம் சம்பவிக்கலாம். ஏனெனின் ஜீவனையே ஜீவனுடைய குஹையிலிருப்பதாகச் சொல்லுவதில் பிரயோஜனமில்லை.

பூ :—ந ஜாயதே என்னும் வாக்கியத்தால் கூறப்பட்ட ஆத்மாவை, உண்டாகும் வஸ்துவைச்சொல்லும் **ஜந்து** சப்தத்தால் குறிப்பிடுவது யுக்தமன்று. ஆனதால் **அஸ்ய ஜந்தோ :** என்னும் பதங்களுக்கு பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களால் அறியப்படும் தேகமே அர்த்தம் என்று சொல்ல வேண்டியது. அதின் குஹையிலிருக்கும் ஆத்மாவை முன் மந்திரத்தில் பிரஸ்தாபிக்கப்படும் ஜீவனை ஒப்புக்கொள்ள வேண்டும்.

194. சகலத்திற்கும் அதிஷ்டானமா யிருப்பதால் சகலமும் ஆத்மாவாயிருக்கிறது என்கிறார்.

வி-பா:-சி :—நான் கர்த்தா, நான் போக்தா என்று எப்போதும் தோன்றும் ஜீவனை

(1) कस्तं मदामतंदेवं मदन्योज्ञातुमर्हति ॥ (1-2-21)

(2) क इत्थावेदस: I-2-25.

கஸ்தம் மதாமதம் தேவம் மதந்யோ ஜ்ஞாதுமர்ஹதி ॥I-2-21॥

க இத்தாவேதஸ: I-2-25.

என்னும் இனி வரும் மந்திர சந்தர்ப்பங்களால் அறியக்கூடாதவன் என்று எப்படி சொல்லலாம்.

பூ:—ஜீவனை கர்த்திருத்வம் முதலிய தர்மங்களோடு கூடினவனாய் எல்லாரும் அறிந்திருந்தாலும், முக்தனால் அடையப்படும் பிரம்ம ஸ்வரூபத்துடன் கூடினவனாக அறியமாட்டார்கள் என்று சொல்லலாம்.

